
தமிழீழ ஆவணக் காப்பகம்

# எரிமலை

மார்ச் 1998



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

## அக்கறைப் பூக்கள்

அன்புடையீர்!

தங்களின் 'எரிமலை' இதழ் கண்டேன். பெயருக்கு ஏற்றாற்போல் ஒவ்வொரு பக்கமும் எரிமலையாக வெடிக்கும் செய்திகள் கண்டு ஆச்சரியம். தமிழீழத்தில் நடைபெறும் செய்திகளை அழகாக தருவது நன்று. போராளிகளின் தியாக உணர்வை நினைக்கும் போது நெஞ்சை நெகிழ வைக்கின்றது. இதழை தொடர்ந்து எனக்கு அனுப்பிவைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

Dr. கோவிந்தராஜன்
புதுக்கோட்டை
தமிழ்நாடு

★★

தமிழ்த்திரு எரிமலை ஆசிரியர் அவர்களுக்கு,

அய்யா வணக்கம்.

வி. காமராஜ் எழுதும் கடிதம் இருண்டு கிடந்த வீட்டிற்கு ஒளி விளக்கு ஏற்றிவைத்தது போல் எனக்கு உங்கள் எரிமலை கிடைத்தது.

தமிழ் இனவுணர்வு அற்று இருப்பவர்கள் இங்கே அதிகம். ஆனால், தமிழ் இனத்திற்காக தன்னுடைய உயிரையும் தரக்கூடிய நண்பர்கள் ஒரு சிலர். அந்த ஒரு சிலரில் நானும் ஒருவன்.

அறிவுபூர்வமான செய்தி, உண்மைச் செய்தி – இவற்றை அறிந்தால் தெளிவடைவான் மனிதன் என்ற எண்ணத்தினாலேயே இங்கே உள்ள செய்தி நிறுவனங்கள், அரசாங்கம் உட்பட உண்மைக்கு மாறான செய்திகளையே வெளியிடுகிறது. குறிப்பாக ஈழச்செய்தியை தணிக்கை செய்து வெளியிடுகிறது சிங்கள இரத்தவெறி பிடித்த அரசாங்கத்திற்கு ஆதரவாக.

அப்படிப்பட்ட சூழ்நிலையில் தான் ஒரு உண்மையான செய்தி இதழ் எனக்குக் கிடைத்தது. அது தான் எரிமலை. அது என் கையில் கிடைத்ததும் அளப்பரிய மகிழ்ச்சி என் உள்ளத்தில்.

தமிழ் ஈழத்தின் தேசிய தலைவன் மட்டும் அல்ல வே. பிரபாகரன். பத்துக்கோடி தமிழனுக்கும் ஒரு ஒப்பற்ற தலைவன் பிரபாகரன் என்று சொன்னால் அது மிகையாகாது.

அந்த மாவீரனின் பாதத்தை தண்ணீரில் கழுவி இங்குள்ள உணர்வு அற்று இருக்கக்கூடிய தமிழனுக்கு




தினமும் மூன்று வேளை சாப்பிடச் செய்யவேண்டும். அப்படிச் செய்தால் கட்டாயம் உணர்வு வரும்.

உங்களுடைய எரிமலை புத்தகம் எனக்கு வேண்டும் அதற்கு நான் என்ன செய்யவேண்டும். தயவுசெய்து விளக்கம் எழுதவும்.

ஈழவிடுதலை இல்லை என்றால் எதிர்காலத்தில் எங்களை மூட்டைப் பூச்சியைப் போல் நசுக்கி அழித்து விடும் இந்த இந்திய அரசாங்கம். உங்கள் ஈழநாட்டு விடுதலை எங்களுக்கு மிக முக்கியம்.

வி. காமராஜ்
முத்தையர்பாளையம்
புதுச்சேரி

★★

அன்புடையீர் வணக்கம்!

நவம்பர்–97 எரிமலை நண்பர் மூலம் கிடைக்கப் பெற்று படித்தேன். மாவீரர்கள் மரணித்தது தமிழீழ விடுதலைக்கு மட்டுமன்று. உலகத் தமிழின விடுதலைக்காகவும் என்பதை உலகத் தமிழ் மக்கள் உணர்ந்து, தமிழீழம் மலர உறுதுணையாக இருக்க வேண்டும். யாழ்ப்பாண தமிழ் மக்கள் இன்னும் சந்திரிகா என்ற பேயின் வாக்குறுதிகளை நம்பி வாக்களிப்பில் கலந்துகொண்டது தமிழின உணர்வாளர்களுக்கு வருத்தத்தையே அளிக்கிறது. ஜே.வி.பி. இயக்கம் அழிக்கப்பட்டதில் தேசிய புலனாய்வு பணியகத்தின் பங்கு பற்றி அறிந்தபோது மிக்க அதிர்ச்சியே உண்டானது. உலகப் புரட்சிகர இயக்கங்கள் கற்றுக் கொள்ள வேண்டிய படிப்பினை.

வெல்க புலிகள்! மலர்க தமிழீழம்

அன்புடன்
மு. முனிராசு
மூங்கம்பட்டி

★★

எரிமலை ஆசிரியர் அவர்கட்கு வணக்கம்.

நான் தங்கள் பத்தரிகை வாசகர்களில் ஒருவன். வாசிப்பதோடு மட்டுமல்லாமல் எழுதவேண்டும் என்ற ஆர்வமும் உள்ளவன். கதைகள், கவிதைகள் எழுதுவது எனது பொழுது போக்காக இல்லாமல் இவற்றின் மூலம் ஏதாவது சொல்லிவிட வேண்டும் என்று நினைப்பவன். எனது ஆக்கங்களுக்கு எரிமலையில் களம் அமைத்துத் தருவீர்களா?

சி. பிரபாகரன்
பிரான்ஸ்

★★

எரிமலை ஆசிரியர் அவர்கட்கு வணக்கம்.

நாங்கள் தாங்கள் அனுப்பும் எரிமலை புத்தகத்தை ஆவலுடன் படித்துக்கொண்டு இருந்தோம்.

அது இன்று வரும் நாளை வரும் என்று காத்துக்கொண்டு இருந்தோம். ஆனால் சுமார் இரண்டு மாதம் மூன்று மாதமாக வரவில்லை. என்ன காரணம் என்று தெரியப்படுத்துங்கள்.

நாங்கள் எரிமலையின் மூலம் பல செய்திகளையும், உங்கள் இயக்கத்தின் பல கொள்கைகளையும் அறிந்து கொள்கிறோம். நாங்கள் அறிந்து கொண்டதை மற்றவர்களுக்கும் தெரியப்படுத்துகிறோம். ஒரு சிலருக்கு புத்தகத்தைக் கொடுக்கிறோம். அதன் மூலம் உங்கள் இயக்கத்தின் நோக்கம் பலர் புரிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. எரிமலை மூலம் தற்கொடையாளர்கள், கடற்புலிகள் குறித்தும் அறிந்துகொள்கிறோம். அந்த வாய்ப்பு இரண்டு மாதமாகத் தடைப்பட்டுப் போனது குறித்து மிக வருந்துகிறோம்.

பாரதிதாசன்
தமிழ்நாடு

★★

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# உள்ளே....




திருப்புமுனை ஒன்றைத்
தேடி நிற்கும்
ஜெயசிக்குறு படையணி
– பக்கம் 04



வட கடற்பரப்பில்
பெரும் சமர்
– பக்கம் 07



புலிகள் மீதான தடை
– பக்கம் 16



உடைந்துபோன ஒப்பந்தமும்
உறுதிதளராத புலிகளும்
– பக்கம் 18



தென்னாசியாவின் புவிசார் அரசியல்
– பக்கம் 29

சுயநிர்ணய உரிமையை
மறுக்க சுயநிர்ணயத்தைத்
தொலைக்கும் சிங்கள
ஆட்சியாளர்கள்
– பக்கம் 23



ஆக்கிரமிக்க
முற்பட்டவர்களுக்கு
காலம் தந்த பரிசு
– பக்கம் 10





ஒப்பரேசன் ஜெயசிக்குறு
பார்பறோசாவை
நினைவூட்டுகிறதா?
– பக்கம் 13

★ கிரக மாற்றம் + புதுவருடம் = கைது
– பக்கம் 12

★ இலங்கைத் தீவின் தமிழர் பிரச்சினை
பயங்கரவாதமல்ல.
நான்கு கட்ட வளர்ச்சிகளைக் கொண்ட
அரசியல் பிரச்சினை
– பக்கம் 25

★ தப்பியோடும் இராணுவத்துக்கு
மீண்டும் மீண்டும் ஏன் இந்த அழைப்பு
– பக்கம் 32

★ அழியா ஞாபகங்களோடு புதிய கனவும்
– பக்கம் 34

★ மேஜர் ஜெனரல் செனவிரட்ண போன்று
சிறிலால் விஜயசூரியவும் ஓரங்கட்டப்படுவாரா?
– பக்கம் 42

★ பதுங்குகுழி நீ உறங்குமிடம்
– பக்கம் 44

★ நாட்டுக்குப் பொன்விழா
வெற்றி உறுதிக்கு?
– பக்கம் 47




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



விடுதலை என்பது ஒரு தேசியக் கடமை. இதில் ஒவ்வொருவருக்கும் பங்களிப்புண்டு. இந்த நெருக்கடியான காலகட்டத்தில், முழுச் சமுதாயமுமே பேரழிவை நோக்கிய இச் சூழ்நிலையில், எம்மத்தியில் சுயநல உணர்வுகள் களையப்பெற்று சமூக உணர்வு பிறக்கவேண்டும். பணத்தை முடக்காமல், உணவுப் பண்டங்களை பதுக்காமல், தான் வாழ்ந்தால் போதும் என்ற தன்னலம் கருதாமல் வசதி படைத்தோர் வசதியற்றோருக்கு உதவ வேண்டும். பணம் படைத்தோர் பட்டினி கிடப்பவர்களுக்கு உதவ வேண்டும். இது ஒரு தேசிய நெருக்கடி. இந்நெருக்கடியில் பிறக்கும் துன்பத்தை முழுத் தேசிய இனமுமே பகிர்ந்துகொள்ள வேண்டும்.

இந்தத் தேசியச் சுமையைச் சமூகத்தின் அடிமட்டத்திலுள்ள ஏழைகள் மட்டும் தாங்கிக்கொள்ள அனுமதிப்பது நாம் எமது தேசத்திற்குப் புரியும் துரோகம் என்றே சொல்லவேண்டும். நாம் ஒரு தேசிய விடுதலை இராணுவத்தை கட்டியெழுப்பி வருகின்றோம். ஆயிரக்கணக்கில் இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்தல், ஆயுதம் தரித்தல், கெரில்லா படையணிகளைப் பராமரித்தல் போன்ற எமது பாரிய போர்த்திட்டத்திற்குப் பெருமளவில் நிதி அவசியம் என்பதை நான் விளக்கத் தேவையில்லை. இந்த நோக்கில்தான் தேசிய பாதுகாப்பு நிதித் திட்டமொன்றை நாம் உருவாக்கினோம். இந் நிதி தமிழீழத்திலும், வெளிநாடுகளிலும் திரட்டப்படும். இந்நிதிக்கு குறிப்பாக வெளிநாடுகளில் வதியும் தமிழீழத் தேசாபிமானிகள் தம்மாலான உதவியைச் செய்யுமாறு அன்புடன் வேண்டிக்கொள்கிறேன். உறுதியாக ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன்: தமிழீழம் என்றோ ஒருநாள் உதயமாவது திண்ணம். எமது மக்களாகிய நீங்கள் விடிவு பெறுவது திண்ணம். சமதர்ம சமூகமாக எமது நாடு வளங் கொளிப்பது திண்ணம். இந்த நம்பிக்கையில் ஆன்ம உறுதி தளராது விடுதலைப் பாதையை நோக்கி வீறுநடை போடுவாமாக.


**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்
*1984ம் ஆண்டு தமிழீழ மக்களுக்கு விடுத்த அறிக்கையிலுருந்து...*



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




கலை பண்பாட்டு

அரசியல் சமூக ஏடு

★

பதினைந்தாம் ஆண்டு

மார்ச் 1998

★

ஆக்கங்கள்

அபிப்பிராயங்கள்

மற்றும் தொடர்புகட்கு

★

**எரிமலை**

தாய்மண் வெளியீடு

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு

*C/O T.C.C-France,*

*341, Rue des Pyrenees,*

*75020 Paris.*

*Tel: 01 - 43 58 11 42*

# உலகப் பெண்கள் தினம் - தமிழ் பெண்

மற்றுமொரு பெண்கள் தினம் உலக நாட்காட்டிகளில் "வந்து போய்விட்டது". பெண்களின் மேம்பாட்டிற்காகவும் பால்ரீதியான ஒடுக்குமுறைகளைக் களையவும் சர்வதேச சமூகம் "அனுட்டிக்கும்" இம் மார்ச்—8 பெண்கள் தினம் பல்வேறு நாடுகளில் ஒரு சம்பிரதாயபூர்வ அனுட்டானமாகிவிட்டது. ஆனால், உயிர்வாழ்வதற்கே போராடும் தமிழீழ சமூகத்தில் இது அர்த்தமுள்ளதாக எழுச்சியுடன் பிரகடனப்படுத்தப்பட்டு வருகின்றது.

பெண் ஜனாதிபதியும் – பிரதமரும் தலைமைதாங்கும் சிங்கள இனவாத அரசு பெண்கள் மீதான பாலியல் வன்முறைகளை போருக்கான ஒரு ஆயுதமாக தமிழருக்கு எதிராகப் பயன்படுத்தி வருகின்றது. கிருஷாந்தி, கோணேஸ்வரி முதல் அண்மையில் இனவாத எதிரியினால் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்ட வாய்ப்புலன் – செவிப்புலன் இழந்த தமிழ்ப் பெண் வரை அனைவரும் இச் சிறீலங்க போர்த் தந்திரோபாயத்தின் கொடும் கரங்களின் சாட்சியங்களாகும். யாழ்குடாவில் தன் இராணுவத்தினரால் பாலியல் வன்முறைக்குட்படுத்தப்பட்ட வாய்ப்புலன் – செவிப்புலன் இழந்த தமிழ்ப் பெண்ணின் குற்றச்சாட்டுக்களை மறுத்து சந்திரிகா அரசு விடுத்திருந்த செய்தியானது அதனது கொடிய பாசிச முகத்தை வெளிக்காட்டுகின்றது. அப்பெண்ணின் பிரத்தியேகப் பாகத்தில் கட்டுக்கடங்காத இரத்தோட்டம் இருந்தது. ஆனால், அது பாலியல் வன்முறையினால் ஏற்பட்டது என்பதற்கு ஆதாரம் இல்லையென சந்திரிகாவின் யாழ். தளபதி மேஜர் ஜெனரல் பாலகெல விடுத்த அறிவிப்பானது எம் பெண்களின் நாளாந்த வாழ்வு எவவாறு அச்சுறுத்தப்பட்டு வன்முறைக்குள்ளாக்கப்படுகின்றது என்பதற்கான சான்றாகும்.

ஆனால், இதன் மறுபுறத்தே இன்றைய தமிழ்ப் பெண்கள் பிரபாகரன் தலைமுறையினைப் பிரதிபலிக்கும் தலைமுறையாக உருவாகிவருகின்றனர். ஆணுக்கு நிகராக ஆயுதம் தூக்கிப் போராடுவதிலும், தம்மீதான சமூக அடக்குமுறைகளுக்கு சாவுமணி அடிப்பதிலும் அந்தப் பிரபாகரத் தலைமுறையின் கூரியப் பார்வையும் சாதுரியமும் உருக்குறுதியும் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது. இதுதான் புதிய தமிழ்ப் பெண்ணினம்.

இதன் பிரதிபலிப்புக்கள் புலம் பெயர்ந்து வாழும் தமிழ்ப் பெண்களிடமும் ஏற்பட வேண்டும். நாம் உயிர்வாழப் போராடும் ஓர் இனம் என்பதும் நாம் பெறப்போகும் விடுதலை தனித்து இனத்துக்கான விடுதலை மட்டுமல்ல சமூக விடுதலைக் குறிக்கோள்களைக் கொண்டதும் என்பதைத் தெளிவாகப் புரிந்திருக்க வேண்டும். புலம்பெயர்ந்து வாழும் தமிழ்ப் பெண்கள் தமது சமூக உறவுகளிலும் எதிர்காலம் பற்றிய பார்வையிலும் மாற்றங்களைப் புகுத்த வேண்டிய தருணம் இது. பாரம்பரிய தமிழ்ப் பெண் போன்று அனைத்துக் கொடுமைகளையும் சகித்துக்கொண்டு அதன் தாக்கங்களை ஆரோக்கியமற்ற சமூக உருவாக்கத்திற்குப் பாவிக்கும் மனோபாவம் மாற்றப்பட்டு தமிழீழத்தில் உருவாகும் புதிய தமிழ்ப் பெண்ணோடு புலம்பெயர்ந்து வாழும் தமிழ்ப் பெண் கரம் சேர்க்க வேண்டும்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

## முன்னோக்கி நகர்ந்தால் பெரும் ஆளணி அழிவு பின்நோக்கி நகர்ந்தால் கௌரவக் குறைச்சல்!



Operation Jaya Sikurui: demonstrating skills

# திருப்புமுனை ஒன்றைத் தேடிநிற்கும் ஜயசிக்குறு படை நடவடிக்கை

பெப்ரவரி மாதத்தில் சிறீலங்கா ஆயுதப் படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட இரு தாக்குதல்களும், இரு பதிலடி நடவடிக்கைகளும் 'ஜயசிக்குறு' துருப்புக்கள் மீது நிர்ப்பந்தங்களைத் திணிப்பதாகவே உள்ளன. இது ஒரு வகையில் சிறீலங்காப் பாதுகாப்பு அமைச்சினைப் பெரும் நெருக்கடி ஒன்றிற்குள் தள்ளியுள்ளது என்று கூறுதல்கூட மிகையானதாக இருக்கமாட்டாது.

இம்மாதத்தில் விடுதலைப் புலிகள் நான்கு பெரிய மோதல்களில் ஈடுபட்டுள்ளனர். இதில், இரண்டு விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கைகளாகும். ஒன்று கிளிநொச்சி படைத்தளத்தின் மீதான தாக்குதலாகும். இரண்டாவது, கடற்புலிகள் பருத்தித்துறை – காங்கேசன்துறை கடற்பரப்பில் மேற்கொண்ட நடவடிக்கையாகும்.

இவ்விரண்டு தாக்குதல்களும் சிறீலங்கா இராணுவத் தரப்பிற்கு பெரிய அளவினதான ஆளணி மற்றும் தளபாட இழப்புக்களை மட்டும் ஏற்படுத்தவில்லை. இன்று வடபகுதிப் போர் முனையில் சிறீலங்கா ஆயுதப் படையினர் கைக்கொள்ளும் யுத்த தந்திரோபாயம், யுக்தி என்பனவற்றையே கேள்விக்குரியதாக்கியுள்ளன எனலாம்.

ஒருபுறம் – யாழ் குடாநாட்டில் நிலைகொண்டிருக்கும் சிறீலங்கா ஆயுதப் படையினரின் பிரதான விநியோகப் பாதையான கடல்வழிப்பாதை பெரிதும் நெருக்குதலுக்கு உள்ளாகியுள்ளது. இந்நிலையில் தொடர்ந்தும் கடல்வழியாக விநியோகத்தைப் பாதுகாப்புடன் மேற்கொள்ள முடியுமா? என்ற கேள்வியை கடற்புலிகளின் தாக்குதல் ஏற்படுத்தியுள்ளது.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அடுத்ததாக, கிளிநொச்சிப் படைத்தளத்தின் மீது மேற்கொண்ட தாக்குதலும் – கிளிநொச்சி நகரின் மையப்பகுதி உட்பட ஒரு பகுதியை விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தமையுமாகும். இதன் மூலம் தரைவழிப்பாதைக்கான யுத்தத்தை மேலும் மேலும் விடுதலைப் புலிகள் நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளதோடு, தரைவழிப் பாதையில் இராணுவம் போரிடும் நீளத்தை இன்னும் சில கிலோ மீற்றர்களினால் அதிகரிக்கவும் செய்துள்ளனர்.

இவ்விரு தாக்குதல்களின் விளைவுகள் பற்றி மறுவளமாகக் கூறுவதானால், 'ஜயசிக்குறு' துருப்புக்கள் மீது தாக்குதல் எதையும் மேற்கொள்ளாமலேயே ஜயசிக்குறுத் துருப்புக்களுக்கு தரைவழிப்பாதைக்கான யுத்தத்தில் ஒரு வகையில் அழுத்தத்தைக் கொடுத்துள்ளனர் எனலாம். இவ் அழுத்தமானது ஒரு வகையில் பார்க்கையில் எதிர்மாறானதாகக் கூடத் தெரியலாம். அதாவது தரைவழிப்பாதை திறக்க வேண்டிய அவசியத்தையும், இதில் காலதாமதம் ஏற்படுவது பாதகமான விளைவுகளை உருவாக்கக் கூடியதாகவே இருக்கும் என்பதையும் அவர்களுக்கு உணர்த்தக்கூடியதாகவுமே உள்ளது எனலாம். ஆனால், உண்மையில் புலிகளின் இத்தாக்குதல்கள் இராணுவத்தை நெருக்கடிக்குள் தள்ளுபவையாகவே உள்ளன.

இவைதவிர விடுதலைப் புலிகள் இப் பெப்ரவரி மாதத்தில் மேற்கொண்ட மற்ற இரு தாக்குதல்களும் 'ஜயசிக்குறு' துருப்புக்களின் தாக்குதலுக்கான பதிலடி நடவடிக்கைகளாகும். அதாவது மன்னகுளம் பகுதியில் இருந்து மூன்றுமுறிப்பு நோக்கி நகர முற்பட்ட இராணுவத்தினர் மீதும், கரிப்பட்டமுறிப்பில் இருந்து ஒழுமடு நோக்கி நகர முற்பட்ட 'ஜயசிக்குறு' படையினர்மீதும் மேற்கொண்ட பதிலடித் தாக்குதலுமாகும்.

இவ்விரு பதிலடி நடவடிக்கையின் போது விடுதலைப் புலிகள் இராணுவத்தினரின் முயற்சிகளை முறியடித்ததோடு, இராணுவத்தினருக்குக் கணிசமான உயிரிழப்புக்களையும் கொடுத்தனர். இச்சமர்களின்போது இழந்த தமது சகாக்களின் சடலங்களைக் கூட மீட்கக் கூட முடியாத நிலையில் இராணுவம் பின்வாங்கியதானது இம் மோதல்களில் இராணுவம் புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுத்துப் போரிடமுடியாத நிலையிலேயே பின்வாங்கியது என்று கொள்ளுதல் சரியானதே.

ஆனால், இவ்விரு தாக்குதல் நடவடிக்கைகளையும் இராணுவம், புலிகளின் முதலில் கூறப்பட்ட தாக்குதலின் எதிர் விளைவாகவே மேற்கொண்டும் இருந்தது. அதாவது கிளிநொச்சித் தாக்குதலின் எதிர்விளைவாக மூன்றுமுறிப்பு நோக்கிய நகர்வும் கடற்புலிகளின் தாக்குதலைத் தொடர்ந்து ஒழுமடு நோக்கிய



நகர்வும் மேற்கொள்ளப்பட்டதெனலாம். ஆனால், இவ்விரு தாக்குதல்களும் முறியடிக்கப்பட்டமையானது 'ஜயசிக்குறு' துருப்புக்கள் தரைவழிப் பாதைக்கான போரில் இலகுவில் வெற்றி ஈட்டிவிட முடியாது என்பதை வெளிக்காட்டுவதாக உள்ளது.

யாழ் குடாநாட்டிற்கான தரைவழிப் பாதையைத் திறப்பதற்கான நடவடிக்கை இலகுவானதாக இருக்கப்போவதில்லை என்பது இந்நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட சிறிது காலத்திற்குள்ளேயே புரிந்து கொள்ளப்பட்டதொன்றுதான். இதனைப் பிரதிபலிக்கத்தக்கவாறு இராணுவ அதிகாரிகளே தமது கருத்துக்களையும் வெளியிட்டும் உள்ளனர்.

இந்த வகையில் பார்க்கையில் இராணுவத்தினரின் நகர்வுகளும் இதற்கு ஏற்ற விதத்திலேயே திட்டமிடப்படுபவையாகவுமே இருந்துள்ளன. இதனைச் சில களத் தகவல்களைக் கொண்டும் ஊர்ஜிதம் செய்யக்கூடியதாகவே உள்ளது. எடுத்துக்காட்டாக, இராணுவத் தரப்பின் சுடுதிறன் அதிகரிக்கப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டமுடியும்.

ஆரம்பம் முதலே 'ஜயசிக்குறு' நடவடிக்கையில் இராணுவத் தரப்பு பெரும் ஆளணி இழப்பைச் சந்தித்த வண்ணமே இருந்தது. இந்த நிலையில் ஆளணி இழப்பைத் தவிர்க்கும் முகமாக இராணுவத்தினரின் சுடுதிறன் அதிகரிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளவும்பட்டது. இதனைக் கடந்த டிசம்பரில் மன்னகுளத் தாக்குதலின் போதும் இம்மாதத்தில் மூன்றுமுறிப்பு நோக்கிய நகர்வின் போதும், ஒழுமடு நோக்கிய முயற்சியின் போதும் அவதானிக்கக் கூடியதாகவே இருந்தது. இதனைக் கடந்த செவ்வாய்க் கிழமை ஒழுமடு நோக்கிய முயற்சியின் போது 'ஜயசிக்குறு' துருப்புகளிடம் இருந்து விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுததளபாடங்களே நிரூபிப்பனவாகவே உள்ளன. அதாவது அண்ணளவாக *50* இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகக் கருதப்படும் இம்மோதல்களின் போது புலிகள் கைப்பற்றிய ஆயுத தளபாடங்களில், *15* ஆயுதங்கள் தனி நபர் பயன்படுத்தும் இலகு இயந்திரத் துப்பாக்கிகள் ஆகும். அத்தோடு ஐந்து *40* எம். எம். பிஸ்டல்கள் எனப்படும் எறிகணை செலுத்திகளாகும். இவை நகரும் இராணுவ அணிகளின் உயர் சுடுகலன்களின் செறிவைக் காட்டுபவையாகவே உள்ளன.

அதாவது, முன்னணிப்படைகளின் சுடுதிறனானது சாதாரண ஓர் படையணியின் சுடுதிறனைவிட மிக உயர்ந்தளவில் அதிகரிக்கப்பட்டுள்ளது என்பதே இதன் வெளிப்பாடாகும். அதாவது, மூன்று பேருக்கு ஒருவர் என்ற ரீதியில் இலகு இயந்திரத் துப்பாக்கியைப் பயன்படுத்துவதாக அனுமானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

ஆனால், இவ்வாறான முயற்சிகள் கூட, 'ஜயசிக்குறு' படையினருக்கு அனு



www.tamileelamarchive.com

கூலமளிக்கவில்லை என்றே மதிப்பிட வேண்டியுள்ளது. வேறுவகையில் கூறுவதானால் – அவர்களுக்கு இராணுவ ரீதியில் இன்று அதிகரித்துவரும் அழுத்தங்களில் இருந்து விடுபட உதவுவதாக இருக்கவில்லை என்றே கூறலாம்.

இவ்வாறாக இராணுவ ரீதியிலான நிர்ப்பந்தங்கள் ஒருபுறம் அதிகரித்துக் கொண்டிருக்கையில் – அரசியல் ரீதியிலான நிர்ப்பந்தங்களும் இராணுவத் தலைமைப்பீடத்திற்கு இல்லாமலில்லை.

லும் இல்லை. சித்திரைப் புத்தாண்டிற்கு முன்னர் யுத்தத்தில் வெற்றிபெற்றுவிடுவோம் எனத் தெரிவித்த அவர் அந்த மகிழ்ச்சியைக் கொண்டாடும் விதத்தில் சித்திரைப் புத்தாண்டில் 'கிரிபத் – பால் சோறு' சாப்பிடுவோம் எனவும் தெரிவித்திருந்தார்.

ஆகையினால், எவ்வகையிலேனும் தரைவழிப்பாதையைத் திறந்துவிடுவதற்கான முயற்சியை மேற்கொள்ளுமாறு இராணுவத் தலைமையை அரசாங்கம்

**விடுதலைப் புலிகள் மீது இராணுவ ரீதியில் பெரும் அழுத்தம் கொடுக்கும் வகையிலும், யாழ். குடாநாட்டிற்கான தரைவழிப்பாதை ஒன்றைத் திறப்பதற்குமான 'ஜயசிக்குறு' படை நடவடிக்கை இன்று ஒரு நெருக்கடி நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. முன்னோக்கி நகர்ந்தால் பெரும் உயிர் அழிவு - பின்நோக்கி நகர்ந்தால் கௌரவ இழப்பு என்ற ரீதியில் இந்நடவடிக்கை ஓர் திருப்புமுனையினை எதிர்பார்த்து நிற்கின்றது. ஆனால், விடுதலைப் புலிகளோ 'ஜயசிக்குறு' நடவடிக்கையை மேலும் மேலும் கடினமாக்கும் பணியில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றனர்.**



ஏற்கனவே, பெப். 04–ம் திகதிக்கு முன்னதாக தரைவழிப்பாதை திறக்கப்படும் என அறிவித்திருந்த ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசாங்கம் அதன் பின்னர் சித்திரைப் புத்தாண்டிற்கு முன்னராவது இத்தரைவழிப்பாதையைத் திறந்துவிடுதல் வேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டுள்ளது.

இதனைப் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த பிரதிபலிக்காமல் வற்புறுத்த முனைவதும் ஆச்சரியமானதல்ல. அதிலும், கடல் வழி விநியோகம் பெரிதும் கேள்விக்குள்ளாகியுள்ள நிலையில் – ஏற்கனவே தொடங்கிவிட்ட தரைவழிப்பாதைக்கான நடவடிக்கையைத் தீவிரமாக்குவதன் மூலம் இந்நெருக்கடியில் இருந்து விடுபடவும் அரசியல் தலைமைப்பீடம் ஆர்வம் கொண்டுள்ளது. ஆனால், இது 'ஜயசிக்குறு' துருப்புக்களுக்குப் பெருமளவு அழுத்தம் கொடுக்கும் ஒன்றாகவே நிச்சயம் இருக்கும்.

ஏனெனில், இன்றைய நிலையிலும் "ஜயசிக்குறு" துருப்புக்களோ முன்னோக்கி நகர முடியாமலும், பின்னோக்கி நகர முடியாமலும் உள்ளன என்றே கூறுதல் வேண்டும். மறுவளமாகக் கூறுவதானால் 'ஜயசிக்குறு' துருப்புக்களுக்குகள நிலைமை சாதகமான நிலையில் இல்லை என்றே கூறுதல் பொருத்தப்பாடானதாகும்.

ஏனெனில், முன்னோக்கி நகருதல் என்பது பெரும் உயிர் இழப்பிற்கு வழி சமைக்கும் ஒன்றாகவே மாறிவிட்டதாகியுள்ளது. அதாவது, தாக்குதல் நடவடிக்கையின் பலனாக பிரதேசம் கைப்பற்றப்பட்டுகின்றதோ இல்லையோ இராணுவம் பெரும் உயிரிழப்பை தவிர்க்கமுடியாது சந்தித்து ஆக வேண்டியே வரும் என்பது உறுதியாகியுள்ளது. இது ஒப்பீட்டு ரீதியில், இலாபத்தினை விட கஷ்டமானதாகவே இருக்கும்.

இந்த ரீதியில் "ஜயசிக்குறு" நடவடிக்கையானது பெரும் நெருக்கடிக்கட்டத்திற்குள் வந்துள்ளது என்றே கூறுதல் வேண்டும். இதனையோர் திருப்புமுனையை எதிர்பார்த்து "ஜயசிக்குறு" படை நடவடிக்கை உள்ளது எனக் கூறுதல்கூடப் பொருத்தமானதாகும். அதாவது, பெரும் இழப்புக்கள் – அழிவுகள் என்பனவற்றைப் பொருட்படுத்தாது பெரும் தாக்குதலை விடுதலைப் புலிகள் மீது நடாத்தி தரைவழிப்பாதையைத் திறப்பதற்கு முற்படுவதா? அன்றி உயிரிழப்பைத் தவிர்க்கும் பொருட்டு 'ஜயசிக்குறு' துருப்புக்களை தற்பாதுகாப்பு நடவடிக்கையில் வைத்துக் கொள்ளவதுடன் நின்று கொள்வதா என்பதே அதுவாகும்.

ஆனால், இவ்விரண்டு வழிமுறையிலும் இராணுவத் தலைமையினால் அனுகூலத்தைப் பெற்றுக்கொண்டுவிட முடியாது. அத்தோடு, அரசியல் தலைமையினால் இவ்விரண்டு வழிமுறைகளையும் பரிசீலிக்கவும் முடியாது. எவ்வளவு இழப்புக்கள் ஏற்பட்டாலும் தரைவழிப்பாதை திறப்பதற்கான நடவடிக்கைகளைத் தொடரவும் எவ்வளவு விரைவில் திறக்கப்பட முடியுமோ அதனை விரைவில் திறக்கவுமே அரசியல் தலைமை விரும்புகின்றது. ஏனெனில், அவர்களுக்கு இன்று இந்நடவடிக்கை கௌரவப் பிரச்சனையாகவும், தமது ஆட்சி அதிகாரத்தை தக்க வைப்பதற்கான அவசிய தேவையானதொன்றாகவும் மாறிவிட்டது.

**— ஜெயராஜ்**



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# வட கடற்பரப்பில் பெரும் சமர்

## கடற்புலிகள் கொடுத்த பலத்த அடி!



பருத்தித்துறை – காங்கேசன் துறைக் கடற்பரப்பில் பெரும் கடற்சமர் ஒன்றை கடற்புலிகள் வெற்றி கரமாக முடித்துள்ளனர். கடந்த பெப்ர வரி 21–ம் திகதி மாலை 7.30 மணிக்கு ஆரம்பித்த இச் சமரானது ஞாயிறு அதிகாலை 2.00 மணி வரையில் தொடர்ந்தது. சுமார் ஆறரை மணி நேரம் நீடித்த இச் சமரை – தமிழீழ விடு தலைப் போரில் இதுவரை இடம்பெற்ற கடற்சமர்களில் பெரிய சமர் என்றோ விடுதலைப் புலிகளைப் பொறுத்து வெற்றிகரமான சமர் என்றோ கூறுவதில் தவறில்லை.

பருத்தித்துறை – காங்கேசன்துறை கடற் பரப்பில் சிறீலங்கா கடற்படையினர் மீது கடற்புலிகள் மேற்கொண்ட தாக்குதலானது பெரும் கடற்சமர்களை எதிர்கொள்ளும் ஆற் றல் கடற்புலிகளுக்கு உண்டு என்பதன் வெளிப்பாடே ஆகும். சிறீலங்காவின் தீவிர கண்காணிப்பிற்கு உட்பட்ட பகுதி ஒன்றிற் குள், வலுவானதொரு கடற்படைத் தொட ரணியுடன் பல மணிநேரமாக மோதியதோடு கடற்படையினரின் இரு கப்பல்களையும் மூழ்கடித்தமையானது சிறீலங்காக் கடற் படைக்கு கடற்புலிகள் விடுத்துள்ள சவா லாகவே கொள்ளப்படக்கூடியதொன்றாகும்.

இச்சமரின் பல்வேறு அம்சங்களே இச்சமரை பெரும் சமர் என்ற வரிசை யில் இடம்பிடிக்கச் செய்துள்ளது. ஒரு வகையில், இச்சமரானது ஓர் அதிரடித் தாக்குதல் என்றோ, எதிர்பாராத தாக் குதல் என்றோ கூறிவிட முடியாது. இது ஓர் முழுமையான கடற்சமர் என்பதற்கு இச்சமர் ஆறரை மணித்தியாலங்களுக்கு மேல் நீடித்ததையும் கடற்புலிகளினால் தாக்கி மூழ்கடிக்கப்பட்ட கப்பல்கள் – பலத்த சமரின் பின்னரே மூழ்கடிக்கப் பட்டமையையுமே சுட்டிக்காட்ட முடி யும். 7.30 மணிக்கு இச்சமர் தொடங்கிய தாயினும், முக்கால் மணிநேரத்தின் பின் னரே 'வலம்புரி' எனும் கப்பல் மூழ்கடிக் கப்பட்டது. அதன் பின்னரும் சுமார் ஒரு மணித்தியாலயச் சமரின் பின்னரே 'பப்தா' தரையிறங்குக் கப்பல் மூழ்கடிக் கப்பட்டது. அதன் பின்னர்கூட சுமார் ஐந்து மணித்தியாலங்கள் சமர் இடம் பெற்ற வண்ணமே இருந்தது.

அத்தோடு, இக்கடற்சமரை கடற்புலி களும் ஒரு கடற்படைப் படகையோ அன்றி கப்பலையோ குறிவைத்துத் தாக் கவில்லை. சிறீலங்காக் கடற்படையின் ஒரு பெரிய தொடர் அணியுடனேயே மோதினர். இதேசமயம் சிறீலங்கா கடற் படையும் ஓர் பலவீனமான நிலையில் – பாதுகாப்பற்ற ஓர் கடற்பரப்பில் இம் மோதலில் ஈடுபடவும் இல்லை.

இச்சமரில், சிறீலங்கா கடற்படைத் தரப்பில் இரண்டு பீரங்கிக் கப்பல்களும், எட்டு டோரா அதிவேகப் பீரங்கிப் படகுகளும் பங்கேற்றுக் கொண்டன. அதேவேளை இரண்டு தரையிறங்கு கப்பல்களும் மோதல்களில் பங்கேற்றுக் கொண்டன. இதில், தரையிறங்கு கப் பல்கள், சண்டைக்குரிய கலங்கள் என்ற ரீதியில் அடக்கப்படுவதில்லை. ஆயி னும், முற்றிலுமாகவே இராணுவத் தேவைக்குப் பயன்படுத்தப்படும் இக் கப்பல்களில் தற்பாதுகாப்பு நடவடிக் கைக்கென சில பீரங்கிகளும், கலிபர் துப்பாக்கிகளும் உள்ளன. இந்த ரீதியில் இத்தரையிறங்கு கப்பல்களும் எப்பொ ழுதும் சண்டையிடுவதற்குத் தயாரான நிலையிலேயே உள்ளன.

இந்த வகையில், கடற்புலிகளுடனான இச்சமரில் சிறீலங்கா கடற்படையின் பலமானதொரு அணியே பங்குபற்றியி ருந்தது. இந்த ரீதியில் இக்கடற்சமரா னது பெரும் சமர் எனக் கூறப்படுவதில் தவறு எதுவும் இருப்பதாக இல்லை.

இதேசமயம், இக்கடற்சமரானது கடற்புலிகளைப் பொறுத்து 'ஓர் மைல் கல்' என்றே கூறலாம். ஏனெனில், இக்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கடற்சமர் இடம்பெற்ற பிரதேசம், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து இச்சமர் இடம்பெற்ற தூரம், இச்சமரில் பங்குபற்றிய சிறீலங்கா கடற்படையின் பலம் என்பனவற்றின் அடிப்படையில் பார்க்கையில் சிறிய சண்டைப் படகுகளை வைத்துக் கொண்டு பெரும் சாதனை ஒன்றைக் கடற்புலிகள் சாதித்துள்ளனர் என்றே கூறலாம். இந்த நிலையில், இச்சமரானது இதுவரை இடம்பெற்ற கடற்சமர்கள் யாவற்றிலும் இருந்து தனித்துவமானதொன்றாகவே உள்ளதெனலாம்.

இதேவேளை கடற்சமரை அவதானித்த எந்தவொரு இராணுவ ஆய்வாளர்களும் புலிகள் இச்சமருக்குத் தேர்ந்தெடுத்த இடத்தினைப் பற்றி ஆச்சரியம் கொள்ளாது இருக்க முடியாது. ஏனெனில், இச்சமரைக் கடற்புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்து சுமார் 50 மைல் தொலைவிற்கு அப்பால் – அதிலும் சிறீலங்கா கடற்படையின் மிகவும் செல்வாக்கிற்கு உட்பட்ட பகுதிக்குள் கடற்புலிகள் நடத்தி முடித்துள்ளனர்.

யாழ் குடாநாட்டினைச் சூழவுள்ள கடற்பிராந்தியங்களில் அதன் வட கடற்பிரதேசமும், கிழக்குக் கடற்பிரதேசமும் தீவிரமான கண்காணிப்பிற்கு உட்பட்ட பிரதேசங்களாகும். இதற்கு மூன்று முக்கிய காரணங்கள் இருந்தன.

1. யாழ். குடாநாட்டிற்குள் விடுதலைப் புலிகள் கடல்வழியாக ஊடுருவலாம்.

2. யாழ். குடாநாட்டில் உள்ள இராணுவத்தினருக்கான கடல் வழி விநியோக வழியாக பயன்பாட்டில் இருந்தமை.

3. வடபகுதியில் உள்ள கடற்படையின் முக்கிய தளங்களில் ஒன்றான காங்கேசன்துறை துறைமுகத்தின் பாதுகாப்பு.

இதனைத் தவிர பருத்தித்துறை துறைமுகத்தின் பாதுகாப்பு குடாநாட்டிற்கான விமானப் போக்குவரத்தின் பாதுகாப்பு என்ற ரீதியிலும், இக்கடற்பிராந்தியம் சிறீலங்கா கடற்படையின் தீவிர கண்காணிப்பிற்கு உட்பட்டிருந்தது.

இப்பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டே வெற்றிலைக்கேணியில் ஓர் கடற்படையின் அணி ஒன்றும், சில அதிவேக டோராப் பீரங்கிப் படகுகளும் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதுண்டு. இவை இப்பிராந்தியத்தைக் கண்காணிக்கும் பொருட்டு ரோந்து நடவடிக்கையிலும் ஈடுபடுவதுண்டு. இதேசமயம் காங்கேசன்துறையிலும், வெற்றிலைக்கேணியிலும் சக்தி வாய்ந்த 'ராடர்' சாதனங்களும் இக்கண்காணிப்புக்கென அமைக்கப்பட்டும் இருந்தன.

இவ்வாறாக பாதுகாப்பு ஏற்பாடுகள் – கண்காணிப்புக்கள் மத்தியில் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்து சுமார் 40 கடல்மைல்கள் வரை ஊடுருவிய கடற்புலிகள் இத்தாக்குதல்களை நடத்தியுள்ளனர். அத்தோடு இம்மோதல்களானது சுமார் 20 கடல்மைல் நீளமான கடற்பரப்பில் இடம்பெற்றுள்ளதாகவும் உள்ளது. அதாவது, பருத்தித்துறைக் கடற்பரப்பில் இருந்து 10 மைல் தொலைவில் தொடங்கிய இம்மோதலானது காங்கேசன்துறை முகாம் வரையில் இடம்பெற்றுள்ளது. இந்த ரீதியில், பருத்தித்துறைக்கும், காங்கேசன்துறைக்கும் இடைப்பட்ட முழுக் கடற்பரப்பிலும் இச்சமர் இடம்பெற்றுள்ளதென்பதே சரியானதாகும். இந்த ரீதியில் இச்சமரானது மிகவும் முக்கியமானதொரு சமரே ஆகும்.

மேலும், சிறீலங்கா கடற்படைத் தளபதியாக வைஸ். அட்மிரல் சிசில்திசேரா பதவி ஏற்ற பின்னர் இவ்வாறானதொரு பெரும் சமரும் – முக்கியமான சமரும் இடம்பெற்றுள்ளமை இதுவே முதற் தடவையுமாகும். முன்னாள் கடற்படைத் தளபதி வைஸ். அட்மிரல் சமரசேனா பதவிக்காலத்தில் சிறீலங்காக் கடற்படையினர் மீது விடுதலைப் புலிகள் பல தாக்குதல்களை நடத்தியிருந்தனர். இதன் போது சிறீலங்கா கடற்படை பல போர்க்கலங்களையும், பல கடற்படையினரையும் இழந்தது. இதன் காரணமாக தளபதி சமரசேனாவின் ஆற்றல் குறித்துக் கடுமையாகவே விமர்சிக்கவும் பட்டது. கடற்புலிகளின் ஆற்றலுக்குப் பதிலாக அவரின் திறமை குறித்தே பிரஸ்தாபிக்கப்பட்டது.

இந்த நிலையில் கடந்த ஆண்டு கடற்படைத் தளபதியாகப் பதவியேற்ற வைஸ். அட்மிரல் சிசில்திரோசா கடற்படையின் இழப்புக்களைக் குறைப்பதில் தீவிர அக்கறை காட்டினார். இதன் காரணமாக கடற்புலிகளைப் பெருமளவில் சந்திப்பதைக் கடற்படை தவிர்த்துக் கொண்டது. இதேவேளை, தமக்கும் மிகவும் பாதுகாப்பான சந்தர்ப்பத்தில் கடற்புலிகள் மீதும், மீனவர்கள் மீதும் சில தாக்குதல்களைச் செய்து கொண்டிருந்தது.

ஆயினும், கடற்படையினரின் முக்கிய பணியாக மூன்று அம்சங்கள் அடங்கியிருந்தன. ஒன்று– யாழ்குடாநாட்டிற்கான கடல்வழி விநியோகத்தின் பாதுகாப்பு, இரண்டாவது – வடக்கு, கிழக்குக்கான புலிகளின் கடல்வழிப்போக்குவரத்தைக் கட்டுப்படுத்துதல், மூன்றாவதாக வடக்கு – கிழக்கு கடற்பரப்பிற்குள் பிரவேசிக்கும் வர்த்தகக் கப்பல்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் அதேவேளை விடுதலைப் புலிகளுக்கு கடல் வழி மூலம் வெளிநாடுகளில் இருந்து ஆயுதங்கள் கொண்டுவரப்படுவதைத் தடுத்தலும் ஆகும்.

ஆகையானால், சிறீலங்காக் கடற்படைத் தளபதியின் புதிய தந்திரோபாயத்தின்படி கடற்புலிகளைப் பெரியளவில் சந்திப்பதைத் தவிர்த்துக் கொண்டாலும்கூட சில மோதல்களுக்கு முகம் கொடுக்கவேண்டியே இருந்தது. இந்த வகையில் புதிய கடற்படைத் தளபதி களத்தில் புல்மோட்டைப் பகுதியில் இரு கடற்சமருக்கு கடற்படை முகம் கொடுக்க வேண்டி வந்தது. இதில் ஒரு டோரா பீரங்கிப் படகு உட்பட உயிரிழப்புகளையும் சந்திக்க வேண்டியும் வந்தது.

இதேசமயம், கடற்படையின் முக்கிய பணியாக யாழ். குடாநாட்டில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினருக்கான விநியோகமானது, மிகவும் இரகசியமான





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

வழியில் மேற்கொள்ளப்பட்டது. ஒரு புறம் விநியோகக் கப்பல்கள் புறப்படும் நேரம், வழி என்பன இறுதி நேரத்திலேயே தீர்மானம் செய்யப்பட்டன. அவை பெரும்பாலும் சர்வதேச வர்த்தகக் கப்பல்கள் பயணம் செய்யும் பாதைகள் ஊடாகக் கரையில் இருந்து மிகத் தொலைதூரத்தின் ஊடாக, மிகுந்த பாதுகாப்புடன் பயணங்கள் மேற்கொள்ளப் பட்டன.

இந்த வகையில், வைஸ். அட்மிரல் சிசிலிதிசேரா வகுத்துக் கொண்ட போர் தந்திரோபாயமானது மறைந்து திரியும் சந்தர்ப்பம் பார்த்து தாக்கிவிட்டுத் தப்பி ஓடுதல் என்ற ரீதியிலேயே இருந்தது. ஆனால், தற்பொழுது பருத்தித்துறை — காங்கேசன்துறை கடற்பரப்பில் இடம் பெற்றுள்ள பெருங்கடற்சமரானது, சிசில் திசேராவின் தந்திரோபாயத்தைத் தோல்வியுறச் செய்துள்ளது என்றே கூறலாம். அதாவது, இரகசிய நடவடிக்கைகள் வெற்றி அளிக்கத் தவறிவிட்டன என்பதோடு நீண்டதூரப் பயணங்கள்கூட பாதுகாப்பானதாக இருக்கப் போவதில்லை என்பதை உணர்த்தியுள்ளது. மறுவளமாகக் கூறுவதானால் கடற்புலிகள் நீண்டதூரக் கடற்கண்காணிப்புக்களுக்கும், சண்டைக்கும் தயாராகிவிட்டதையே இக்கடற்சமர் உணர்த்தியுள்ளது.

ஆகையினால், பருத்தித்துறை — காங்கேசன்துறை கடற்பரப்பில் நடந்த பெரும் சமரானது தனி ஆயுத தளபாட இழப்பு என்பதை மட்டுமல்ல; கடற்படைத்தளபதி சிசில் திசேராவின் போர் முறைத் தந்திரோபாயத்திற்கும் விழுந்துள்ள பலமான அடி என்றே கூறலாம். அத்தோடு, யாழ். குடாநாட்டிற்கான கடல்வழி விநியோகத்திற்கும் கடற்புலிகள் பெரும் அழுத்தமொன்றைக் கொடுத்துள்ளனர் என்றே கூறலாம்.

சிறீலங்கா கடற்படைத் தளபதி வைஸ். அட்மிரல் சிசில் திசேரா பதவி ஏற்ற பின்னர் கடற்புலிகள் நடத்திய பாரிய தாக்குதல் இதுவாகும், இது சிறீலங்கா கடற்படைக்கு ஆளணி மற்றும் தளபாட இழப்பை மட்டுமல்ல கடற்படைத் தளபதியின் போர்முறைத் திட்டத்தினையும் கேள்விக்குள்ளாக்கியுள்ளது. ஏனெனில், கடற்புலிகளை சந்திப்பதைப் பெருமளவில் தவிர்த்தல் — தாம் பலமான நிலையில் மட்டும் தாக்கிவிட்டு ஓடுதல், இரகசிய கடல்வழிப் பயணங்களை மேற்கொள்ளுதல் போன்ற கடற்படையின் நடவடிக்கைகளுக்கு இம்முறை கடற்புலிகள் பலமான அடி ஒன்றைக் கொடுத்துள்ளனர். ★

## ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய முயற்சி

சந்திரிகா அரசாங்கம் எதிர்க் கட்சிகள் மீது கட்டவிழ்த்துள்ள வன்முறைகளை வெளிநாட்டு தூதரக அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தும் நடவடிக்கையாக சிறப்புக் குழு ஒன்றை ஐக்கிய தேசியக் கட்சி அமைந்துள்ளது. இக்குழு பிரிட்டன், அமெரிக்கா, யப்பான் இந்தியா ஆகிய நாடுகளுக்கு சந்திரிகா அரசாங்கம் எதிர் கட்சிகள் மீது ஏவிவிட்டுள்ள அராஜகத்தை விபரித்தும் உள்ளது. சந்திரிகா அரசாங்கம் அண்மைக்காலத்தில் எதிர்கட்சிகள் மீதும், எதிரான கருத்துடையவர்கள், அரசை விமர்சித்தவர்கள் மீதும் அராஜகத்தை அல்லது அரச பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விட்டுள்ளது என்பதற்குப் பல ஆதாரங்கள் உண்டு. பத்திரிகையாளர்களில், இராணுவ விமர்சகர்களில் இருந்து சாதாரண செய்தியாளர் வரையிலும் அரசியல்வாதிகளில், சாதாரண எதிர்க் கட்சித் தொண்டர்களில் இருந்து உயர்நிலை அரசியல்வாதிகள் வரை இதனால் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

இந்த நிலையில், சந்திரிகா குமாரதுங்காவே தனது அரசாங்கம் ஜனநாயக மீட்பிற்காகவும் மனித உரிமைகளுக்காகவும் குரல் கொடுக்கும் ஒரு அரசு என பிரச்சாரம் செய்வதில் முனைப்பாக ஈடுபட்டுள்ளது. இதேவேளை அரசின் அராஜக செயல்கள் அப்பட்டமாக வெளிவரும் சமயங்களில் மட்டும் கடந்தகால ஆட்சியைவிட நாம் பெரிதாக எதையும் செய்துவிடவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் செய்தவற்றுடன் ஒப்பிடுகையில் மிகவும் அற்பமானது அல்லது பெறுமதி அற்றவை எனவும் சாதிக்கவே முயல்கின்றன. ஆனால், சந்திரிகா அரசாங்கம் என்னதான் கூறிக்கொண்டாலும் அது ஒரு பழிவாங்கும் அரசாங்கம் அல்லது அதற்கேற்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அரசாங்கமாகவே உள்ளது. இது சிலசமயம் ஐக்கிய தேசியக் கட்சி 17 வருடகால ஆட்சியில் நிகழ்ந்தவற்றை விட ஒப்பீட்டு ரீதியில் குறைவானதாக இருக்கலாம். ஆனால், ஐக்கிய தேசியக் கட்சி கையாண்ட சகல வழிகளிலும் இவ் அரசாங்கமும் அராஜகத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது.

இந்த நிலையில் ஐக்கிய தேசியக் கட்சி அரசின் அராஜகத்தை வெளி உலகிற்கு எடுத்துக் கூற முன்வந்துள்ளதும் பொருத்தப்பாடான ஒரு நடவடிக்கையேயாகும். இது ஒருவகையில் சந்திரிகா அரசின் அராஜகத்தை வெளிப்படுத்துவதாகவும் தமக்கு பாதுகாப்பு அளிக்கக் கூடியதாகவும் இருப்பதற்கான வாய்ப்பாகவும் ஐக்கிய தேசியக் கட்சி கருதுவதாக இருக்கக் கூடும். ஆனால், இவ்வாறான நடவடிக்கையானது ஐக்கிய தேசியக் கட்சிக்கு அரசியல் ரீதியில் லாபம் அளிக்குமா என்பது பற்றி கேள்வி இல்லாமல் இல்லை. ஏனெனில், சந்திரிகா அரசு மேற்கொள்ளும் ஜனநாயக விரோத நடவடிக்கைகள், ஜனநாயகத்தின் பெயரில் மேற்கொள்ளும் அத்துமீறல்கள் என்பன கொழும்பில் உள்ள தூதுவர்களுக்குத் தெரியாதது அல்ல. அவர்கள் தினசரி பத்திரிகைகள், வானொலிகள் மற்றும் ராஜதந்திர வட்டாரங்களின் மூலமாகவும் இதனை அறியக் கூடியதாகவே இருக்கும். இந்த நிலையில் கொழும்பில் உள்ள வெளிநாட்டு தூதுவர்களுக்கு விளக்கம் அளிப்பது என்பதே ஒரு சம்பிரதாயபூர்வமான நடவடிக்கையாகவும் வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு விளக்கமின்மையைத் தெளிவுபடுத்துவதற்குமே உதவக்கூடியதாகும்.

ஆனால் இவற்றின் மூலம் வெளிநாட்டு அரசுகள் அரசாங்கத்திற்கு அளிக்கும் ஆதரவானது பாதிப்புக்கு உள்ளாகும் என்பது சந்தேகத்திற்கு உரியதே ஆகும். இதற்கு கடந்த காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சி அரசிற்கு இவர்கள் இறுதிவரை கொடுத்துவந்துள்ள ஆதரவினையே சுட்டிக்காட்ட முடியும். அதாவது ஐக்கிய தேசியக் கட்சி அராஜகம் புரிந்த போது அதற்கு தொடர்ந்து உதவி புரிந்துவந்த இவர்கள் இப்போதைய ஆட்சியாளர்களுக்கு மாறாக செயற்படுவார்களா?

இதைத்தவிர, சந்திரிகாவின் பொது ஐக்கிய முன்னணி அரசாங்கமும் சரி, ஐக்கிய தேசியக் கட்சி கடந்தகால அரசாங்கங்களும் சரி தமிழ் மக்கள் மீது பெரும் அராஜகத்தை பல ஆண்டுகள் கட்டவிழ்த்து விட்டபோதும் அதற்கு இவ் அரசுகள் தொடர்ந்தும் ஆதரவு அளித்தே வந்துள்ளன. இந்த நிலையில் அராஜகம், அரச பயங்கரவாதம், ஜனநாயக விரோதச் செயல்கள், மனித உரிமை மீறல்கள் என்ற குற்றச்சாட்டுக்களைக் கூறி வெளிநாடுகளின் ஆதரவைப் பெற்றுக் கொள்ளல், அரசிற்கான ஆதரவை குறையச் செய்தல் என்பன சாத்தியமானதொன்றல்ல. ஏனெனில், ஜனநாயகம், மனித உரிமைகள் பற்றி சந்திரிகா அரசாங்கம் போன்றே அந்த நாடுகளில் பேசிக்கொள்கின்றன. சந்திரிகா அரசாங்கம் போன்றே அந்த நாட்டு ஆட்சியாளர்களும் தமது அதிகாரத்தைப் பாதுகாப்பதன் பொருட்டே அராஜகத்திற்கு துணை போகின்றன. இந்த நிலையில் அராஜகத்தின் பெயரில் எவ்வாறு இவர்கள் உதவியை நிறுத்த முடியும்.



www.tamileelamarchive.com

## யாழ்ப்பாணத் தொப்புள்கொடி அறுப்பு

# ஆக்கிரமிக்க முற்பட்டோர்க்கு காலம் தந்த பரிசு



சில நாட்களிற்கு முன் சிறீலங்கா விமானப் படைத்தளபதி சொன்னார் ஒரு வார்த்தை. "இனிமேல் புலிகளுடனான போர் கடலில்தான் நடைபெற வேண்டும். அதற்குக் கடற்படையிடமுள்ள கலங்கள் போதா. வெளியிலிருந்து புலிகளுக்கு வரும் வழங்கலைத் தடுத்தாலேயே யுத்தத்தினை வெற்றி கொள்ள முடியும்" என்கிறார் ஒலிவர்.

அதாவது, கடல் வழியாக வரும் விநியோகத்தை நம்பியே புலிகள் இருக்கிறார்கள் என்பது போல ஒலிவர் சொல்லிக் கொண்டிருக்க நடந்தது என்ன?

கடல்வழியாக வரும் விநியோகத்தையே நம்பியிருக்கும் யாழ் குடாநாட்டிலுள்ள படையினருக்கு வயிற்றிலே புளியைக் கரைப்பதாக நிகழ்வுகள் புலிகளால் நகர்த்தப்பட்டுள்ளன.

திருமலையில் இருந்து புறப்பட்டு 25 கடல்மைல் தொலைவால் சர்வதேச கப்பற்பாதை வழியே யாழ்ப்பாணத்துக்குச் சென்று கொண்டிருந்த 9 கடற்கலங்களைக் (3 விநியோகக் கப்பல்கள், 6 பாதுகாப்புக் கலங்கள், 4 டோரா, 2 பீரங்கிக் கப்பல்கள்) கொண்ட 30,000 படையினருக்கான தொப்புள்கொடி அவர்களின் கண்முன்னாலேயே இன்பருட்டிக் கடலில் வைத்துக் கடற்கரும்புலிகளால் அறுத்தெறியப்பட்டது. படையினரால் முடிந்தது தரையில் இருந்து பீரங்கிகளைக் கடலை நோக்கி முழங்கியது மட்டுமே.

ஆழமறியாமல் காலை விட்டுவிட்ட கதையாக சரியானதொரு விநியோகப் பாதையில்லாமல் 3 பக்கம் கடலாலும் ஒரு பக்கம் புலிகளாலும் சூழப்பட்டிருக்கும் ஒரு தனித்தீவு போன்ற யாழ்குடாநாட்டினுள் 30,000 படையினரைக் குவித்து வைத்திருக்கிறது அரசு. யாழ். குடாநாட்டைக் கைப்பற்றியதன் உண்மையான விலையினை அரசு கொடுத்துக் கொண்டிருக்கிறது.

விட்டேனா பார் என்று கடல் வழியாக விநியோகத்தைச் செய்ய முயன்ற போது விநியோகக் கப்பல்கள் கடற்புலிகளின் பாய்ச்சலுக்குள்ளாகி கப்பல்கள் முல்லைத்தீவுக்கு வந்து சேர்ந்தன. பெரும் பாதுகாப்பு ஏற்பாட்டுடன் கடல் தொடரணி மூலமாக வழங்கலை வழங்க வீம்புடன் நின்ற அரசுக்கு ஏற்கனவே இரு தடவைகள் அடி விழுந்திருந்தன. இந்த அச்சுறுத்தல்தான் ஜெயசிக்குறுவைத் தொடங்க வைத்தது. ஆனால், அதுவோ பத்தாவது மாதத்தில் வெற்றிகரமாக முன்னேறிக்கொண்டிருக்க யாழ்ப்பாணத்தில் உள்ள படையினர் காற்றையா குடிக்க முடியும்?

கடற்புலிகள் கனவிலும் அச்சுறுத்தும். கரையில் இருந்து 25 கடல்மைல்கள் தொலைவில் தூர தேசப் பயணம் போல வெகு தூரம் சுற்றிச் சென்று வந்தனர் படையினர். என்ன செய்வது? அரசியல் காரணங்களிற்காக படைகள் பயன்படுத்தப்படும் போது இப்படிப் படாதபாடு பட வேண்டித்தான் இருக்கும்.

படையினரின் பயம் எவ்வளவு என்று பாருங்கள். திருமலையில் இருந்து 3 கப்பல்களும், 2 தரையிறங்கும் கலங்கள் (பப்தா, சக்தி), ஒரு சரக்குக்கப்பல் (வலம்புரி) புறப்பட அவற்றுக்குக் காவலாக 2 டோறாக்களும், 2 பீரங்கிக் கப்பலுமாக ஏழு கலங்களைக் கொண்ட கடல் ஊர்வலம் தொடங்கியது. இதுவே அவர்களிற்கு மரண ஊர்வலமாக அமையுமென்று யார் நினைத்தார்கள்?

முல்லைக் கடலில் மேலும் இரு டோறாக்கள் புலிகளின் அச்சுறுத்தலை எண்ணி இணைந்து கொள்ள இப்போது ஊர்வலத்தில் 9 பேர். இதைத்தான் 'சுண்டைக்காய் காற்பணம் சுமை கூலி முக்காற்பணம்' என்பார்கள். மூன்று காவலுக்கு வரும்; தாக்கும் படகுகள் ஆறு; வீம்பின் அவலமன்றி வேறென்ன?

"வெற்றிலைக்கேணித் தளத்தைத் தாண்டியதும் படையினரின் இதயத் துடிப்பு சீராகியிருக்கும்; கடலையே பூந்தப் பூந்த விழித்த கண்கள் சிறிது ஆறியிருக்கும்; இனி எமது கட்டுப்பாட்டுப் பிரதேசந்தானே என்று கொஞ்சமேனும்

- உ. சத்தியமூர்த்தி -



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

ஆறுதல் வந்திருக்கும். நேரம் மாலை 7.00 மணி பருத்தித்துறைக் கடற்பரப்பு அப்படி உங்களுக்கு நிம்மதியான பிர தேசமென்று எதுவுமே இல்லையெனச் சொல்லி முழங்கின கடற்புலிகளின் ஆயு தங்கள். பெரும் சமர் வெடிக்கிறது.

மாலை 8.00 மணி. இராணுவ வழங் கலைச் சுமந்தபடி கடலில் மிதந்த வலம் புரி கப்பல் மீது உச்ச வேகத்தில் வந்து மோதுகிறது ஒரு கரும்புலிப் படகு. இடி வாங்கிய வலம்புரி தீப்பற்றி எரிந்து கட லில் மூழ்கியது. "சாப்பாடு வருகிறது, கடி

எங்கள் நிலத்தை ஆக்கிரமித்திருப் போரின் இருப்பு நிலையானதல்ல. அவர்களிற்கான உயிர் வாழ்தலும் வழங் குதலும் நிரந்தரமானதல்ல என்பதே.

இந்தச் செய்தி சிங்களத்தின் கவனத் தைக் கவர்ந்து பூகம்பத்தைக் கிளறிவிடக் கூடாதே. 'இராஜினாமா நாடகம்' புகழ் ரத்வத்தையின் இருப்பு என்னாவது?

ஜெயசிக்குறுத் துருப்புகள் வீராவேசத் துடன் கிளம்பின. 'இதோ மாங்குளத் தைக் கைப்பற்றிச் சிங்கக் கொடியை பறக்கவிடுகிறோ'மென M24, கிபீர்களின்



தம் வருகிறதென" வலம்புரியைக் காத் திருந்த படையினரின் கண்ணெதிரே யே அது எரிந்து மூழ்கியது.

ஆக்கிரமிப்புக்கு கிடைக்கும் பரிசு எதுவென அவர்களிற்கு இத்தாக்குதல் உணர்த்தியிருக்கக்கூடும்.

வலம்புரி மூழ்கிவிடத் தப்பியோடிக் கொண்டிருந்தது பப்தா. உதவிக்கு விரைந்த நாலு டோறாக்கள் கடற்புலிகளு டன் பொருதின. அதைத் துரத்திச் சென்ற கரும்புலிகள் அதையும் இடித்து மூழ்கடித்தனர். 'சக்தி' சண்டை தொடங் கும் முன்பே பருத்தித்துறைக்குச் சென்று விட்டதால் தப்பியது.

படையினரின் கட்டுப்பாட்டுப் பிர தேசத்துக்கு அருகில் பருத்தித்துறையி லிருந்து காங்கேசன்துறை வரை நீண்டி ருந்த கடற்பரப்பில் மாலை 7.00 மணி முதல் அதிகாலை 2.00 மணிவரை (ஏழு மணிநேரம் 10 போர்க் கலங்களுடன் (8 டோறாக்கள், 2 பீரங்கிப் படகுகள்) பொருதி கடற்படைத் தொடரணியைச் சிதைத்துள்ளனர். புலிகளின் இந்தத் தீர மிகு தாக்குதல் சொல்வது என்ன?

துணையுடன், (ஆட்டிலறி) நெடும் பீரங் கிக் குண்டுமழை பொழியப் புறப்பட்டன. ½ மைல் தூரத்துக்குள் சாவு இருக்கிற தென்று அவர்களிற்குத் தெரிந்திருக்க வில்லை. 50 பேரைக் காவு கொடுத்து ஆயுதங்களையும் இறந்த 20 சகாக்களின் உடல்களையும் கைவிட்டு வெற்றிகர மாகப் பின்வாங்கி ஓடினர்.

ஆக, தொப்புள்கொடியும் அறுந்து, தளபதியின் இருப்பைக் காக்க முனைந் தவரின் 'முன்வாய்ப் பற்களும்' நொருங்கி அவலமாக நிற்கின்றன படைகள். இது போதாதென்று மட் டக்களப்பில் பொலிஸ் நிலையம் தாக்கி அழிக்கப்படுகிறது. மணலாற்றில் காவலரண் மீது தாக்குதல், கந்தளாயில் காவலரண் மீது தாக்குதல் என்று எங்கு திரும்பினாலும் தலையிடிதான்.

இவையெல்லாம் அகலக்கால் பதித்து ஆக்கிரமித்தே தமது இருப்பைப் பேண முயல்வோர் தாமாகத் தேடிக் கொண்ட அவலங்களே. காலம் அவர்களிற்கு அளித்த பரிசு இது.

★

## அழிவின்றி வேறென்ன?

"நாடு தற்பொழுது அழிவின் விளிம்பில் இருப்பதாகச் சித்தரித்துக் காட்டுவதற்கு சிலர் முயற்சி செய்கின்றனர் என எதிர்கட்சி யான ஐக்கிய தேசியக் கட்சியைச் சாடும் சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க யுத்தத்திற்காகப் பலகோடி ரூபா செலவிடப் படும் சமயத்திலும்கூட நாட்டின் பொருளா தாரத்தைச் சரியான வழியில் அரசாங்கம் வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்கிறது" எனவும் தெரிவிக்கின்றார். ஜனநாயகம் வழங்கியுள்ள பேச்சுரிமையையும், கருத்துச் சுதந்திரத்தையும் முழுமையாகத் தமக்கு ஏற்ற விதத்தில் பயன்படுத்திக் கொள்பவர் கள், இவ்வரசியல்வாதிகள்தான். ஏனெனில் தமது விருப்பத்திற்கு ஏற்ப வாயிற்கு வந்த படியெல்லாம் அவர்களே பேசுகின்றனர். அவர்கள் யதார்த்த நிலை குறித்தோ அன்றி தமது வாய்மை, வாக்குறுதிகள் குறித்தோ எப்பொழுதுமே அக்கறைப்படுவதுமில்லை; கவலைப்படுவதுமில்லை. அவ்வாறு இல்லா விடில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேலே குறிப்பிட்டிருப்பது போல் பேசியி ருக்கமாட்டார். ஏனெனில், நாடு அழிவின் விளிம்பில் இருக்கின்றது என்பது இன்று எவ ராலும் மறுத்துக் கூறக்கூடியதொன்றல்ல. சிலவேளை எதிர்க்கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்கா இதனைக் கூறுவ தற்கு தகுதியற்றவராக இருக்கலாம். ஆனால், இதனை மறுப்பதற்கோ அல்லது நிராகரிப் பதற்கோ ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விற்கு எந்தவிதமான தார்மீகப் பலமும் இல்லை. ஏனெனில், ஒருபுறம் யுத்தம் இன்று இலங்கையின் முழுப்பகுதிக்கும் பரவியுள் ளது. இலங்கையின் எப்பகுதியிலும், எவ் வேளையிலும் குண்டுகள் வெடிக்கலாம், தாக்குதல்கள் நிகழலாம் என்பதை அண் மைக்காலச் சம்பவங்கள் உணர்த்துபவை யாக உள்ளன. மறுவளமாகக் கூறுவதா னால், அரசாங்கம் எவ்வகையிலான முயற் சிகளை மேற்கொண்டாலும் இவ்வாறான சம்பவங்களைத் தடுத்து நிறுத்திவிட முடி யாது என்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் நாடு, பொருளாதார அழி விலும் உயிர் அழிவிலும் மிக உயர்ந்த தொரு நிலையிலேயே உள்ளது. இதனை நாட்டின் அழிவு என்று கூறாமல், ஆட்சியா ளர்கள் கூறுவது போன்று, நாடு அபிவிருத் திப் பாதையில் வீறுநடை போடுகின்றது என்று எவ்வாறு கூறமுடியும்? "ஐக்கிய தேசி யக் கட்சி காலத்தில் நடக்காதவையா இன்று நடந்துள்ளன" எனக் கேட்டதன் மூலம் அழி வுகள் ஏற்படவில்லை என்று அரசினால் கூறத்தான் முடியுமா? அன்றி அழிவை மறைத்துவிடத்தான் முடியுமா?

ஒருபுறம் யுத்தத்தினால் வளங்கள் அழிந்து கொண்டிருக்க வெளியாருக்கு விற்று யுத்தத்தை நடத்துவது எவ்வாறு பொருளாதாரத்தை வளர்ச்சிப் பாதையில் முன்னெடுப்பதாக இருக்கும்?

(ஈழநாதம் ஆசிரியர் தலையங்கத்திலிருந்து...)



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# கிரக மாற்றம் + புதுவருடம் = கைது!

சித்திரைப் புத்தாண்டா அல்லது சனி மாற்றமா தமிழர்கள் கொத்துக்கொத்தாய் கைதுசெய்யக்காரணம்? எதுவாக இருப்பினும் பிரதான காரணம் அவர்கள் தமிழர்கள் என்பதே!

கொழும்பில் ஏப்ரல் மாதம் என்றுமே சந்தித்திராத பெரும் நெருக்கடியை எதிர்கொண்டனர். பல ஆயிரக்கணக்கில் காரணமின்றிக் கைதுசெய்யப்பட்டனர். கொழும்பிலும் சரி கொழும்புக்கு வரும் தமிழர்களும்சரி மடக்கிப் பிடிக்கப்பட்டனர். விலங்கிடப்பட்டு விசாரிக்கப்பட்டனர். சித்திரவதை செய்யப்பட்டனர். துன்புறுத்தப்பட்டனர். திடீரென ஏன் இந்த வெறிக் கோலம்...? சிங்களப் படையினர் நேர காலம் இன்றி.... சாமப் பிசாசுகளாய் தமிழரின் இருப்பிடம் தேடிச்சென்று... கதவுடைத்து நுளைந்து படுத்தபாயிலயே தமிழர்கள் மடக்கிப்பிடிக்கப்பட்டு தரதரவென இழுத்துச் செல்லப்பட்ட இந்த இழிநிலை எதற்காக என்ற கேள்வி வலிந்து எழுந்து நிற்கின்றது.

புதுவருடத்தில் விடுதலைப் புலிகள் கொழும்பில் தாக்குதலை நடத்தத் திட்டமிட்டுள்ளனர் என்ற புலனாய்வுத்துறையின் அறிக்கை சிங்களக் காடையினரை உசார்படுத்தியதால், தமிழர்களுக்கு இந்த அவலம். தமிழ் சிங்களப் புத்தாண்டில் தமிழர்கள் சிறைக்கம்பிக்குப் பின்னும், இராணுவ முற்றுக்கைக்குள்ளும் இருக்க சிங்களம் வெடிகொழுத்தி மகிழ்ந்தது. புதுவருடத்தை மதுபோதையில் கொண்டாடிக் களித்தது.

இந்த அவலமான சூழ்நிலையில் தமிழர்கள் தவித்திருக்க, சிங்களம் மதுமயக்கத்தில் களித்திருக்க, சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க புத்தாண்டுச் செய்தியைத் தனது ஊதுகுழல்களுக் கூடாக வழங்கினார். ***'நாட்டுமக்கள் அனைவரும் பாதுகாப்புடனும் மரியாதையுடனும் வாழக்கூடிய சமுதாய சூழலை உருவாக்குவதே எமது குறிக்கோள்' என்று சிறீலங்கா ஜனாதிபதி கூறிக்கொண்டிருக்க, தமிழர்கள் விரட்டி விரட்டி கைது செய்யப்பட்டனர்.*** கொடிய தொற்றுநோய் போன்று இக் கைது வெறி, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா என விரிந்தது. இந்தப் புத்தாண்டில் தமிழர்கள் எதிர்கொண்ட கசப்பான சூழ்நிலை இது.

இந்தக் கைதுகளுக்கு இன்னும் ஒரு காரணம் கூறப்படுகின்றது. அதாவது, ஏப்ரல் 16–ம் திகதியுடன் நிகழும் சனி மாற்றம், தீவில் அழிவை ஏற்படுத்தப்போவதாகவும் அரசியல் தலைவர்களிற்கு ஆபத்தையும் கெட்டகாலத்தையும் கொண்டுவரப்போவதாகவும் சோதிடர்கள் அடித்துக்கூறியதால் ஆடிப்போய்விட்ட சிங்களத்தின் ஏற்பாடே இது எனச் சொல்லப்படுகின்றது. தமிழர்களை கொழும்பை விட்டு விரட்டினால் அல்லது சிறையில் அடைத்தால் சனிமாற்றத்தால் ஏற்படும் அழிவுகளில் இருந்து அல்லது அவலங்களில் இருந்து தப்பிக்கலாம் எனச் சிங்களம் நம்புகின்றதுபோலும்.

இந்தச் சனிமாற்றமும், புதுவருடப் பீதியும் இணைந்து தமிழர்களுக்கு எதிரான பெரும் கைதுநடவடிக்கையை சிங்களம் அரங்கேற்றியதாக அறியப்படுகின்றது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து தமிழர்கள் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வரவேண்டும் என்று அவதிப்படும் சிங்கள அரசாங்கம், அவர்கள் கொழும்பிற்கு வருவதை வரவேற்கவில்லை. அவர்களை அவர்களது பகுதியில் சிறைவைக்கவே அது ஆசைப்படுகின்றது. காலங்காலமாக கொழும்பில் வசிக்கும் தமிழர்களையும் நெருக்கடி கொடுத்து, வடக்கிற்கோ அல்லது கிழக்கிற்கோ அனுப்பிவிட வேண்டும் என்பதே சிறீலங்கா அரசின் நோக்கமாக உள்ளது.

கொழும்பில் தமிழர்களின் அதிகரிப்பு, விடுதலைப் புலிகளின் ஊடுருவல்களுக்கும் தாக்குதல்களுக்கும் வழிவகுக்கும் என அச்சப்படும் சிங்கள அரசாங்கம், தமிழ் மக்களையும் விடுதலைப் புலிகளையும் பிரித்துப்பார்க்க முடியாதென்பதை உணர்ந்து முழுமக்களுக்கெதிராகவும் தனது அடக்குமுறைச் செயற்பாட்டை மேற்கொண்டிருக்கின்றது.

இந்து மதக்குருமார்களும் இந்தக் கைது நடவடிக்கைகளில் இருந்து தப்பவில்லை என்பதுதான் வேதனை. புத்த மதத் துறவிகளுக்கு விலையுயர்ந்த பென்ஸ் கார்களை அன்பளிப்புச் செய்யும் சந்திரிகா அம்மையார் இந்துமதக் குருமாரைக் கைதுசெய்து சிறையுள் தள்ள கட்டளையிடுகின்றார் என்று எழுதிய கொழும்புத் தமிழ்ப் பத்திரிகையொன்றின் ஆதங்கம் எல்லோராலும் புரிந்துகொள்ளப்பட வேண்டியதே.

தமிழர்களை விலங்குகளாகக் கருதி நடக்கும் இந்தக் கைது வேட்டைகள் படுவேகமாகவும் தீவிரமாகவும் நடந்து கொண்டிருக்க, தமிழர்களின் பிரதிநிதிகள் எனத் தம்மைத் தாமே கூறிக்கொள்ளும் கொழும்பில் தங்குமிடம் அமைத்து தங்கியுள்ள தமிழ்க்குழுக்களைச் சேர்ந்தோர் எங்கே என பத்திரிகைகள் கேள்வி எழுப்பியபோதுதான் தமிழ்க்குழுக்களுக்கு சுரணை வந்ததுபோலும். வழமைபோல சிலர் கண்டனம் தெரிவித்தனர். அரசுக்கு வழங்கிவரும் ஆதரவை மீள்பரிசீலனை செய்யவேண்டிவரும் எனச் சிலர் அனுங்கினர். தமிழர்களைக் கைதுசெய்ய வாகாக அறிமுகப்படுத்தப்பட்ட அவசரகாலச் சட்டத்தை ஆதரிக்கும் மேற்படி கும்பல், அவசரகாலச் சட்ட நீடிப்புக்கு ஆதரவு தெரிவிக்காமல் விடவேண்டிவரும் என குரல் தாழ்த்தி மிரட்டினர்(?). இதற்கொரு நடவடிக்கை எடுக்காதுபோனால் பிரதிப் பாதுகாப்பமைச்சர் ரத்வத்தை மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்போவதாகவும் அவர்களில் சிலர் கூறினர்.

இந்த சுருதி குறைந்த மிரட்டல்களுக்கு சிங்கள அரசாங்கம் செவிசாய்த்ததாகத் தெரியவில்லை. இந்தக் குழுக்களை சிங்கள அரசாங்கம் எப்பொழுது பொருட்டாக மதிக்கும் என்றால், தனது தேவைக்கு ஏற்ப, தமிழர்களின் பிரதிநிதிகளாக அவர்களை முன்நிறுத்தி தமிழின அழிப்பை நியாயப்படுத்த, அல்லது தமிழின அழிப்புச் சட்டங்களை அரங்கேற்றும் காலங்களில் மாத்திரமே. இந்தக் காலங்களில் இந்தக் குழுக்களைச் சேர்ந்தோர் தமிழர்களால் அங்கீகரிக்கப்பட்ட தலைவர்களாக அலங்கரிக்கப்படுவர்.

என்றாலும் சம்பிரதாயபூர்வமான கலந்துரையாடல்கள் நடந்தன. காலமும் கரைந்தது. அவர்களின் சோதனைக் காலம் முடிந்ததாக நம்பினர். புதுவருட நாளும் சோதனையின்றிக் கடந்தது. சனிமாற்றமும் அதிர்வுகளை ஏற்படுத்தவில்லை. எனவே தமிழர்களால் ஏற்பட்ட பெரும் பீதி தணிந்தது. இனி தமிழர்கள் விடப்படுவர். கைதுகள் குறையும். தமிழ்க்குழுக்களுக்க தமிழர்கள் கைதுசெய்யப்படுவது குறைக்கப்படும் என வாக்குறுதி வழங்கப்படும். பார்த்தீர்களா எமது எதிர்ப்புக்கு அரசாங்கம் கீழ்ப்படிந்தது என்று தமிழ்க்குழுக்கள் மார்தட்டிக்கொள்ளலாம்.

எல்லாம் சிங்களத்தின் அடுத்த திருவிழா வரும்வரை அல்லது கிரகமாற்றம் ஏற்படும்வரை.

**- சுப்பு**



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# 'ஒப்பரேசன் ஜயசிக்குறுய்'

# பார்பறோசாவை நினைவூட்டுகின்றதா !?

கிட்லரின் படைகள் சோவியத்யூனியன் மீது நடாத்திய ஒரு ஆக்கிரமிப்புச் சமர் பற்றி இங்கே தரப்பட்டுள்ளது. 'பார்பறோசா' என்று பெயரிடப்பட்ட அந்த நடவடிக்கை, இறுதியில் சோவியத் படைகளால் முறியடிக்கப்பட்டது. இந்தச் சமரின் தோல்வி போர்த் தோல்வியாக ஜேர்மனிக்கு அமைந்துவிட்டது. இந்தச் சமரையும் அது தொடர்பான கருத்துக்களையும் பார்க்கும்போது ஜயசிக்குறு சமர் நினைவுக்கு வருவதை தவிக்க முடியாதுள்ளது. கட்டுரை இரு சமர்களையும் ஒப்பிட்டு எழுதப்படவில்லை. ஆனால், வாசிப்போர் தமது மனதில் இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்துச் சிந்திக்கக்கூடியதாக இருக்கும்.

இரண்டாம் உலகப்போர் கண்ட பலநூறு சமர்களில் மிகப் பெரியது 'ஒப்பரேசன் பார்பறோசா' 'சோவியத்தின் பலத்தை அழித்தல்' என்பது பார்பறோசாவின் இலட்சியம். நடவடிக்கையின் குறி இலக்காக மூன்று பிரதான நகரங்கள் இருந்தன. (1) மொஸ்கோ (2) ஸ்டாலின் கிராட் (3) கீவ் என்கின்ற கைத்தொழில் கனிவளப் பிராந்தியம் உட்பட லெனின்கிராட். இம்மூன்று இலக்குகளும் வீழ்ச்சியுற்றால் சோவியத் காலடியில் வரும் என்பது கிட்லரின் கணிப்பு.

'பார்பறோசா' நடவடிக்கையின் போது சோவியத்தின் 155 டிவிசன் படைகளை எதிர்கொள்ள வேண்டிவரும் என்றும், அதே அளவு ஜேர்மன் டிவிசன்களையும் பயன்படுத்த வேண்டும் என்றும் நாசித் தளபதிகள் திட்டமிட்டனர். பதினையாயிரம் ஆட்களைக் கொண்டது ஒரு டிவிசன்.

போர் ஆற்றலைப் பொறுத்தவகையில் சோவியத் படைகள் தரம்குறைந்தவை என்றும், ஆட்பலம் மற்றும் ஆயுத வளத்திலும் அது பலவீனமாகவே இருக்கின்றது என்றும் ஜேர்மனியர் கருதினர். இதனால், ஜேர்மனியப் படைக்கு வெற்றி நிச்சயம் என நம்பினர். 'பார்ப்பறோசா' தொடங்கப்பட்டதும் உலகம் மூச்சைப் பிடித்துக்கொண்டு – விக்கித்து நிற்கும் என்று கிட்லர் கூறியிருந்தார்.

ரஷ்யாவின் பேய்க்குளிருக்கு முன்னர் நடவடிக்கையை முடிக்க கிட்லர் எண்ணினார். அதனால், மே மாதம் சமரைத் தொடங்கத் திட்டமிட்டார். ஆனால், நாசிகளின் கட்டுப்பாட்டிலிருந்த யூகோசிலவாக்கியாவின் பொம்மை ஆட்சி, சதிப்புரட்சி ஒன்றில் கவிழ்க்கப்பட்டதால் அதற்குப் பழிவாங்க கிட்லர் முடிவெடுத்தார். பார்ப்பறோசாவுக்கு ஒதுக்கிய படைப்பலத்தின் ஒரு பகுதியை யூகோசிலவாக்கிய தலைநகரான 'கேக்' கிற்கு அனுப்பினார். 'கேக்' துவம்சம் செய்யப்பட்டது. பதின்மூவாயிரம் நகரவாசிகள் மூன்று நாட்களில் கொல்லப்பட்டனர். ஒப்பறேசன் பணிஸ்மென்ற் என்று இதை கிட்லர் அழைத்தார். இந்தப் பழிவாங்கும் தாக்குதலால் நான்குவார கால தாமதம், பார்ப்பறோசாவுக்கு ஏற்பட்டது.

1941 யூன் 22–ம் நாள் பார்பறோசா தொடங்கியது. பார்பறோசாவின் பிரதான சமர்த்தந்திரம் வேகமான படைநகர்த்தல். இதன் குறி இலக்கு நகரங்கள் 600 மைல் தொலைவில் இருந்தன. 6 மாதத்தில் நடவடிக்கை பூர்த்தியாக்கப்பட வேண்டும் என்று கிட்லர் உத்தரவிட்டார்.

புயல்போல் ஜேர்மன் படைகள் ரஷ்யாவிற்குள் நுழைந்தன. பால்டிக் பிராந்தியத்தில் இருந்து கருங்கடல் வரையான 1000 மைல் நீளக் களத்தை பார்ப்பறோசா கொண்டிருந்தது. முதற் சில நாள் சண்டைகளில் பல பத்தாயிரம் சோவியத் துருப்புக்கள் சுற்றிவளைக்கப்பட்டு அழிக்கப்பட்டன. ஜேர்மனியின் கவசப் படையணிகள் எதிர்ப்புக்களை சுக்குநூறாக்கிக்கொண்டு குறி இலக்குகளை நோக்கி – மரதனோட்டத்தில் பாய்ந்து சென்றன. மூன்று வாரத்தில் 450 மைல் தூரம் உள்ளே நுழைந்துவிட்டன.

திட்டமிட்டபடியே பார்பறோசாவின் ஒரு அணி மொஸ்கோவுக்கு 20 மைல் தூரத்தில் போய் நிலைகொண்டது. அதுபோல ஸ்டாலின் கிராட்டிற்கு





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அருகிலும் போய் நின்றது. அதே சமயம் 'கீவ்' பிரதேசத்தைக் கைப்பற்றி – அங்கிருந்து லெனின்கிராட் நோக்கி முன்னேறியது.

நடவடிக்கை தொடங்கிய நான்காம் மாத நிறைவில் கிட்லர் தனது நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். "சோவியத் வீழ்ச்சியடைகின்றது. இனிமேல் ஒரு பொழுதும் அது எழமாட்டாது. இதை நான் உறுதியாகப் பிரகடனப்படுத்துகின்றேன்" என்றார். நெப்போலியனால் முடியாததை 7–ம் சாள்ஸ் மன்னனால் முடியாததை கிட்லர் சாதித்துக் காட்டப் போகின்றார் என்று உலகம் எதிர்பார்த்தது. வரலாற்றில் முதல் தடவையாக, ரஷ்ய நாடு வேற்று நாடொன்றினால் ஆக்கிரமிக்கப்படப்போகின்றது என்று உலகம் கருதியது.

புயல்வேகத் தாக்குதல்களால், ஆரம்பத்தில் திகைத்து – திணறிய சோவியத் சேனைகள் படிப்படியாகத் தம்மை நிதானப்படுத்தி – எதிர்த்தாக்குதல்களுக்குத் தயாராகின. ஜேர்மனியப் படைகளின் குறி இலக்குகளை அடையாளம் கண்ட சோவியத் தலைவர் யோசப் ஸ்டாலின் எதிர்த்தாக்குதலுக்காக தனது அரசின் படைகளை தயார்ப்படுத்தினார். பரந்து – விரிந்த சோவியத் மண்ணில் அங்கொன்றும் இங்கொன்றுமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தனது படைகளை ஒருங்கிணைத்தார். அவ்விதம் பின்வாங்கிய நிலப்பரப்பில் இருந்து தொழிற்சாலைகளை கழற்றி இடம் மாற்றினார். இடம் மாற்ற முடியாதவற்றை அழித்தார். எதிரியின் கையில் வீழும் எனக் கருதப்பட்ட எண்ணெய் வயல்களையும் – உணவுப் பொருட்களையும் அழித்தார். இராணுவ ரீதியான அனுகூலங்களை ஜேர்மனியப் படைக்கு அமையக் கூடிய எதுவுமே ஜேர்மனியப் படைகளுக்குக் கிடைக்க விடக் கூடாது என்பதில் ஸ்டாலின் கவனமாக இருந்தார். இதை ஜேர்மனியப் படைகள் எதிர்பார்க்கவில்லை. கைப்பற்றப்பட்ட பகுதிகளில் இருந்து தேவையானவற்றைப் பெற்று சண்டைகளைத் தொடர்வது என்ற நாசிப் படைகளின் திட்டம் தவிடுபொடியானது.

சோவியத்தின் மையப்பகுதிகளை நோக்கி தனது படைகளை ஸ்டாலின் உள்ளிழுத்தார். ரஷ்யாவின் காவல் தெய்வமான குளிர்காலம் வரும்வரை சமரை இழுத்தடித்தார். அதேசமயம், புதிதாக ஆட்களைத் திரட்டி பெரும் படையணிகளை உருவாக்கினார். குளிர்காலச் சண்டைகளுக்கென தனது படைகளுக்கு பயிற்சிகளையும் – உபகரணங்களையும்



வழங்கினார். டிசம்பர் மாதம் பிறந்தது. குளிர்காலம் ஆரம்பமானது. பனி விழுந்து நகரெல்லாம் பனிக்காடாகியது. இந்த பனிக்காட்டினுள் கிட்லரின் நம்பிக்கை நட்சத்திரமான கவசப்படையணி செயல் இழந்து சிக்கியது.

எதிரிப்படை குளிரில் நடுங்கியபடி இருக்க, சோவியத் படைகள் தாக்குதலுக்குத் தயாராகின. டிசம்பர் 6–ம் திகதி சோவியத் தளபதி சுக்கோவ் தலைமையில் பாரிய எதிர்த்தாக்குதல்கள் தொடங்கின. சிறந்த பயிற்சியும் – சக்திமிக்க ஆயுதங்களையும் கொண்டிருந்த 100 டிவிசன்கள் தாக்குதலில் இறங்கின. சோவியத்தின் ரி–34 ரக ராங்குகள் பனிப்படலங்கள் மீது வழுக்கி வந்தன. ஜேர்மனி ஏவிய ராங் எதிர்ப்புக் குண்டுகளால் ரி–34 இன் கவசப் பாதுகாப்பை உடைக்க முடியவில்லை. கிட்லர் கருதியதுபோல பலவீனமான படைக்கலங்களுடன் – பயந்தவர்களாக சோவியத் படையினர் களம்புகவில்லை. சுற்றிவளைக்கப்பட்ட நிலையிலும் சோவியத் படையினர் வீரத்துடன் போராடினர் என்றார் ஒரு ஜேர்மன் தளபதி. சோவியத்தின் பலத்தை நாங்கள் குறைத்து மதிப்பிட்டு விட்டோம் என்றார் பார்பறோசாவுக்கு தலைமை தாங்கிய ஜேர்மன் தளபதி. சண்டையில் அழியும் ஒவ்வொரு சோவியத் டிவிசனுக்குப் பதிலாக புதியவற்றை – ஒழுங்காக – களமனுப்பிக் கொண்டிருந்தனர் என்று இன்னொரு ஜேர்மன் தளபதி வியந்திருந்தார். ஸ்டாலின் தலைமை, மக்கள் ஆதரவில்லாத ஒரு ஆட்சி என்றே கிட்லர் நம்பினார். இதனால் ஸ்டாலின் அரசை ஒரு காகித வீடு என்றே அவர் கணித்தார். தனது படைத் தளபதிகளிடம் "நாங்கள் கதவுமீது ஒரு உதை உதைக்க வேண்டியது தான் உழுத்துப்போன கட்டுமானம் பொலபொலவென வீழும்" என்றார்.

எதிர்த்தாக்குதல்களைச் சமாளிக்க முடியாது திணறிக்கொண்டிருந்த பார்பறோசாத் தளபதிகளை நோக்கி கிட்லர் காலக்கெடுக்களை விதித்தார். 10 நாட்களுக்குள் கிறெம்ளினை (மொஸ்கோ) பிடி என்று ஆணையிட்டார். சோவியத் படைகளைச் சுற்றிவளைத்து – தோற்கடித்துத் துடைத்தெறி என்று கட்டளையிட்டார். ஆனால், பின்வாங்குவதைத் தவிர வேறு வழியில்லை என்று நாசிகளின் களமுனைத் தளபதிகள் பதிலளித்தனர். இவர்கள் மீது கிட்லர் பாய்ந்தார். இவர்களை நீக்கிவிட்டு புதியவர்களை நியமித்தார்.

பார்பறோசா இராணுவ நடவடிக்கையை கிட்லர் தனது தனிப்பட்ட கௌரவப் பிரச்சனையாகப் பார்த்தார். 1942 கோடைக்காலத்தில் ஜேர்மன் அணிகள் புதியதொரு தாக்குதலுக்குத் தயாராகின. பார்பறோசாவிற்கு என்று அனுப்பிய 162 டிவிசன்களில் எட்டு டிவிசன்கள் மட்டுமே இந்த புதிய தாக்குதலுக்குத் தயாராகின. மற்றையவை அழிந்து சிதைந்துவிட்டன.

இன்னும் 3 வாரத்தில் ஸ்டாலின் கிராட்டை பிடித்துவிடுவோம் என அதற்குரிய ஜேர்மன் தளபதி அறிவித்தார். ஸ்டாலின் கிராட்டைப் பிடித்த பின்னர் அங்கிருந்து – எங்கு முன்னேறுவது என்பது பற்றிய பணிப்புரைகளையும் கிட்லர் வழங்கிவிட்டார். ஆனால், பிடித்து விடுவோம் என்று உறுதி கூறிய ஜேர்மன் படை சுற்றிவளைக்கப்படும் அபாயம் எழுந்தது. பின்வாங்க விரும்புகின்றோம் என்று அதே ஜேர்மன் தளபதி கிட்லரிடம் அனுமதி கேட்டார். பின்வாங்குவது என்ற சொல் இராணுவ



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அகராதியில் இல்லை என்று கிட்லர் பிடிவாதமாக இருந்தார். இதனால், கிட்லரின் படை அழிவைச் சந்தித்தது.

ஸ்டாலின் கிராட்டிற்கு அருகே நின்றிருந்த ஜேர்மனியின் 6வது படைப் பிரிவை சரணடையும்படி செஞ்சேனை கேட்டது. ஜேர்மன் படை மறுத்தது. 1943 ஜனவரி 10–ம் திகதி சுமார் இரண்டு இலட்சம் ஆட்தொகையைக் கொண்ட அந்த ஜேர்மன் படைப்பிரிவு மீது பீரங்கி மழை பொழியப்பட்டது. சோவியத்தின் ஐயாயிரம் ஆட்டிலறிகள் இந்த தாக்குதலை மேற்கொண்டன. இந்த 6வது படைப்பிரிவை சரணடைய வேண்டாம் என்று கட்டளையிட்டுவிட்டு அதன் தளபதிக்கும் வேறு இருபது பேருக்கும் பதவி உயர்வுகளை, கிட்லர் வானொலிமூலம் வழங்கினார். அதன் தளபதியாக பதவி வகித்த ஜெனரல் பௌல் என்பவருக்கு பீல்ட்மார்சல் பட்டத்தை கிட்லர் வழங்கினார். பட்டமளிப்புடன் கூடவே ஒரு செய்தியையும் அனுப்பினார். ஜேர்மன் வரலாற்றில் ஒரு பீல்ட்மார்சல் எதிரியிடம் உயிருடன் பிடிபடவில்லை என்னும் குறிப்பு அனுப்பினார். (மிகவும் வீரமாகப் போரிட்ட இந்த ஜேர்மன் தளபதி இறுதியில் சோவியத் படைகளால் உயிருடன் பிடிக்கப்பட்டு – போர் முடிந்ததும் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.)

ஒப்பறேசன் பார்பறோசா அனைத்து முனைகளிலும் தோல்விகண்டது. இச் சமரில் ஜேர்மனிக்கு ஏற்பட்ட ஆள் இழப்பு பத்து இலட்சம். இது ஜேர்மனியின் மொத்த படையின் ஆட்பலத்தில் 31 வீதம். 1943 ஜனவரி 30–ம் திகதி ஸ்டாலின் கிராட் சண்டை முடிந்தது. 1944 ஜனவரி 27–ல் லெனின் கிராட் முற்றுகையும் முடிவுக்கு வந்தது. அத்துடன் பார்பறோசா முடிந்தது. மொத்தம் 31 மாதங்கள் பார்பறோசா நடவடிக்கை நடந்தது. பார்பறோசா தோல்வியுடன் இரண்டாம் உலகப் போரின் மூக்கணாங் கயிறு நேச நாடுகளின் அணியிடம் சென்றுவிட்டது.

ஒப்பறேசன் பார்பறோசா தொடங்கப்பட்டவுடன், உலகம் மூச்சைப் பிடித்துக்கொண்டு விக்கித்து நிற்கும் என்று வாயடித்த கிட்லர், பார்பறோசா முடிவின் விளைவுகளால் தனது மூச்சையே நிறுத்தி தற்கொலை செய்து கொண்டார்.

ஸ்டாலின் தலைமையில் பார்பறோசா நடவடிக்கைக்கு எதிராக சோவியத் மக்கள் நடாத்திய வீரம்செறிந்த எதிர்ப்புப் போராட்டம் உலக வரலாற்றில் பொறிக்கப்பட்டுவிட்டது. ஆக்கிரமிப்பை அனுமதிப்பதில்லை என்ற ஸ்டாலினின் உறுதியான நிலைப்பாடும் — சோவியத் குடிமக்கள் தம்மை முழுமையான போர்வீரர்களாக ஆக்கிக் கொண்டதும் மற்றும் சோவியத்தின் காலநிலையும் அவர்களுக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுத்தது.

# விதவைகள் வெறுப்புக்குரியவர்களா?

பெண்கள் சமூகத்தின் கண்கள், தாய்மையின் சிகரம், குடும்பம் என்னும் கோயிலின் உன்னத விளக்கு, உண்மையான தியாகி என்றெல்லாம் புகழப்படுகிறாள். வாயார வாழ்த்தப்படுகிறாள். ஆனால், அவள் கணவனை இழக்கும் போதோ இகழப்படுகிறாள், தூற்றப்படுகிறாள். சமூகத்தின் சாபமாக மதிப்பிடப்படுகிறாள். அவளைச் சுமங்கலி என்று சூழ்ந்து கொண்டவர்கள் விதவை என்று வெறுத்தொதுக்கவும் வெறுப்போடு பார்க்கவும் செய்கிறார்கள். அவள் சந்தோசம், அவள் கனவுகள், அவள் எதிர்காலம் அனைத்தும் சமூகத்திற்கு வேடிக்கையாக அமைந்துவிடுகிறது! சமூகம் எதைச் சாற்றி விடுகிறதோ அதுவே அவர்களுக்கு வாழ்வாகிவிடுகிறது. அவர்களின் உறவுகள் கூட அவளை உதாசீனம் செய்கின்றன.

ஒரு பெண் பிறந்ததிலிருந்து விவாகமாகும் வரை பெற்றோர்களுக்கும் சகோதரர்களுக்கும் அடிமையாகவே வாழ்கிறாள். பிறகு அவள் கணவனுக்கு அடிமைப்பட வேண்டியிருக்கிறது. அவனுடன் அவள் விரும்பியோ விரும்பாமலோ இறக்கும் வரை வாழ்ந்தாக வேண்டும். கணவன் இறந்துவிட்டானென்றால் அவள் அனைத்தையும் இழந்து விடுவாள். சிரித்துப் பேசவும் சிந்தனைக்கு வேலை கொடுத்து ஏதோ ஒன்றைச் செயற்படுத்தவும் அவளுக்கு அனுமதியில்லை.

ஒரு விதவையை இந்த சமூக அமைப்பு மனிதத் தன்மையுடன் வாழ அனுமதித்ததுண்டா? அவளும் ஒரு சராசரிப் பெண்ணே என்று எந்தப் பெண்களாவது நினைத்ததுண்டா? ஒரு விதவையை மணந்தோம் என்றோ அல்லது ஒரு விதவையை மணக்க அனுமதித்தோம் என்றோ எங்காவது ஒரு ஆதாரமுண்டா? என்பதைப் பார்க்கப் போனால் இவ்விடயத்தில் சமூகம் எவ்வாறு அவர்களை ஆட்டிப்படைக்கிறது என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

பெண்களை சகல துறைகளோடும் ஆணுக்கு இணையாக சகல அந்தஸ்துகளோடும் அறிமுகப்படுத்தி போட்டி, கலந்துரையாடல்கள் என்று அமர்க்களப்பட்டுக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில் விதவைகளின் வெற்றியை வெளிப்படுத்தக்கூடிய விதவைகள் விவாகத் தலைப்பை மட்டும் மறந்து விடுகிறார்கள். பெண்நிலைவாதிகளின் இதயங்களில் கூட இவ்விடயம் சிலவேளைகளில் தவறுவதுண்டு.

கணவனை இழந்தால் எல்லோர் முன்னிலையிலும் ஒதுங்கி வாழ்ந்தாக வேண்டும் என்னும் நெறிமுறை இந்த சமூகத்தின் சந்துகளில் இன்னும் சயனித்தே இருக்கிறது.

பெண்ணில்லை என்றால் இவ்வுலகம் இல்லை என்னும் தத்துவத்தை மறந்துவிட்டு விதவைகளான பெண்களை இந்த சமூகம் விலக்கி வைத்திருக்கிறது.

விதவைகள் என்னும் வட்டத்திற்குள் வாழ்ந்துவிடும் போது அவர்களை பகிஸ்கரிப்பதையே இந்தச் சமூகம் நாகரீகமாக நினைக்கிறது. விதவைகள் படித்த, வசதி படைத்த சமுதாயத்தினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் பாமர மக்கள் மத்தியில் இன்றும் அவ்வாறே இருக்கிறது. அப்படியொருபுறமிருக்க,

விதவைகள் சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் அதை ஏற்றுக்கொள்வதற்கு மத அடிப்படை வாதிகளுக்கு மனமில்லை.

விதவைகள் அபசகுனம் என்றும் அமங்கலி என்றும் அலங்கரிக்க இந்தச் சமூகத்தின் ஒவ்வோர் உதடுகளும் தயார்.

"பாரினில் சாதனை செய்வது பெண்கள் என்றான் பாரதி" அவன் பார்வைக்கு நீங்கள் பாத்தியமாக வேண்டும் என்றால் இப்படியான அவல விலங்கை உடைத்தெறிந்து நிமிர்ந்து போராடுவோம்.

- ப. நளினி




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# புலிகள் மீதான தடை

## அவசர கோலத்தில் - அரசியல் விவேகமற்ற செயல்



தலதா மாளிகையின் அருகாமையில் இடம்பெற்ற குண்டு வெடிப்பைத் தொடர்ந்து சந்திரிகா அரசாங்கம் மேற்கொண்ட முக்கியமான முடிவுகளில் விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையும் ஒன்றாகும். இத்தடையானது ஒருபுறம் அரசாங்கத்தின் உணர்ச்சிவசப்பட்ட முடிவாகவும் – மறுபுறம் சிங்களப் பேரினவாத சக்திகளைத் திருப்திப்படுத்தும் நோக்கம் கொண்டதாகவும் இருந்தது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எப்பொழுதும் பதற்றத்திற்கும் ஆத்திரத்திற்கும் உட்பட்டவர் என்பது கடந்த கால அனுபவமே. 1995–ம் ஆண்டு கொலன்னாவ எண்ணைக் குதங்கள் மீது தாக்குதல்கள் இடம்பெற்ற போது இரவு அங்கியுடன் கடற்படைத் தலைமையகத்திற்கு ஓடியமை அவரது பதற்றத்தை வெளிக்காட்டுவதற்கு ஓர் உதாரணம் எனின், கடந்த ஆண்டில் அதிகாரிகள் மட்டத்தில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில், தலதா மாளிகை தாக்கப்படுமானால் தமிழர்கள் மீது தாக்குதல்கள் நடத்துவேன் எனத் தெரிவித்தமை அவர் எத்தனை தூரம் ஆத்திரப்படக் கூடியவர் / உணர்ச்சி வசப்படக் கூடியவர் என்பதையும் வெளிக்காட்டக்கூடியதாகும்.

இந்த நிலையில், தலதா மாளிகைக்கு அருகில் இடம்பெற்ற குண்டு வெடிப்பைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்வதாக ஜனாதிபதி சந்திரிகா முடிவெடுத்தமையானது ஆச்சரியப்படத்தக்கதொரு விடயம் அல்ல. அத்தோடு, இம் முடிவானது ஆத்திரத்தின்பாற்பட்டது என்பதற்கும் – அவசரத்தில் எடுக்கப்பட்ட முடிவு என்பதற்கும் இத்தடை உத்தரவு அறிவிப்பானது எச்சட்டத்தின் பாற்பட்டது என எழுந்துள்ள சர்ச்சையே விளக்கப் போதுமானதாகும்.

அதாவது, இவ் அறிவிப்பானது விசேட வர்த்தமானியால் அறிவித்தலாக வெளிவராத நிலையில் – சாதாரண சட்டத்தின் பாற்பட்டது எனின் அது பாராளுமன்றத்தில் முறையாகச் சட்டமாக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இவ்விரு வழிமுறைகளும் கடைப்பிடிக்கப்பட்டதாக இதுவரை தகவல் இல்லை. அதாவது விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படாத அதேவேளை, பாராளுமன்றத்தில் சட்டமாக்கப்படாமல் அறிவிப்பு வெளிவந்துள்ளது.

இதேசமயம் விடுதலைப் புலிகள் மீதான தடை, சிங்கள மக்களிடம் எழுந்த எதிர்ப்புணர்வுகளுக்கு மதிப்பளித்தே மேற்கொள்ளப்பட்டதாக அரசியல் யாப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் தெரிவித்துள்ள போதும் – கொழும்பில் பிக்குகள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்தே மேற்கொள்ளப்பட்டதாக கொழும்பில் உள்ள அரசியல் விமசகர்கள் தெரிவிக்கின்றனர். ஆனால், தடைக்கான காரணம் எதுவாக இருப்பினும் சந்திரிகா அரசாங்கத்தின் இம் முடிவானது ஆத்திரத்துடனும் அவசரத்துடனும் எடுக்கப்பட்ட முடிவு என்பது மட்டுமல்ல, அரசியல் விவேகமற்ற முடிவு என்றுகூடக் கூறலாம். ஏனெனில், இம்முடிவானது அரசாங்கம் இனப்பிரச்சனை தொடர்பான



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தனது அணுகுமுறைக்குச் சில முட்டுக் கட்டைகளைத் தானே போட்டுக்கொண்டுள்ளதையே வெளிக்காட்டுகிறது.

விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு 'பயங்கரவாத இயக்கம்' எனவும் அதன் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த வேண்டும் எனவும் தொண்ணூற்றியாறாம் ஆண்டில் வெளிநாடுகளில் பெரிய எடுப்பில் சந்திரிகா அரசாங்கம் பிரச்சாரங்களை மேற்கொண்ட போது – உள்நாட்டில் ஏன் தடைசெய்யப்படவில்லை என்ற கேள்வி அங்கு பலமாகவே கேட்கப்பட்டது. ஆனால், அப்பொழுது விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டிய தேவை அரசிற்கு எழலாம் – அதற்கு இத்தடை முட்டுக்கட்டையாக தோன்றலாம். ஆகையினால், உள்நாட்டில் தடைசெய்வது விவேகமான செயலாக இருக்க மாட்டாது என அரச தரப்பால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், தற்பொழுது விடுதலைப் புலிகள் இயக்கம் மீது அவசர அவசரமாக சந்திரிகா அரசாங்கம் விதித்துள்ள தடையுத்தரவானது சந்திரிகா அரசாங்கம் தலதா மாளிகைக் குண்டுவெடிப்பினால் தனது நிதானத்தை இழந்துவிட்டமையையே காட்டுகின்றது. ஏனெனில் இனப்பிரச்சனை விடயத்தில் இன்றும் அரசியற் சூழலில் மாற்றம் எதுவும் ஏற்பட்டதாகவோ – அன்றி இனப்பிரச்சனையில் விடுதலைப் புலிகளின் பங்கு குறைந்துவிட்டதாகவோ இல்லை. மாறாக விடுதலைப் புலிகள் இன்றி இனப்பிரச்சனைக்கான தீர்வு எவையும் சாத்தியமாகப் போவதில்லை என்பதே மேலும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதாவது சிறீலங்கா அரசாங்கம் இனப்பிரச்சனை விவகாரத்தில் விடுதலைப் புலிகளை ஓரங்கட்ட எடுத்துக் கொண்ட முயற்சிகள் யாவும் பெருமளவில் தோல்வியையே கண்டுள்ளன. ஒரு புறம் இராணுவ ரீதியில் மேற்கொண்ட முயற்சிகள் பெரும் தோல்வியைச் சந்தித்துள்ளதோடு அடுத்தகட்டம் குறித்தும் பல நெருக்கடிகளைச் சந்தித்து நிற்கிறது. இதனால், அரசாங்கத்தின் இவ்வாக்குறுதிகள் எவையும் நிறைவு செய்யப்படவில்லை. மாறாக விடுதலைப் புலிகள் இயக்கமே சுதந்திர பொன்விழாவிற்கு முன்னர் மட்டுமல்ல எப்பொழுதுமே தாம் தோற்கடிக்க முடியாத சக்தி என்பதை நிரூபித்துள்ளனர்.

இதைத்தவிர – சந்திரிகா அரசாங்கம் தமிழ் மக்கள் தமது பக்கம் உள்ளனர் என்றும் – தமிழ் மக்களுக்குப் புதிய தலைமைத்துவம் ஒன்று கொடுக்கவும் மேற்கொண்ட முயற்சியும் தமிழ் மக்களினால் தோற்கடிக்கப்பட்டுள்ளது. தமது போராடும் சக்தியாகவும், தலைமைத்துவமாகவும் விடுதலைப் புலிகளையே தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளதையும் யாழ் தேர்தலைப் புறக்கணித்ததன் மூலம் மக்கள் வெளிக்காட்டினர்.



இந்த நிலையில், விடுதலைப் புலிகளை சந்திரிகா அரசாங்கம் தடை செய்துள்ளமையானது, விடுதலைப் புலிகளுக்குப் போட்டுள்ள தடை என்பதை விட தனது அரசியல் நகர்வுகளுக்கு அது போட்டுள்ள முட்டுக்கட்டை என்றே கூறலாம். சில விமர்சகர்கள் இத்தடையானது விடுதலைப் புலிகளுக்கு எதிரான நீண்டகாலப் போருக்கு அரசாங்கம் தயாராகிவிட்டது என்பதை வெளிக்காட்டும் ஓர் அம்சம் என்ற கருத்தை பிரதிபலிக்கின்றனர்.

ஆனால், அது அவ்வாறுதான் இருப்பினும்கூட, அதனால் சந்திரிகா அரசாங்கம் பயன் எதுவும் பெற்றுவிட முடியாது. ஏனெனில், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போர் நடவடிக்கைகளை இத்தடை உத்தரவு எந்த விதத்திலும் பாதிப்பதற்கு வாய்ப்பில்லை என்பது ஒருபுறம் இருக்க, சந்திரிகா அரசாங்கத்தினால் எவ்வளவு காலத்திற்குப் போரிட முடியும் என்பதும் கேள்விக்குரியதே ஆகும். ஏனெனில் ஒருபுறம் போரில் புலிகளை வென்றுவிட முடியாது என்பதும், மறுபுறம் சந்திரிகா குமாரதுங்காவின் ஆட்சிக்காலம் எல்லைகளுக்கு உட்பட்டது என்பதும் நிராகரித்து விட முடியாத யதார்த்தங்களாகும்.

**– ரமணன்**

## சிறீலங்கா மீள ஒன்றிணைக்க முடியாத தேசம்

நாங்கள் எங்களுடைய நடவடிக்கைகளின் பின்விளைவுகளோடு வாழ்ந்தேயாக வேண்டும். எங்களுடைய சொந்த மக்களுக்கு நாங்கள்தான் பொறுப்பாளிகள். அவர்களுக்காக நாங்கள் சரியான முடிவுகளை எடுக்கவேண்டும்.

பழைய பிலிப்பைன்சைப் பாருங்கள். பழைய சிலோன், பழைய கிழக்குப் பாகிஸ்தான் மற்றும் பிற உதாரணங்கள். அத்தகைய நாடுகளுக்கும், இடங்களுக்கும் சென்றுள்ளேன். 1956–ம் ஆண்டு முதல் தடவையாக நான் கொழும்பு சென்ற போது அது சிங்கப்பூரிலும் பார்க்க நல்ல நகரமாக இருந்தது. ஏனெனில், சிங்கப்பூரில் மூன்றரை வருட கால ஜப்பானிய ஆக்கிரமிப்பும் கொழும்பில் மவுண்ட் பேட்டனின் தென் கிழக்காசியாவிற்கான இராணுவ தலைமையகமும் அமைந்திருந்தது. அவர்களிடம் ஸ்ரேலிங்குகள் கையிருப்பில் காணப்பட்டன. இரண்டு பல்கலைக்கழகங்கள் காணப்பட்டன. போருக்கு முன்னர் கல்வியறிவூட்டப்பட்ட திறமைசாலிகள் நிறைந்திருந்தனர். ஆனால், இன்று அப்படியல்ல. ஒரு மனிதன், ஒரு வாக்கு என்ற முறை சிங்களப் பெரும்பான்மையை தமிழ்ச் சிறுபான்மை மீது ஆக்கிரமிப்புச் செலுத்துவதற்கு வழிகோலியது. தமிழர்கள் திறமைசாலிகளாகவும் கடுமையாக உழைப்பவர்களாகவும் இருந்தும் தண்டிக்கப்பட்டுவிட்டனர். ஆங்கிலம் வெளியேறிவிட்டது. அவர்கள் (தமிழர்கள்) ஆங்கிலத்தில் பயிற்றுவிக்கப்பட்டவர்கள். சிங்களம் உள்வளைந்துவிட்டது. அவர்கள் இரு பல்கலைக்கழகங்களிலும் கோட்டா முறையை (தரப்படுத்தல்) பெற்றுவிட்டனர். இவர்கள் இன்று தீவிரவாதப் புலிகளாகிவிட்டனர்.

இந்நாட்டை மீள ஒன்றிணைக்கவே முடியாது.

(அரச முறையை) இலகுவாக்க வேண்டும் அல்லது (நாட்டை) உடைக்கவேண்டும் என்பதை யாராவது ஒருவர் அவர்களுக்குச் சொல்லவேண்டும். திரும்பிப் பார்த்தால் துன்கு புத்திசாலி என்று கூறவேண்டும் (முன்னாள் மலேசியப் பிரதமரான துன்கு மலேசியாவிலிருந்து சிங்கப்பூர் பிரிவதற்கு அனுமதித்தவர்.)

நான் இலகுவாக்கும் தேர்வை அவருக்கு முன்வைத்தேன். ஆனால், அவர் கூறினார் "சரியான வெட்டு. நீங்கள் உங்கள் பாட்டில் செல்லுங்கள்". நாங்கள் ஒன்றாக இருந்திருப்போமாயின், நான் கொழும்பையும் சிலோனையும் திரும்பிப் பார்க்கின்றேன்.

சிலவேளைகளில் உங்களால் கடவுளை ஏமாற்ற முடியும். ஆனால், உங்களுடன் வாழும் மக்களை ஏமாற்ற முடியும் என நான் நினைக்கவில்ல. அவர்கள் (சிலோன் போன்ற நாடுகள்) தோல்வியுற்றார்கள் எனினில் அவர்களிடம் பலவீனமான அல்லது பிழையான தலைவர்கள் இருந்தார்கள்.

சிங்கப்பூரின் தந்தையாக வர்ணிக்கப்படும் லீ குவான் யூ அவர்களின் சிந்தனைகளை உள்ளடக்கி வெளிவந்த தொகுப்பு ஒன்றில் காணப்பட்ட குறிப்பு.




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# உடைந்துபோன ஒப்பந்தமும் உறுதி தளராத புலிகளும்

பத்து ஆண்டுகளுக்கு முன்பே இறந்து போன இந்திய – இலங்கை ஒப்பந்தம் மீது இப்போது புதிதாக ஒரு பிரேத பரிசோதனை நடைபெற்று இருக்கின்றது. இந்த பரிசோதனையை நடத்தி இருப்பவர் முன்னாள் இந்தியத் தூதுவர் J.N. DIXIT. ASSIGNMENT COLOMBO என்ற தலைப்பில் அவர் எழுதி வெளியிட்டுள்ள இந்நூல் ஒப்பந்தம் பிறந்த காலத்தில் இருந்து இறந்த காலம் வரையிலான ஒரு நீண்ட மரண விசாரணையை நடத்துகிறது. காலம் கடந்த விசாரணையாகவே இந்நூல் பலராலும் விமர்சிக்கப்படுகின்றது. ஒப்பந்தம் என்ற இராஜதந்திர நாடகம் அரங்கேற்றப்பட்டு ஒரு தசாப்தம் கழிந்துவிட்டது. இந்த நாடகத்தின் பிரதான இயக்குநர்களும், கதாநாயகர்களும் இப்போது உயிருடன் இல்லை. அப்போது ஒப்பந்தம் கடும் சர்ச்சையைக் கிளப்பி வடகிழக்கில் கொடும் யுத்தத்தையும் தெற்கில் பெரும் வன்முறைப் புயலையும் தூண்டிவிட்டபோது வாய்மூடி மௌனம் சாதித்த டிக்சிற் அவர்கள் நீண்டகால இடைவெளியின் பின்னர் இந்திய வரலாற்றின் கறைபடிந்த பக்கங்களைத் திருப்பிப் பார்க்க முற்பட்டது வேடிக்கையான விடயமே. பற்றற்ற நிலையில் நின்று, நிதானமாகச் சிந்தித்து, புறநிலைப் பார்வையுடன் தெளிவாக எழுத காலம் தேவைப்பட்டதாக அவர் காரணம் சொல்கிறார். இந்தக் காரணத்தை யாரும் ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. இந்திய தலையீட்டால் எழுந்த அரசியல் சூறாவளி அடங்கிப் போகும் வரையும் அவர் காத்திருந்தார் என்பது தான் உண்மை. இந்த அரசியல் சூறாவளியில் ஒப்பந்த பிரமுகர்கள் பலர் அள்ளுப்பட்டுச் சென்றதும் அவருக்கு வாய்ப்பாக அமைந்தது எனலாம்.



டி. என். டிக்சிற்

நீண்ட காலம் தவம் இருந்து, மாண்டு போன நினைவுகளை இரை மீட்டுப் பார்த்து டிக்சிற் எழுதியிருக்கும் இந்நூல்

**அன்ரன் பாலசிங்கம்**



www.tamileelamarchive.com


தமிழீழ ஆவணக் காப்பகம்

வரலாற்று உண்மையின் புதிய தரிசனமாக அமையவில்லை. உண்மைக்கு முகம் கொடுக்க அவர் தயாராகவில்லை. இந்திய இராஜதந்திரத்தின் இமாலயத் தோல்விகளுக்கு நியாயம் கற்பிக்கும் வாத விளக்கமாகவே அவரது இந்நூல் அமைகின்றது. இந்திய தலையீடானது தவிர்க்கமுடியாத வரலாற்று ரீதியில் எழுந்தது என்பதும், இந்தியாவினதும், இலங்கையினதும் நீண்டகால நலனைப் பேணுவதே அதன் நோக்கமாக இருந்தது என்பதும் அவரது வாதம். இந்த உன்னதமான இராஜரீக முயற்சியை சுயநலம் கொண்ட தீய சக்திகள் குழப்பிவிட்டதாக அவர் அவஸ்தைப்படுகிறார். இந்திய தலையீடு பற்றிய வரலாற்றுப் பதிவேட்டில் தவறுகளும், தப்பபிப்பிராயங்களும் பொதிந்து கிடப்பதாகக் குறிப்பிடும் அவர் சீர்கெட்டு கிடக்கும் இந்த வரலாற்றுப் பதிவினை சீர்செய்து விடுவதே தனது எழுத்தின் நோக்கம் என்கிறார். டிக்சிற்றின் நோக்கம் இங்கு தெளிவாகப் புலனாகின்றது. விழுந்தவன் மீசையில் மண் ஒட்டவில்லை என்ற வாதமாக இந்திய இராஜதந்திரம் தோல்வி கண்ட வரலாற்றுக்கு வெற்றிமாலை அணிந்துவிட அவர் முயற்சிக்கின்றார். இந்த முயற்சியினால் சரிந்து போன வரலாற்றுப் போக்கினை நிவர்த்தி செய்துவிடலாம் என அவர் எண்ணுகிறார் போலும். இந்தியத் தலையீடானது 1983–ல் இருந்து 90 வரையான வரலாற்றுக் காலத்தையும், அந்தக் காலத்தில் கட்டவிழ்ந்த பூகம்ப நிலைகளையும், திருப்பங்களையும் கொண்டது. ஆனால், இராஜதந்திர, இராணுவ பரிமாணங்களைக் கொண்ட இந் நிகழ்வுகளையும், அதனால் எழுந்த வரலாற்றுத் திருப்பங்களையும், மாற்றங்களையும் ஒரு தனி நபரின் தனி விமர்சனக் குறிப்புகள் மாற்றிவிட முடியாது. இக்கால விளிம்பின் ஒரு கால கட்டத்தில் இராஜதந்திர காய் நகர்வு சூத்திரதாரியாக டிக்சிற் செயல்பட்டார் என்பது உண்மை. ஒப்பந்தத்தின் சிருஷ்டி கர்த்தாக்களில் ஒருவராகவும் அவர் பணி புரிந்திருக்கின்றார். தனது கொழும்பு இராஜதந்திர பணியின் உச்ச பெறுபேறாக பெற்றெடுக்கப்பட்ட ஒப்பந்தக் குழந்தை குறைமாதத்தில் இறந்துபோனது அவருக்கு ஆழ்ந்த ஏமாற்றத்தையும் கொடுத்திருக்கின்றது. இந்த மரணத்திற்கு காரண காரியத்தை ஆராயும் அவர் அதனை இந்திய இராஜதந்திரத்தின் தோல்வியாக ஏற்றுக் கொள்ள மறுக்கிறார். இது அவரது நேர்மையின்மையை புலப்படுத்திக் காட்டுகின்றது. அவரது ஆய்வு நூலின் தோல்வியும் அதுதான்.

டிக்சிற்றின் நூல் கனமானதாக இல்லை. அரசியல் பிரச்சனைகள் ஆழமானதாக அலசப்படவில்லை. ஒரு பழுத்த இராஜதந்திரிக்கு இருக்க வேண்டிய விவேகமும், சாணக்கியமும் அவரது எழுத்தில் காணக்கூடியதாக இல்லை. சுயசரிதை சித்திரமாக தனது கொழும்புப் பணியை சித்தரித்து, தனது உறவுகளையும், உரையாடல்களையும் விபரித்து, தான் உறவாடியவர்களின் தனிமனிதப் பண்புகளை விளக்கி பத்திரிகைப் பாணியில் கால வரிசையில் நிகழ்வுகளை நகர்த்திச் செல்கின்றார். இந்த விபரண சித்தரிப்பில் அடிப்படைப் பிரச்சனைகள் ஆழமாகப் பார்க்கப்படவில்லை. மாறாக, ஆட்களும், அவர்களது ஆளுமைகளும், அவர்களது விருப்பு வெறுப்புக்களும் மேலோங்கி நிற்கின்றன. அதிகாரத்தில் உள்ள ஆட்களை பகடைக் காய்களாக நகர்த்தும் சதுரங்க ஆட்டமாக டிக்சிற்றின் ராஜதந்திரம் திகழ்கின்றது. பிரச்சனைகளின் புறநிலைகளைப் பார்க்காது பிரமுகர்களைக் கைக்குள் போட்டுக் காரியத்தை சாதிக்க முயன்றதால்தான் இந்திய இராஜதந்திரம் தோல்வி கண்டது எனலாம். தமிழரின் இனப் பிரச்சனையின் ஆழம், அகலம் பற்றியும் அப்பிரச்சனையானது தன்னாட்சி கோரும் தேசியப் போராட்ட வடிவம் எடுத்த வரலாற்று புறநிலை பற்றியும் டிக்சிற் மட்டுமல்ல அன்றைய இந்தியத் தலைவர்களும் செம்மையாகப் புரிந்து கொள்ளவில்லை. அதேசமயம்



சிங்களத் தேசியத்தில் விஸ்வரூப பரிமாணம் பெற்றிருந்த தமிழ் விரோதப் பேரினவாதப் போக்குப் பற்றியும் அவர்கள் சரியாக எடை போட்டதாகத் தெரியவில்லை. ஒட்டுமொத்தத்தில் தமிழ் சிங்கள தேசங்கள் மத்தியில் கூர்மை பெற்றிருந்த முரண்பாட்டை தெளிவாகப் புரியாமல் பிளவுபட்டு நின்ற இரு தேசிய சக்திகளை தனது புவியியல் நலனுக்காக ஒன்றிணைய நிர்ப்பந்தித்ததன் காரணமாகவே இந்திய தலையீடு தோல்வியில் முடிந்தது. இந்த வரலாற்று உண்மையை டிக்சிற் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார். டிக்சிற்றின் பார்வையில் இந்திய – இலங்கை ஒப்பந்தம் புனிதமான நோக்கைக் கொண்டது. தமிழர்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அரசியல் தீர்வும் அதில் உண்டு





www.tamileelamarchive.com

என்கிறார். சிங்களவர்களின் அபிலாசைகளை நிறைவு செய்யும் வகையில் ஒற்றையாட்சியும் நில ஒருமைப்பாடும் வலியுறுத்தப்பட்டிருப்பதாகக் கூறுகிறார். இப்படியாக இவ் ஒப்பந்தம் தமிழரதும், சிங்களவரதும் நலத்தைப் பேணும் ஒரு தலை சிறந்த உடன்பாடாக அமைந்திருக்கின்றது என்பது டிக்சிற்றின் வாதம். இது மேலோட்டமான சிறுபிள்ளைத்தனமான ஒரு கண்ணோட்டம். உருப்படியான அரசியல் அதிகாரம் எதுவும் அற்ற மாகாணத் திட்டமானது தனி அரசு கோரிப் போராடிவரும் தமிழ் இனத்தின் அபிலாசைகளைத் திருப்திப் படுத்திவிடும் என டிக்சிற் நினைப்பது அபத்தமானது. அதே சமயம் பிரதேச ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் ஒற்றையாட்சியின் கீழும் தமிழருக்கு உரிமை வழங்க சிங்களத் தலைமை தயாராக இல்லை என்பதையும் அவர் உணரவில்லை. தமிழரின் தேசியப் போராட்டத்தின் அடிப்படைகள் பற்றியோ, தமிழர்கள் மீது சிங்கள பௌத்த பேரினவாதம் கொண்டிருந்த விபரீதமான பகையுணர்வு பற்றியோ அவர் ஆழமாகப் புரிந்து இருக்கவில்லை என்பதுதான் உண்மை. இந்த அறியாமை இருள் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தில் மட்டுமின்றி டெல்லி அரச நிர்வாகத்திலும் பரந்து கிடந்தது. இந்தியா இலங்கையில் தலையிட்டமைக்கு இரண்டு காரணங்களைக் கூறுகின்றார் டிக்சிற்.

1) தீவிரம் அடைந்துவந்த தமிழரின் இனப்பிரச்சனை தமிழர்கள் மிக மோசமான அரச ஒடுக்குமுறைக்கு ஆளாகி வந்தனர். இந்த ஒடுக்குமுறை இன அழிப்பு பரிமாணத்தை எட்டியது. இதன் எதிர் விளைவாக தமிழகத்தில் கொந்தளிப்பான அரசியல் நிலைமை தோன்றியது. ஈழத்தமிழர்களுக்கு இந்தியா உதவ வேண்டும் என்ற கோரிக்கையும் வலுத்தது. இந்தியா தலையிடாது போனால் தமிழகத்தில் தமிழ் தேசியவாதம் மீண்டும் உயிர்பெற்று எழுந்து பிரிவினை வாதத்திற்கு வழிகோலி இருக்கும். இது பாரத நாட்டின் ஐக்கியத்திற்கும், பிரதேச ஒருமைப்பாட்டிற்கும் அச்சுறுத்தலாக முடியும் என்கிறார்.

2) தமிழரின் உரிமைப் போராட்டத்தை நசுக்கும் போக்கில் ஜெயவர்த்தனா அரசு இந்தியாவிற்கு விரோதமான அன்னிய சக்திகளின் ஊடுருவலுக்கு இடம் அளித்து வந்தது. சீனா, பாகிஸ்தான், இஸ்ரேல் போன்ற நாடுகளில் இருந்து உதவியைப் பெற்றுவந்தது. அமெரிக்காவின் குரல் என்ற அமெரிக்க ஒலி



பரப்பு நிறுவனம் சிலாபக் கடல் ஓரத்தில் களம் அமைக்க இடம் அளித்திருந்தது. திருகோணமலை எண்ணைக் குதங்களை திருத்தி அமைக்கும் வேலைத் திட்டத்தை அமெரிக்க நிறுவனம் ஒன்றிற்கு கையளித்திருந்தது. இப்படியாக அமெரிக்க வல்லரசு இலங்கையில் காலூன்றுவதற்கு ஜயவர்த்தனா அரசு வழிவகுத்துக் கொடுத்தது. சோவியத் யூனியன் ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்து நின்ற காலம் அது. இச் சூழலில் ரஷ்ய ஆக்கிரமிப்பை முறியடிக்க அமெரிக்கா, சீனா, பாகிஸ்தான், இஸ்ரேல் போன்ற நாடுகள் கூட்டாகச் செயல்பட்டன. நட்பு நாடு என்ற ரீதியில் இந்தியா மீது நெருக்குதல் கொடுக்கவும் இந்நாடுகள் முயன்றன. இந்த அன்னிய சக்திகள் இலங்கையில் ஊடுருவி கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த தென் பிராந்தியத்தில் ஒரு அழுத்த முனையை உருவாக்க முயன்றனர். இது இந்தியாவின் தேசிய பாதுகாப்பிற்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்தது என்கிறார்.

டிக்சிற் கூறும் இவ் இரு காரணங்களையும் பரிசீலனை செய்து பார்க்கும் போது இந்தியா தனது சொந்த நலனைப் பேணவே இலங்கையில் தலையிட்டது என்பது தெட்டத் தெளிவாகின்றது. இன அழிவை எதிர்கொண்டு நின்ற தமிழர்களுக்கு உதவி செய்து இனப் பிரச்சனையைத் தீர்த்து வைக்கும் நோக்குடன் இத்தலையீடு நிகழவில்லை. இலங்கையில் காலடி எடுத்துவைக்க தமிழர் பிரச்சனையை ஒரு இறங்கு தளமாகவே இந்தியா நல்லெண்ண முயற்சியில் இறங்குவதாக சர்வதேச உலகிற்கு காட்டிக் கொண்டு தனது புவிசார் கேந்திர நலனை நிலைநிறுத்திக் கொள்ளவே இந்தியா இலங்கையில் குறுக்கிட்டது. இந்திய – இலங்கை ஒப்பந்த இணைப்பில் உள்ள விதிகள் இதனைத் தெளிவாகப் புலப்படுத்திக் காட்டுகின்றன.

அமெரிக்கா, பாகிஸ்தான், இஸ்ரேல் போன்ற நாடுகள் இந்திய நலனுக்கு விரோதமான செயல்பாடுகளில் ஈடுபடுவதற்கு இலங்கை அரசு தளம் அமைத்துக் கொடுக்கக் கூடாது என விதிகள் கட்டுப்பாடுகளை விதிக்கின்றது. இந்திய – இலங்கை ஒப்பந்தம் சமத்துவத்தின் அடிப்படையில் இரு நாடுகளினதும் பரஸ்பர நலன்களைப் பேணுகிறது என்கிறார் டிக்சிற். இந்த பரஸ்பர நலன்கள் யாவை. இந்தியாவிற்கு விரோதமான அன்னிய சக்திகளின் ஊடுருவல்களை இலங்கை அரசு தடுத்து நிறுத்த வேண்டும். இது இந்திய நலனைப் பேணும். இதற்கு பிரதிபலனாக தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கு முடிவுகட்டி தமிழரின் பிரிவினைப் போக்கை இந்தியா தடுத்து நிறுத்தும். விடுதலைப் புலிகளிடம் இருந்து ஆயுதங்களைப் பறித்து, மாகாணத் தீர்வைத் தமிழர்கள் மீது திணிப்பது மூலம் இது சாத்தியமாகும். இதனால், இலங்கையின் ஒற்றையாட்சி பலப்படும். அத்தோடு இலங்கையின் ஐக்கியத்திற்கும் பிரதேச ஒருமைப்பாட்டிற்கும் இந்தியா உத்தரவாதம் அளிக்கும்.

இவ்விதம் இலங்கையின் தேசிய நலனை இந்தியா பேணிப் பாதுகாக்கும். எனவே, இந்திய – இலங்கை ஒப்பந்தமானது சாராம்சத்தில் இரு தரப்பினரும் நலன்களைப் பேணுவதாக இருக்கிறது என விளக்குகின்றார் டிக்சிற். இந்த



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

விளக்கத்தில் இருந்து இந்தியாவின் இராஜதந்திர தந்திரோபாயம் தெளிவாகின்றது. தமிழரின் தேசிய நலனை விலையாகக் கொடுத்து தனது நலனையும் சிங்களத்தின் தேசிய நலனையும் பேண முனைந்தது இந்தியா.

தமிழரின் தன்னாட்சி உரிமையை இவ் ஒப்பந்தம் சமாதி கட்ட முனைந்தது என்பதாற்தான் விடுதலைப் புலிகள் இயக்கம் ஒப்பந்தத்தினை எதிர்த்தது. இவ் ஒப்பந்தமானது இலங்கைத் தீவின் சுயாதீனத்தையும் இறைமையையும் கட்டுப்படுத்துகின்றது என்பது ஜெயவர்த்தனாவிற்குத் தெரியாதது அல்ல. இருந்தும் அவர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் துணிந்தார். இலங்கையின் சுதந்திரம் பாதிக்கப்பட்டாலும் தமிழர்கள் சுதந்திரமாக வாழக்கூடாது என்பதில் அவர் கண்ணும் கருத்துமாக இருந்தார். இந்தியாவைப் பயன்படுத்தி தமிழரின் தன்னாட்சிப் போருக்கு முதலில் முடிவு கட்ட வேண்டும். பின்னர் ஒப்பந்தத்தை செயல் இழக்கச் செய்து இந்திய ஆதிக்கப் பிடியில் இருந்த விடுபட வேண்டும் என்பது அவரது திட்டம். ஜெயவர்த்தனாவின் தந்திரம் இந்திய இராஜ தந்திரத்தை மிஞ்சி நின்றது என்பதை டிக்சிற் புரிந்து கொள்ளவில்லை.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் ஒப்பந்தத்தை எதிர்த்தார் என்றும், பிரேமதாசா, லலித் போன்றோர் ஒப்பந்தத்தை முறியடிக்கச் சதி செய்தனர் என்றும், ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தை அமுல் நடத்த மறுத்தார் என்றும் ஒப்பந்ததின் தோல்விக்குக் காரணம் கற்பிக்கின்றார் டிக்சிற்.

இந்தவாதம் தவறானது. ஒப்பந்தத்தில் உள்ள குறைபாடுகளே ஒப்பந்தத்தின் தோல்விக்குக் காரணம் என்பதை ஏற்றுக்கொள்ள மறுக்கும் டிக்சிற் எல்லோருக்கும் நன்மை பயக்கும் ஒரு நல்ல காரியத்தை எல்லோரும் சேர்ந்து கெடுத்து விட்டார்கள் என வினவுவது கேலிக்கூத்தானது. இந்த ஒப்பந்தமானது இந்தியாவின் மேலாதிக்க பசியைத் திருப்திப்படுத்தியதே தவிர எம்மையோ, சிங்களவரையோ திருப்திப்படுத்தவில்லை என்பதுதான் உண்மை. பிணக்குப்பட்ட இரு பூனைகளுக்கு அப்பத்தைப் பிரித்துக் கொடுப்பதாகக் கூறித் தான் பசியாறிய குரங்கின் கதைதான் நினைவுக்கு வருகின்றது.

இரு நாடுகளது வெளியுறவையும், தமிழ் சிங்கள தேசிய இனங்களின் நீண்ட காலச் சிக்கலையும் தீர்க்க முயன்ற ஒரு முக்கிய ஒப்பந்தம் வெகுசன கருத்தாடலுக்கு விடுபடாது திரைமறைவில் அவசரமாக, ரகசியமாக செய்து கொள்ளப்பட்டது. இந்த உண்மையை மறுதலிக்கின்றார் டிக்சிற். ஒப்பந்தம் பற்றி விடுதலைப் புலிகள் உட்பட எல்லாத் தரப்பினருடனும் ஆழமாக விரிவாகக் கலந்து ஆலோசிக்கப்பட்டதாகக் கூறும் அவர் விசமத்தனமான ஒரு பொய்யையும் புனைந்து விடுகின்றார். விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் ஆரம்பத்தில் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வதாக வாக்களித்துவிட்டு பின்னர் ஒப்பந்தத்தை எதிர்த்து நம்பிக்கைக் கேடு செய்தார் என்பது டிக்சிற்றின் குற்றச்சாட்டு. எந்தக் கட்டத்திலும் பிரபாகரன் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக ஆரம்பத்தில் இருந்து இறுதிவரை ஒப்பந்தத்தை அவர் எதிர்த்து நின்றார் என்பது உண்மை. இது டிக்சிற் மட்டுமின்றி உலகத்திற்கே நன்கு தெரியும். ஒப்பந்தத்தை எதிர்த்து நின்றது மட்டுமல்லாமல் ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த வந்த இந்திய இராணுவத்திற்கு எதிராகவும் ஆயுதம் ஏந்திப் போராடினார் என்பதும் உலகறிந்த உண்மை.

இந்திய – இலங்கை ஒப்பந்தமானது தமிழர்களின் தன்னாட்சி உரிமைக்கு ஆப்பு வைக்கும் அடிமைச் சாசனம் என்பது தலைவர் பிரபாகரனின் நிலைப்பாடு.

1987 யூலையில் இந்திய உதவி தூதுவர் பூரி யாழ்ப்பாணம் வருகை தந்து ஒப்பந்தம் பற்றி புலிகளோடு கலந்து உரையாடி தலைவர் பிரபாகரனின் ஒப்புதலைப் பெற்று அவரை டெல்லிக்கு அழைத்து வந்தார் என இன்னொரு கட்டுக்கதையை அவிழ்த்து விடுகின்றார் டிக்சிற். உதவித் தூதுவர் பூரி யாழ்ப்பாணம் வருகைதந்தது உண்மை. ஆனால், அவர் ஒப்பந்தம் பற்றி புலிகளோடு கலந்துரையாடவில்லை. ஏதோ முக்கிய விடயமாக பாரதப் பிரதமர் சந்திக்க விரும்புவதாகப் பொய் சொல்லி ஏமாற்றித் தலைவர் பிரபாகரனை புதுடெல்லிக்கு அழைத்துச் செல்லவே அவர் வந்தார். புதுடெல்லியில் அசோகா விடுதியில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட நிலையில்தான் புலிகளுக்கு முதன் முதலாக ஒப்பந்தம் அறிமுகம் செய்யப்பட்டது. இந்த அறிமுகத்தைச் செய்தவரும் டிக்சிற்தான். ஒப்பந்தத்தில் நிறையக் குறைபாடுகள் இருப்பதாகச் சுட்டிக் காட்டி ஒப்பந்தத்தை ஏற்க மறுத்தார் தலைவர் பிரபாகரன். டிக்சிற் விளக்கம் கொடுத்தார். அழுத்தங்கள் கொடுத்தார். மிரட்டியும் பார்த்தார். முடியவில்லை. தலைவர் பிரபாகரன் தனது நிலைப்பாட்டில் உறுதி தளராது நின்றார். பின்னர் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியுடனான சந்திப்பின்போதும் தலைவர் பிரபாகரன் தனது எதிர்ப்பைக் காட்டி தனது நிலைப்பாட்டில் இறுக்கமாக நின்றார். இறுதி வரை ஒப்பந்தத்தை அவர் ஏற்கவில்லை. இதுதான் உண்மை. இந்திய – இலங்கை ஒப்பந்தம் சம்பந்தமாக விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தி 04.08.1987–ல் சுதுமலையில் தலைவர் பிரபா





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கரன் நிகழ்த்திய உரையில் இருந்து சில பந்திகள் –

"திடீரென மிகவும் அவசரமாக எமது மக்களையோ, எமது மக்களின் பிரதிநிதிகளாகிய எம்முடனோ கலந்து ஆலோசிக்காமல் இந்தியாவும் இலங்கையும் செய்துகொண்ட ஒப்பந்தம் இப்பொழுது அவசர அவசரமாக அமுலாக்கப்பட்டு வருகின்றது என்பதை நீங்கள் அறிவீர்கள். நான் டெல்லி செல்லும் வரை இந்த ஒப்பந்தம் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. பாரத பிரதமர் என்னை சந்திக்க விரும்புவதாகக் கூறி என்னை டெல்லிக்கு அவசரமாக அழைத்துச் சென்றார்கள். அங்கு சென்றதும் இந்த ஒப்பந்தம் எமக்கு காண்பிக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் பல சிக்கல்கள் இருந்தன. பல கேள்விக் குறிகள் இருந்தன. இந்த ஒப்பந்தத்தில் எமது மக்களின் பிரச்சனைக்கு ஒரு நிரந்தர தீர்வு ஏற்படுமா என்பது பற்றி எமக்கு சந்தேகம் எழுந்தது. ஆகவே, இந்த ஒப்பந்தத்தை நாம் ஏற்றுக் கொள்ளமுடியாது என்பதை இந்திய அரசிற்கு தெட்டத் தெளிவாக விளக்கினோம். இந்த ஒப்பந்தம் நேரடியாக எமது இயக்கத்தைப் பாதிக்கின்றது. எமது அரசியல் இலட்சியத்தைப் பாதிக்கின்றது. எமது போராட்ட வடிவத்தைப் பாதிக்கின்றது. எமது ஆயுதப் போராட்டத்திற்கு ஆப்பு வைப்பதாகவும் அமைகின்றது. 15 வருடங்களாக இரத்தம் சிந்தி, தியாகங்கள் புரிந்து, சாதனைகள் ஈட்டி எத்தனையோ உயிர்ப்பலி கொடுத்து கட்டி எழுப்பப்பட்ட ஒரு போராட்ட வடிவம், இந்திய இராஜதந்திர நிலையினால் தோல்வி நிலைப்படுவது என்றால் அதை எம்மால் ஜீரணிக்க முடியாமல் இருக்கின்றது. தமிழீழ தனி அரசே தமிழீழ மக்கள் பிரச்சனைக்கு ஒரு நிரந்தர தீர்வை அளிக்கும் என்பதில் எனக்கு அசையாத நம்பிக்கை உண்டு. தமிழீழ இலட்சியத்திற்காகவே நான் தொடர்ந்து போராடுவேன் என்பதை நான் திட்டவட்டமாக இங்கு எடுத்துக் கூற விரும்புகின்றேன்"

10 ஆண்டுகளுக்கு முன்னர் ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஒரு சில நாட்களின் பின்னர் தலைவர் பிரபாகரன் வெளியிட்ட பகிரங்கப் பிரகடனம் இது. ஒப்பந்தம் பற்றிய அவரது நிலைப்பாடு என்ன என்பது இக்கூற்றுக்களில் இருந்து தெளிவாகின்றது அல்லவா. விடுதலைப் புலிகள் சம்பந்தமாக பல பொய்களும் புரட்டுக்களும் டிக்சிற்றின் நூலில் மலிந்து கிடக்கின்றன.

சிறீலங்கா அரசின் ஒப்பரேசன் லிபரேசன் (Operation Liberation) இராணுவ நடவடிக்கையால் தோல்வியின் விளிம்புக்குத் தள்ளப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கம் அரசியல் இணக்கப்பாட்டிற்கு முன்வந்தது என்ற ஒரு புரளியைக் கட்டவிழ்த்து விடுகிறார் டிக்சிற். இந்த தகவலை புலிகளின் சிங்கப்பூர் பிரதிநிதி இந்துப் பத்திரிகை நிருபர் ராமுக்குத் (RAM) தெரிவித்தாராம். ராம் அதனை இந்திய அரசிற்குத் அறிவித்தாராம். இந்த தகவலை நம்பியே இந்திய அரசு சிறீலங்கா அரசுடன் பேசியதாம். இந்த பேச்சின் பலனாகவே ஒப்பந்த யோசனைகள் பிறந்ததாம். இப்படியான ஒரு புனைக்கதையை சோடிக்கின்றார் டிக்சிற். யார் இந்த பூடகமான சிங்கப்பூர்ப் புலி என்பதை அவர் சொல்லவில்லை. விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்தில் இருந்து அதிகார பூர்வமாக வெளிவராமல் வெளிநாடு ஒன்றில் பெயர் தெரியாத மனிதன் ஒருவர் தெரிவித்ததாகக் கூறும் தகவலை ஆதாரமாகக் கொண்டு இந்திய அரசு சமரசத் திட்டங்களில் இறங்கியது என்னும் கேலிக்கூத்தான விடயமே இந்திய ஆற்றலைக் கேள்விக் குறியாக்குகின்றது. அன்று யாழ் மீதான இராணுவ நடவடிக்கையால் புலிகள் இயக்கம் அப்படி ஆட்டம் கண்டுவிடவில்லை. வடமராட்சியில் மில்லரின் தற்கொடைத் தாக்குதலால் சிங்கள இராணுவம்தான் கதிகலங்கி நின்றது. இந்த தாக்குதலின் அதிர்ச்சியால் சிங்கள அரசுதான் பேச்சுக்கு பணிந்து வந்தது. புலிகள் பயந்து பணிந்து வந்தனர் என்பது டிக்சிற்றின் கற்பனையில் உதித்த கட்டுக்கதை.

விடுதலைப் புலிகளின் இலட்சியம் தமிழீழம் அல்ல. பெரும் ஈழம் என்கிறார் டிக்சிற். இலங்கைத் தீவின் வடகிழக்கும், தமிழ்நாடும், தென்கிழக்கு ஆசிய தமிழ் பேசும் பிரதேசங்களும், மொரிசியன் தீவுமாக அகன்று பரந்த தமிழ் இராச்சியம் ஒன்றைக் கட்டியெழுப்புவதே புலிகளின் இலட்சியக் கனவு என்கிறார். பெரும் ஈழமாக அகன்ற தமிழ் சாம்ராச்சியத்தை கட்டும் இந்த கருத்து வடிவம் புலிகளின் பரப்புரை ஏடுகளில் பூடகமாக சொல்லப்படுவதாகவும் குறிப்பிடுகின்றார். இது டிக்சிற்றின் சொந்தக் கற்பனையா, அன்றி இந்திய மத்திய அரசின் ஆதாரமற்ற ஒரு பீதிக்கு இவர் எழுத்து வடிவம் கொடுத்தாரா என்று தெரியவில்லை. இப்படியான கட்டுக்கதைகளை அவர் அவிழ்த்து விட வேண்டியதன் அவசியம் என்ன என்பது புரியவில்லை. இந்திய இராஜதந்திரத்தின் தோல்வியை நியாயப்படுத்த இப்படியுமா பொய் சொல்ல வேண்டும்.

முன்பெல்லாம் தலைவர் பிரபாகரன் பற்றி இழுக்கான முறையில் பேசியும், எழுதியும் வந்த டிக்சிற்றிற்கு பத்து ஆண்டுகளின் சுடலை ஞானத்தின் பின்பு ஒரு புதிய வெளிச்சம் ஏற்பட்டு இருப்பது போல் தெரிகிறது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழ் மக்களின் நலனைப் பிரதிபலிக்கும் பலம் பொருந்திய இராணுவ சக்தியாக எழுச்சி பெற்று நிற்பதற்கு பிரபாகரனின் தலைமைத்துவம்தான் காரணம் என்கிறார். தலைவர் பிரபாகரன் பற்றி குறிப்பிடும்போது முதலாவது பிரபாகரனின் ஆளுமையையும், குணாம்சத்தையும் குறிப்பிட வேண்டும். அவர் கட்டுப்பாடு உடைய ஒழுக்கசீலர், எளிமையானவர், ஈழத் தமிழ் மக்களின் விடுதலையில் ஆழமான பற்று உறுதி கொண்டவர், அவர் மீது எத்தகைய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டபோதிலும், அந்த மனிதனிடம் ஒரு உள்ளீடான இலட்சிய நெருப்பு, கொள்கை உறுதியும் உண்டு என்பதை மறுக்க முடியாது.

போர் திட்டங்களை வகுப்பதிலும், போர் உத்திகளை அறிமுகம் செய்வதிலும் இவரிடம் இயற்கையாகவே இராணுவத்திறன் ஆற்றல் இருக்கிறது. அவர் அரசியல் சுழி ஓட்டங்களையும் உண்மையாகவே அவதானிப்பவர். அரசியல் நிகழ்வுகளை செம்மையாக மதிப்பீடு செய்து அதற்கேற்ப காய் நகர்த்தும் மதிநுட்பம் உடையவர்.

நூலின் இன்னொரு இடத்தில் தலைவர் பிரபாகரன் பற்றிக் குறிப்பிடும்போது தமிழீழ தனியரசை உருவாக்கும் பிரபாகரனின் இலட்சிய உறுதியை எவராலும் எப்பொழுதுமே மாற்ற முடியாது என்கிறார் டிக்சிற். இது தலைவர் பிரபாகரன் பற்றிய ஒரு சரியான மதிப்பீடு.

புலிகள் பற்றி பொய்களும், புனைக்கதைகளும் செறிந்து கிடக்கும் இந்நூலில் இப்படியான சில உண்மை நிகழ்வுகளும் இருப்பது திருப்தியைத் தருகின்றது.

காலம் கடந்தாவது டிக்சிற்றிற்கு இவ்வித ஞானோதயம் ஏற்பட்டு இருப்பது வரவேற்கத்தக்கது. பத்து ஆண்டுகளுக்கு முன்பே இந்த விழிப்பு அவருக்கு ஏற்பட்டு இருந்தால் இந்திய – புலிகள் உறவில் இருந்த பல விரிசல்களையும், முரண்பாடுகளையும் இராஜதந்திர சாணக்கியத்துடன் தவிர்த்து இருக்கலாம் அல்லவா. ★



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

### சுயநிர்ணய உரிமையை மறுக்க

# சுயநிர்ணயத்தை தொலைக்கும் சிங்கள ஆட்சியாளர்கள்

**துர்க்கா மகாதேவன்**



கொழும்பு மாநகரின் செழுமையினைப் பறைசாற்றும் நோக்குடன் இலங்கையிலேயே அதியுயர் கட்டிடம் என்ற பெருமையுடன் கொந்தளித்து நுரை தட்டும் "காலிமுகத் திடலை" அண்மித்து நிமிர்வுடன் நின்றது. அந்தக் கட்டிடத் தொகுதி ஒன்று குவிந்துள்ள வர்த்தகப் பகுதியின் ஆதாரமாக மிளிர்ந்து கொண்டிருந்தது. "உலக வர்த்தக மையத் தொகுதி" கரைந்து போன *"97"* களின் இறுதிக் காலத்தில் மிகவும் கோலாகலமாகவும் எதிர்பார்ப்புகளுடனும் "திறப்பு விழா" கண்டது. பொருளாதார வரலாற்றில் பெரும் திருப்புமுனைகளைத் தரப்போவதாகச் சொல்லப்பட்ட வர்த்தக மையத் தொகுதியை, உலக முதலீட்டார் வர்க்கம் புடைசூழ சிறீலங்காவின் ஜனாதிபதி திருமதி சந்திரிகா குமாரதுங்கா திறந்து வைத்தார். இது பழைய செய்தி. அன்றைய உரையில் "இலங்கை அடுத்து வரும் ஆண்டுகளில், ஒரு சிங்கப்பூராகவோ, ஒரு ஹொங்கொங்காகவோ மாறும் காலம் கண்களில் தெரிகின்றது" என புன்னகை மலர பெருமிதம் கொண்டார். நிறைவான கண்ணாடி வேலைப்பாடுகளுடனும், குளிரூட்டல் வசதிகளுடனும் திகழ்ந்த தொகுதி தன் இறுமாப்புக் கோலத்திற்கு "மரண அடி" விழும் என்பதை உணர முடியாது இருந்திருக்கலாம்.

ஆனால் மிகவும் இறுக்கமான "பாதுகாப்பை" உடைய அந்தப் பிரதேசத்தில், அதாவது ஜனாதிபதி வாசஸ்தலம், இலங்கை இராணுவக் கூட்டுப்படைத் தலைமையகம் (J.O.C), ரெலிகொம் நிறுவனம் (பாதுகாப்புடன் கூடியது) பழைய ஜனாதிபதி செயலகம், விமானப் படை அலுவலகம், வளம் பொருந்திய *5* நட்சத்திர விடுதிகள், மங்கிப்போன மத்திய வங்கி, இலங்கை வங்கித் தலைமையகம் என நிறைவான பாதுகாப்புடன் கூடிய (வீதிப்பாதுகாப்புகள் உட்பட) "வர்த்தகக் கோட்டையை" உடைத்து உட்புகுந்த அந்த வலிமை பொருந்தியவர்கள் கொடுத்தது மரண அடி. இந்நிகழ்வின் மூலம் அவர்கள் அரசிற்குத் தெளிவான ஓர் செய்தியை விட்டுச் சென்றனர். அதாவது, நிலையான இருப்பை உடைய ஓர் இனத்தின் கழுத்திலும், வயிற்றிலும் கைவைக்க முனையும் எந்த ஒரு சக்தியின் , வாழ்விற்கும் வளர்ச்சிக்குமான வேகம், ஒடுக்கப்படும் இனத்தின் வலிமை பொருந்திய வர்கட்கு பதில் சொல்ல வேண்டும் என்பதேயாகும்.

நிச்சயமாக இலங்கை இனப்பிரச்சனைக்கான தீர்வைக் காணும்வரை ஒரு போதும் பொருளாதாரத்திலோ அன்றி வேறு எத்துறையிலும் வளர்ச்சிப் பாதையில் அடியெடுத்து வைக்கப்போவதில்லை. இதற்கான முயற்சிகளெல்லாம் விழலுக்கு இறைத்த நீரேயாகும். எவ்வளவுதான் பாதுகாப்பு, படைவிரிப்பு, புதிய புதிய ஒழுங்குகள் என நடவடிக்கைகளில் மாற்றீடுகளை மேற்கொண்டாலும், காற்றிலும் புகுந்து கடமை முடிக்கும் வலிமை பொருந்திய உள்ளங்கள் இருக்கும்வரை சகலவிதமான தாக்கங்களுக்கான மறு தாக்கங்களும் நிகழவே செய்யும். இவ்விடயத்தை நாட்டின் தலைவி புரிந்து கொண்டதாக அண்மைக் காலங்களில் காட்டியும் கொள்கின்றார். அண்மையில் கடற்றொழிலாளர் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போது விரக்தியாக *98*—ன் இறுதிக்குள் இனப்பிரச்சனைக்கான தீர்வு காணமுடியாது போனால் நான் கடலிலேயே குதிக்க வேண்டும் என்றும், இதனை விட ஒரு படி மேலே போய் புலிகளின் மனோவலிமை, பலம் என்பன தொடர்பான பொருள் கொண்ட வார்த்தைகளைப் பிரயோகித்துள்ளார். இது ஒன்றும் புதிதல்ல. இன்று உணர்வதாகக் காட்டிக்கொள்வதும், நாளை மறுபடியும் முருங்கை மரத்தில் தொற்றுவதும் அரசியல்வாதிகளின் தாரக மந்திரம். தேர்தல் காலங்கள் களைகட்டும் போது மக்களை ஏமாற்ற இடப்படும் வேடந்



www.tamileelamarchive.com

தாங்கல்கள் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வருவதற்காக மிகவும் கச்சிதமாக கண்ணீர் மல்க; கைய ணைத்து விதவை எனப் பறைசாற்றி சாதாரண ஒரு காவலாளியுடன் மக்கள் மத்தியில் இறங்கி தெருக்கூத்து வைத்து ஆட்சிக்கு ஏறியவர் இவர். சிறந்த நடிகைக்கான விருது கொடுக்கப் பட வேண்டியது தலைவிக்கே. என்ன தான் இருந்தாலும் சிறந்த நடிப்பும் பிரான்ஸ் படிப்பும் நாட்டைக் கொண்டு சென்று கொண்டிருப்பது எங்கே? சற்றுச் சிந்தித்துப் பார்ப்போமா?

"நாட்டின் தேசிய வருமானத்தின் 1/3 பங்கு யுத்தத்திற்குச் செலவானால் பொருளாதாரத்தினை அபிவிருத்தி செய்வது எப்படி? 'இது நாட்டின் நீதி அரசியல்துறை அமைச்சர் G.L. பீரிஸினது அங்கலாய்ப்பு. பாவம் அவர் முன்னர் இருந்தது போலவே கொழும்புப் பல்கலைக்கழகத் துணைவேந்தராகவே இருந்திருக்கலாம். தெரியாத்தனமாக அரசியல் சேற்றில் காலை வைத்து விட்டுப் புலம்பிக் கொண்டிருக்கிறார். இது இவ்வாறிருக்க பொருளியல் நிறுவனமான 'மார்க்கர்' கூறியுள்ள தகவலின் படி நாட்டின் தேசிய வருமானத்தின் 21% பாதுகாப்புச் செலவீனங்களுக்காக இடிக்கப்படுகின்றது. இது கரைந்து போன 97–ன் பெறுபேறு. இதைவிட கடந்த 7 ஆண்டுகளிலே 4.5 மில்லியனை யுத்தம் குடித்துள்ளது. இவ்வாறு நீண்டு செல்வது இழப்புகளின் மதிப்பீடுகளே! இவ்வண்ணம் நாளொருமேனி பொழுதொரு வண்ணமாக வெளிவந்து கொண்டிருப்பது வளர்ச்சிகளின் பெருமை அல்ல. மிக விரைவிலேயே 'வலுமை' எனும் கொள்ளை நோயிற்குப் பலியாகப் போகும் தேசத்தின் நலிவுற்றலிற்கான அறிகுறிகள்.

என்னவோ! இங்கு இவை தொடர்பான சிந்தனைகள் செயல்வடிவம் பெறுகின்றனவா? என்றால் இல்லவேயில்லை என்பதே ஆணித்தரமான பதில். ஒவ்வொரு அரச ஆட்சியாளரும் தாம் ஆளும் காலத்தில் சுறுட்டக்கூடியவற்றை சுறுட்டி தமது வங்கிக் கணக்குகளை நிரப்புவதிலும் போரில் ஏற்படும் வெற்றியைத் திரையிட்டு வாக்குறுதிகளைக் குவிப்பதிலும் மட்டுமே கவனம் செலுத்துகின்றனர். கடந்த 3 வருட பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக்காலத்தில் அரசு 47 அரச நிறுவனங்களைத் தனியாருக்குத் தாரைவார்த்துக் கொடுத்துவிட்டது. (17 வருட ஆட்சிக்காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சி 45 நிறுவனங்களைத் தனிமயப்படுத்தியது) இந்நிகழ்வை பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சியினர் விகிதசார அடிப்படையில்காணும் பாதுகாப்புச் செலவீனங்கட்கு ஈடுகட்டமுடியாமல் ஒவ்வொன்றாக தனியாருக்கு அதுவும் வேற்றுநாடுகட்கு விற்றுக் கொண்டு வருகின்றது அரசு.

இவ்வாறாக நாடு சென்றுகொண்டு இருப்பது எங்கே? என்றோ ஒருநாள் அம்மா 'தன்னிறைவுப் பொருளாதாரத்திற்கு' அடிகோலச் சபதமிட்டு மக்களை பாணுக்கும் மாவுக்கும் கியூவில் நிறுத்தினார். இன்று மகள் சகலவற்றிற்கும் வேற்று நாட்டிடம் கையேந்தும் பரிதாபகரமான நிலைக்கு மக்களை தள்ளிச் செல்கின்றார் பார்த்தீர்களா? ஒற்றுமையை, எந்த யுத்தத்திற்காக இவர்கள் நாட்டை விற்கின்றார்களோ அந்த யுத்தம் இவர்களால் விற்கப்படும் நிறுவனங்கள் ஊடாக என்றோ ஒருநாள் புதிய வடிவில் நாட்டில் வேரறுக்கும் பலதரப்பட்ட வேற்றுச் சமூகத்தின் உள்நுழைவுகள் திரிவுபட்ட கலை கலாச் சாரச் சீரழிவுகளையும் தேசிய பாதுகாப்பிற்கான ஒட்டுமொத்த அச்சுறுத்தலையும் சுரண்டப்படும் வன இழைப்பையும் புதிய வடிவில் அரங்கேற்றும்.

இன்று தன் நாட்டில் உள்ள ஓர் இனத்தின் சுயநிர்ணய உரிமையினை மதிப்புடன் ஏற்றுக்கொள்ளத் தயங்கும் இவர்கள் நாளை தமது சுயநிர்ணய உரிமைகளையே தொலைக்கப்போகின்றன. இதற்கான அடிகோலலையே எந்தவிதமான சிந்தனையும் இன்றி அரசு முனைப்புடன் முன் நிறுத்துகின்றது. இதனை இன்று இனவெறியுடன் கோசமிடும் யாராவது புரிந்து கொள்கின்றனரா?

## பிரித்தானியாவிடம் நாம் எதை எதிர்பார்க்கின்றோம்?

இன்று சிங்களப் பெரும்பான்மை அமைதி பற்றிப் பேசுகையில் அது நிலப்பிரபுவுக்கும் வாடகையாளர்களுக்கும் இடையே ஏற்படும் அமைதி போன்றோ அல்லது முதலாளிக்கும் வேலையாளிக்கும் இடையே உள்ள சமாதானம் போன்றோ கருதுகின்றார்கள். ஆனால், தமிழர்களாகிய நாங்களோ, இந்நூற்றாண்டின் மரியாதைக்குரிய எந்த மனிதர்களோ இதை ஓர் உண்மையான சமாதானமாக ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

களவெடுத்த அதிகாரத்தை கைகளில் வைத்துக்கொண்டும் இத்தகைய மனோநிலையைத் தம்மை உற்சாகப்படுத்துவதற்காகப் பாவித்துக்கொண்டும் சிங்கள பௌத்த பெரும்பான்மையும் அதனது அரசாங்கங்களும் தமிழ் மக்களைத் திட்டமிட்ட ரீதியில் நசுக்கி சிங்கள பௌத்த ஏகாதிபத்தியத்தை இலங்கையின் நீள அகலமெங்கும் பரப்பத் திட்டமிட்டுள்ளனர்.

சிங்களப் பெரும்பான்மை எங்களை நசுக்கி, அழித்துவிடும் என்ற பயத்தின் அடிப்படையில் நாங்கள் பிரிட்டிசாரிடம் அரச அமைப்பு ரீதியான பாதுகாப்பினைக் கோரினோம். துரதிஷ்டவசமாக இது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

உங்களுடைய மூதாதையினர் அந்த ஜனநாயகத்தினுள் எங்களை விட்டுச் சென்று 50 ஆண்டுகள் கடந்துவிட்டன.

சிங்கள பௌத்தர்கள் இன்று தமது பொன்விழாக் கொண்டாட்டங்களில் இளவரசர் சார்ள்ஸ் பங்குபற்றுவதை எதிர்க்கின்றனர். 150 வருடப் பிரித்தானியர் ஆட்சியில் 30000 இலங்கையர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என உங்கள் மீது குற்றஞ்சாட்டுகின்றனர். நல்லது, இங்கு நான் சிங்களவர்கள் எவ்வாறு உங்களை இந்த விடயத்தில் தோற்கடித்தார்கள் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். 50 வருடக் குறுங்காலத்துக்குள் அவர்கள் 60000 தமிழ்ச் சிவிலியன்களைக் கொன்று அவர்களுடைய சொத்துக்களையெல்லாம் அழித்து ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட மக்களை அகதிகளாக்கி உலகின் எல்லாப் பாகங்களுக்கும் இடம்பெயர வைத்துள்ளனர்.

பிரிட்டிஷ் இதை எவ்வாறு உணர்கின்றது? நாங்கள் பிரித்தானிய தேசத்திடமும் அதனது அரசிடமும் எதனை எதிர்பார்க்கலாம்.

வணபிதா. கலாநிதி எஸ். ஜே. இம்மானுவேல் அவர்கள் சிறீலங்காவின் 50–வது சுதந்திரத் தினத்தையொட்டி இகிலாந்தில் தமிழர்கள் நடத்திய மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணியில் ஆற்றிய உரையிலிருந்து.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# இலங்கைத்தீவின் தமிழர் பிரச்சனை பயங்கரவாதமல்ல நான்கு கட்ட வளர்ச்சிகளைக் கொண்ட அரசியல் பிரச்சனை

இலங்கைத்தீவில் காணப்படும் தமிழர் பிரச்சனையை (Tamils Question) சிறீலங்கா பயங்கரவாதப் பிரச்சனையென உண்மைக்கு மாறான பரப்புரைகளை சர்வதேசப்படுத்தி வருகிறது. இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சனை நான்கு கட்ட வரலாற்று வளர்ச்சியினை உடைய அரசியல் பிரச்சனை. இதனை அரசியல் பிரச்சனையாக ஏற்று தீர்வுகாண மறுத்து அரச பயங்கர வாதத்தை சிங்களப் பெரும்பான்மை அரசாங்கங்கள் தோற்றுவித்து வருவதி னாலும் 'தமிழ் மக்கள் மீதான' யுத்தத்தை திணித்து அவர்களை இன அழிப்பு இன வதை செய்து என்றாகிலும் தனது இறைமையைத் திணித்து தமிழர் தாயகத்தை ஆக்கிரமிக்க முனைவதினாலுமே இலங்கைத்தீவு சிறீலங்காவால் யுத்தபூமியாக மாற்றப்பட்டு அதன் துயரவிளைவுகளால் பாதிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் இலங்கைத் தமிழர் பிரச்சனை எவ்வாறு நான்கு கட்ட வரலாற்று வளர்ச்சியினைக் கொண்ட தமிழ் மக்களின் அரசியல் பிரச்சனையாக உள்ள தென்பதற்கான மேலெழுந்தவாரியான சிந்தனை வெளிப்பாடாக இந்த சிறிய கட்டுரை எழுதப்படுகிறது, இந்நோக்கை கருதி (I) காலனித்துவ காலப்போராட்டம் (II) ஜனநாயகப் போராட்டம் (III) தேசியவாதப் போராட்டம் (IV) சுயநிர்ணய உரிமைப் போராட்டம் என்கிற தலைப்புகளில் தமிழர் பிரச்சனையின் அரசியல் வளர்ச்சி ஆராயப்படுகிறது. ஆயினும் இது ஒரு பாரிய முயற்சிக்கான முன்னுரையாக அமைவதற்கான கால அவகாசமும் பிரசுர வெளியீட்டு இடவசதியுமே இக்கட்டுரைக்கு உள்ளதென் பதையும் முதலிலேயே கூறி அதனல் இந்த பரந்துபட்ட காலமான 1621 முதல் இன்று வரையான 377 வருட கால தமிழர் பிரச்சனையின் முழு வடிவத்தையும் இந்தக் கட்டுரை வெளிப்படுத்துவதாக கருதாது இக்காலகட்டத்திற்கான அரசியல் செல் நெறியையே பொதுவான தன்மைகளூடாக வெளிப்படுத்துகின்றது என்பதை அழுத்தமாக கோடிட்டுக் காட்டி கட்டுரையைத் தொடர்கின்றேன்.

**(1) காலனித்துவப் போராட்டம்**

இலங்கைத் தமிழ் மக்கள் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் இலங்கைத்தீவின் வடக்கு கிழக்குப் பகுதிகளைத் தாயகமாகக் கொண்டு வாழ்ந்து தமக்கான, தனியான அரசை 13—ம் நூற்றாண்டு முதல் தெளிவாக வெளிப்படுத்தி வந்தமை இலங்கைத் தீவின் வரலாறு. இந்த தமிழ் அரசான யாழ்ப்பாண அரசு இலங்கைத்தீவின் முதலாவது காலனித்துவ சக்தியான போர்த்துக்கேயரினால் கைப்பற்றப்பட்டது. 1505—ல் இலங்கைத் தீவின் கரையோரங்களில் கால்வைத்து சிங்கள அரசின் ஒரு பகுதியைக் கைப்பற்றி ஆட்சி நடாத்தத் தொடங்கிய போர்த்துக்கேயர் 116 ஆண்டுகாலப் போராட்டத்தின் பின்னரே 1621—ல் யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றினர். ஆயினும் போர்த்துக்கேயர் சமயப் பிரச்சார நடவடிக்கைகளுக்கே முக்கியத்துவம் கொடுத்ததுடன் தனது வர்க்கத்துக்கு தேவையான மூலப்பொருட்களை எடுப்பதிலும் வரிகளைப் பெறுவதிலுமே தனது ஆட்சிக் காலத்தில் கவனம் செலுத்தினர். இந்தப் போக்கு போர்த்துக்கேயருக்கு அடுத்ததாக வந்த காலனித்துவ சக்தியான டச்சுக்காரர் காலத்திலும் தொடர்ந்தது. டச்சுக்காரர் காலத்தில் கத்தோலிக்க மதத்திற்குப் பதிலாக சீர்திருத்தக் கிறிஸ்தவத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டமையை பிரதான மாற்றமெனலாம். ஆகவே இந்த முதலிரு காலனித்துவ காலத்திலும் தமிழ் அரசுக்களின் எல்லைகள் பேணப்பட்டன. அத்துடன் டச்சுக்காரரினால் தமிழர்களின் சட்டங்கள் தேச வழமைச் சட்டங்களாக தொடர்ந்தும் அனுமதிக்கப்பட்டன.

டச்சுக்காரர் ஆட்சியில் முதன்முதல் தேசாதிபதியான வான்கூவன்ஸ் தமிழர்களுடைய அரசின் உறுதியை பின்வருமாறு கூறுகிறார்:—

"பழைய மலபார் (தமிழ்) ராசாக்கள் ஆதிக்கம் பரந்து காணப்பட்டது. உயர்ந்த மலைத் தொடர்கள் மீதும், வேடர்களின் நிலப்பரப்புகள் மீதும் இந்த ஆதிக்கம் பரந்திருந்ததோடு புத்தளம், கற்பிட்டியின் நடுப்பகுதிக்கும் அது பரந்திருந்தது. அது மேலும், தெற்கு நோக்கி விரிவாக்கப்பட்டு நீர்கொழும்பு வரை ஈழத்தின் மேற்குக் கரையோரம் அவர்கள் கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருந்தது. கிழக்குப் பகுதியில் பாணமை வரைக்கும் கும்புக்கன் ஓயாவிலும் அது பரந்திருந்தது. இன்றுங்கூட வழக்கமான மலபாரி (தமிழ்) மொழியே இங்கு பேசப்பட்டு வருகிறது" இவ்வாறு 1660 முதல் 1663 வரை இலங்கைத் தீவில் டச்சுத் தேசாதிபதியாக விளங்கிய வான்கூவன்ஸ் தமிழ் அரசின் உறுதிக்கு வரலாற்றுச் சான்று பகர்கின்றார்.

சூ. யோ. பற்றிமாகரன் BA, BSc.

அதுமட்டுமல்ல தமிழர்கள் காலனித்துவ காலகட்டத்தில் தமது மொழியை, கலாச்சாரத்தைப் பேணுவதற்காக காலனித்துவங்களது கிறிஸ்தவ மறை பரப்பு முயற்சிகளுக்கும் பிறமொழியாக்கத் தன்மைகளுக்கும் எதிராக முகம்கொடுத்து மிகக்கடுமையான அரசியல் போராட்டத்தை கலாச்சாரப் புரட்சிகளூடாக நடாத்தி வந்தனர். இதனால் தமிழர்களின் சமூக — பொருளாதார — அரசியல் தன்மைகளை மாற்றமுடியாது அவைகளை அனுசரித்து கிறிஸ்தவ மதத்தைக் கீழ்நிலையாக்கம் செய்வதின் மூலம் மக்களிடை பரப்பும் கட்டாயத்துக்கு காலனித்துவங்கள் இறங்கி வந்தமை வரலாறு.

இது எதனைக் காட்டுகிறது என்றால், தமிழர்கள் ஆயுத படைபல பயமுறுத்தல்களுக்கு அஞ்சாது , காலனித்துவம் தனது மேலாண்மையை தமிழர் மேல் பதிக்கத் தொடங்கிய காலம் முதல் அதனை எதிர்த்து தம்மால் ஆன வழிகளில் எல்லாம் போராடி வந்தனர் என்பதையே.

**(2) ஜனநாயகப் போராட்டம்**

போர்த்துக்கேயர், ஒல்லாந்தரை அடுத்து இலங்கைத்தீவில் பிரித்தானியர் காலனித்துவ சக்தியாக 1796—ல் கால்பதித்தனர். 1796 முதல் 1802 வரை பிரித்தானிய கிழக்கிந்திய கம்பனி மட்ராஸிலிருந்து இலங்கைத்தீவு மீதான ஆட்சியைத் தொடங்கி 1802—ல் கரையோரச் சிங்களவர்களுக்கும் யாழ்ப்பாணத் தமிழருக்கும் மீதான தனியான முடிக்குரிய ஆட்சியை ஆரம்பித்தனர். ஆயினும் 1815 இலேயே கண்டிச் சிங்கள அரசைக் கைப்பற்றினர். அதன் பின்னரே 1832—ல் வன்னித் தமிழரசின்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

எதிர்ப்புக்களை முறியடித்தனர். இவை களின் பின்னரே 1833–ல் இலங்கைத் தீவை தமது நிர்வாக வசதிக்கென்ற பெயரில் தமிழ் – சிங்கள அரசுகளின் எல்லைகளை ஒருங்கிணைத்து "சிலோன் கவர்ன்மென்ட்" என்று ஆங்கிலத்திலும் சிங்களத்திலும், "இலங்கை அரசாங்கம்" எனத் தமிழிலும் அழைக்கப்பட்ட ஒற்றையாட்சி முறைமையைத் தோற்றுவித்தனர். இந்த ஒற்றையாட்சி முறை தோற்றுவிக்கப்பட்ட பின்னரும் வன்னித் தமிழரசில் இருந்து கெரில்லா யுத்தப் பாணியிலான தாக்குதல்களை பிரித்தானிய காலனித்துவம் அனுபவித்தது எனவும் டிறிபெக் கோட்டை வன்னிச்சிகளால் – தமிழ்ப் பெண்களினால் தலைமை வகிக்கப்பட்ட கெரில்லா அணி ஒன்றினால் தாக்கி அழிக்கப்பட்டு சூரியன் அஸ்தமிக்காத பிரித்தானிய பேரரசின் கொடி தமிழ்ப் பெண்கள் தலைமையிலான வன்னிப்படையினால் தமிழ் மண்ணில் மீண்டும் கொடி இறக்கப்பட்டது எனவும், யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு நினைவுமலர் வரலாற்றுக் கட்டுரை ஒன்று எடுத்து விளக்குகிறது. இக்கட்டுரையின்படி 1848 இலேயே வன்னியரின் கெரில்லா பாணியிலான ஆயுத எதிர்ப்பு பிரித்தானியரால் முற்றுமுழுதாக முறியடிக்கப்பட்டதாகத் தெரிகிறது. இதனை ஏன் இங்கு குறிப்பிடுகிறேன் என்றால், பிரித்தானிய காலனித்துவ அரசின் ஆரம்பகாலத்திலும் சுமார் 46 ஆண்டுகள் தமிழ் மக்கள் ஆயுதப் போராட்டத்தின் மூலம் தமது எதிர்ப்பை வெளிப்படுத்த முயற்சிகள் செய்துவந்துள்ளனர். ஆயினும், இவை வெற்றிபெறாத நிலையில் தமிழ் அரசுகளினதும் சிங்கள அரசுகளினதும் எல்லைகள் பிரித்தானிய காலனித்துவத்தின் வலுக்கட்டாயத்தினால் இணைக்கப்பட்டன என்பதை தெளிவுபடுத்துவதற்காகவே.

பிரித்தானியா இலங்கைத்தீவில் தனது ஆட்சியைத் தொடங்கிய பின்னர் தனது ஆட்சியை உறுதிப்படுத்தக்கூடிய முறையிலான கல்வி அமைப்பையும் அதன் மூலம் அரசாங்கப் பணியாளர்கள் அமைப்பையும் உருவாக்கிக்கொண்டது. இதனால் கற்றோர்குழாம் ஒன்று இலங்கைத்தீவில் பிரித்தானிய அரசுடன் பேச்சுவார்த்தைகள் மகஜர்கள் மூலம் பிரச்சனையைத் தீர்க்கலாம் என்ற கல்வி மூலமான மூளைச்சலவையுடன் தமிழ் சிங்கள சமுதாயங்களிடையே தோற்றுவிக்கப்பட்டது. இதனால் பிரித்தானிய காலத்தில் தமிழர்களது போராட்டங்கள் ஜனநாயகப் போராட்டங்களாக மாறு தலடைந்தன. 1879–ம் ஆண்டு வைகாசி மாதம் 22–ம் திகதி யாழ்ப்பாணம் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் சேர். பொன்னம்பலம் இராமநாதன் என பின்னர் புகழ் பெற்ற திரு. பொன்னம்பலம் இராமநாதன் அவர்களை வேட்பாளர்களாக அறிமுகம் செய்த பொழுது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஆற்றிய உரையின் பின்வரும் பகுதி தமிழர்களின் போராட்டப் போக்கினை இனங்காட்டுவதாக அமைகிறது.

"நமக்கு இன்றுள்ள கடமை தகைசான்ற சேர். முத்துக்குமாரசுவாமியின் இடத்திற்குத் தகுதி வாய்ந்த ஒருவர் யார் என்று காண்பதே. சட்டசபையில் எமது பிரதிநிதியாக அமர்பவர் தமிழராயிருத்தல் வேண்டும். அவர் சிறந்த கல்விமானாக விளங்க வேண்டும். உயர்ந்த கொள்கையுடையவராயிருத்தல் வேண்டும். நல்ல செல்வ வசதி பெற்றவராயிருத்தல் வேண்டும். உயர்ந்த சமூகத்திலே பழகக்கூடிய நல்வாய்ப்பு உடையவராதல் வேண்டும். தமது கருத்துக்களில் சுதந்திரராயும் எந்தச் சூழலிலும் எவ்வித அச்சமுமின்றி அக்கருத்துக்களை வெளியிட வல்லவராயுமிருத்தல் வேண்டும். இவையாவிலும் மேலாக அவர் ஆள்வோரதும் ஆளப்படுவோரதும் மதிப்புக்கு உரியவராதல் இன்றியமையாதது..."

நாவலரின் இந்த உரை தமிழ் கற்றோர்குழாம் அரசியல் தலைமைகள் எப்படி இருக்க வேண்டுமென அன்று எதிர்பார்த்தது என்பதையும் சிறந்த பண்புகளை அன்று 29 வயது இளைஞனான சேர். பொன்னம்பலம் இராமநாதனிடம் கண்டு கொண்டது என்பதையும் எடுத்துக்காட்டுகிறது.

கொழும்பு வாசியான, யாழ்ப்பாணத்துக்கு முற்றிலும் புதியவரான நியாயவாதியான சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவரது உறவினரும் இலங்கைச் சட்டசபைக்கு முதன்முதலில் நியமனம் பெற்ற தமிழருமான சேர். முத்துக்குமாரசுவாமியின் (1833–1879) மறைவுக்குப் பின் தமிழர்களின் பிரதிநிதியாக சட்டசபைக்கு நியமிக்கப்பட்டார்.

இதனை இங்கு ஏன் குறிப்பிட வேண்டிய தேவை எழுகிறதென்றால் தமிழ் கற்றோர்குழாம், சிங்கள கற்றோர்குழாம் என்ற இரு தொகுதிகள் கொழும்பு வாழ்வை, கலாச்சாரத்தை மையப்படுத்திய பின்னணியில் ஆங்கிலேயர் விரும்பிய கற்றோர்குழாம் ஆட்சியை வெளிப்படுத்தத் தொடங்கியதும் மக்களில் பலமான தமிழ், சிங்கள பாட்டாளி வர்க்கம் அரசியல் முறைமைகளில் இருந்து அந்நியப்பட்ட நிலையில் இலங்கைத் தீவின் அரசியல் சீர்திருத்தங்கள் பிரித்தானியரால் வளர்க்கப்பட்டது என்பதும் தெளிவாக உணரப்படவேண்டும் என்பதற்காகவே.

மேலும், இந்தக் கற்றோர்குழாம் துணையுடனான பிரித்தானிய காலனித்துவ ஆட்சியில் 1920–ம் ஆண்டிலும் 1924–ம் ஆண்டிலும் சட்டசபையின் பிரதிநிதித்துவ எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டபொழுது தமிழர்களின் பிரதிநிதித்துவ விகிதாசாரம் வீழ்ச்சி அடைந்தது. இதன் உச்சக்கட்டமாக 1931–ம் ஆண்டின் டொனமூர் சீர்திருத்தம் தமிழர்கள் சிங்களவர்களின் வரலாற்றுப் போக்குகளை, தேசிய வேறுபாடுகளை, ஆட்சித் தனித்துவங்களை கவனத்தில் எடுக்காது சனத்தொகை ரீதியான சர்வஜன வாக்குரிமையை வழங்கியது. இதனால், வரலாற்றில் முதல் தடவையாக இலங்கைத் தமிழர்கள் அவர்களது சொந்தத் தாயகத்திலேயே சிறுபான்மை இனத்தவர் என்ற அரசியல் நாமகரணம் இடப்பட்டனர். இதற்குப் பின்னர் ஏற்பட்ட அரசியல் சீர்திருத்தங்கள் எல்லாமே இந்த விபரீதமான சிறுபான்மை இனம் என்ற அடைமொழியின் நோக்கிலேயே தமிழர்களது அரசியல் உரிமைகளை அணுக முற்பட்டமை தமிழர் – சிங்களவர்களின் சமத்துவத்தை அங்கீகரியாது தமிழர்கள் மேலான அரசியல் திணிப்பாகவே அமைந்தன. மேலும், 1931–ம் ஆண்டில் இருந்து தமிழர்களின் அரசியல் செயற்பாட்டின் மையமாக யாழ்ப்பாணம் முக்கியத்துவம் பெற்றது. பிரதிநிதித்துவ அணுகல் முறையில் உள்ள தவறை உணர்ந்து தமிழர்களின் அன்றைய தலைமையாளராகிய திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் 1944–ல் 50க்கு 50 என்ற கோஷத்தை அதாவது, தமிழர்களும் சிங்களவர்களும் இலங்கைத்தீவில் சமமான சமத்துவமுடையவர்கள் என்ற கோட்பாட்டை வற்புறுத்தி அகில இலங்கை தமிழ் காங்கிரசின் மூலம் அதனை அடைய முயற்சித்தார். தமிழர் மகாசபை, யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் போன்ற அரசியல் அமுத்தக்குழுக்கள் தமிழரிடை முன்பிருந்தே காணப்பட்டபோதிலும் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் ஒரு அரசியல் கட்சி என்பதற்கான தகுதிகளுடனான தமிழர்களின் முதலாவது அரசியல் கட்சியாகப் பரிணமித்தது. 1944–ல் சிங்கள தலை



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

மைகள் 57%க்கு 43% என்ற விகிதாசாரத்தில் சிங்களவர் தமிழர் பிரதிநிதித்துவம் அமைய இணங்குவதாகக் கூறிய நேரத்தில் கூட தலைவர் ஜி. ஜி. பொன்னம்பலம் அதனை ஏற்க மறுத்து தமிழர்களுக்கு 50:50 என்ற அடிப்படையில் பிரதிநிதித்துவ விகிதாசாரம் அமைய வேண்டுமெனக் கண்டிப்புடன் கூறி தமிழர்கள் சிறுபான்மையினர் சிங்களவர் பெரும்பான்மையினர் என்ற ரீதியிலான அணுகுமுறையை ஆணித்தரமாக எதிர்த்தார். சோல்பரி ஆணைக்குழு முன்பாக தமிழர்கள் தமது நிலைப்பாட்டை சாட்சியங்கள், ஆவணங்கள் மூலம் எடுத்து விளக்கினார். ஆயினும், பிரித்தானியா தமிழர்களின் ஜனநாயக ரீதியான போராட்டங்களை கவனத்தில் எடுக்காது வெறுமனே "சிறுபான்மையினர் இனத்திற்கோ அல்லது மதத்திற்கோ எதிரான சட்டங்கள் இலங்கைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் பிரித்தானிய அரசிடம் முறையிடலாம்" என்ற 29(2) காப்பு விதியுடன் சிங்களப் பெரும்பான்மை ஆட்சி அமைப்பினை அங்கீகரித்து இலங்கைத் தீவுக்கு சுதந்திரம் வழங்கி இலங்கைத் தீவில் தமிழ்த்தேசிய இனத்தின் சுதந்திரமான ஜனநாயக ரீதியான பங்களிப்பைச் சாகடித்துச் சென்றனர்.

**(3) தேசியவாதப் போராட்டம்**

பிரதிநிதித்துவ விகிதாசார ஏற்றத்தாழ்வுகளுடன் காலனித்துவம் விட்டகன்ற 1948–ல் இலங்கை கற்றோர்குழாம் ஆட்சியில் இருந்து கற்றோர்குழாம் ஜனநாயகத்தில் பிரவேசித்தது. இந்தக் கற்றோர்குழாம் ஜனநாயகம் கற்றோர்குழாம் ஆட்சிக்குரிய பண்புகளான மகஜர்கள், கோரிக்கைகள், ஜனநாயக ரீதியான எதிர்ப்புக்கள் என்பவற்றை தன்னகத்தும் கொண்டு திகழ்ந்தது. ஆனால், சிங்களப் பெரும்பான்மை அரசாங்கமாக சிங்கள பௌத்த பேரினவாதம் அதிகாரவலிமை பெற்ற உடனேயே தமிழர்களை இரண்டாந்தர பிரஜையாகவோ அல்லது நாடற்றவர்களாகவோ மாற்றுவதற்கு உரிய நடவடிக்கைகளில் வேகமாக இறங்கியது. இதன் முதற்படியாக மலையகத் தமிழர்களின் வாக்குரிமை, குடியுரிமை பறிப்பும், தமிழர் தாயகங்கள் மீதான திட்டமிட்ட குடியேற்றங்களும் சிங்களப் பெரும்பான்மை அரசாங்கத்தின் முதல் நடவடிக்கையாயிற்று. அரசியலமைப்பு பாதுகாப்பு 29(2)இனால் வழங்கிவிட்டதாகக் கூறிய பிரித்தானிய அரசாங்கம் மலையகம்வாழ் தமிழ் மக்கள் குடியுரிமை பறிப்புக்கு எதிராக பிரித்தானியாவுக்கு மேன்முறையீடு செய்த பொழுது "அரசியல் சமுதாயத்துக்குரிய தகுதிகள் மலையக மக்களுக்கு இல்லாததினால்" இலங்கை அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் சரியெனக் கூறி ஜனநாயகத் தன்மையை சாகடித்ததும் அல்லாமல் தமது அரசியல் அமைப்பின் பாதுகாப்பு விதியின் கையாலாகாத்தனத்தையும் வெளிப்படுத்தினர்.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் இலங்கைத் தமிழ் மக்களின் தேசியத்துவத்தை மீள நிறுவ வேண்டிய தேவை உணரப்பட்டு 13.02.1949–ல் தமிழரசுக் கட்சி தந்தை செல்வநாயகத்தால் ஆரம்பிக்கப்பட்டது. தமிழர் தம் தேசியத்தை மீளவும் வெளிப்படுத்தும் நோக்கில் 1621–ல் போர்த்துக்கேயரினால் இறக்கப்பட்ட யாழ்ப்பாண அரசின் கொடி 328 ஆண்டுகளின் பின் 03.09.49–ல் தமிழ் அரசின் இறுதி மன்னனது நல்லூர் சங்கிலித்தோப்பில் ஏற்றப்பட்டது. 1949 முதல் 22.05.1972 வரை 23 ஆண்டுகள் தமிழரசுக்கட்சி தமிழர்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுக்க ஜனநாயக வழிகளில் அஹிம்சை போராட்டங்கள் மூலம் இயலுமான எல்லா வழிகளையும் மேற்கொண்டு முயற்சித்தது. ஆயினும், காலனித்துவம் தனக்கு வழங்கிய அரசியல் அதிகாரத்தை தனது எல்லைகளின் விரிவாக்கலுக்கான சாதகமான சூழ்நிலையாக மாற்றிக்கொண்ட சிங்கள பௌத்த பேரினவாத சிங்கள அரசாங்கங்கள் தொடர்ச்சியான சட்டவாக்கங்கள் சட்ட அமுலாக்கல்கள் மூலம் தமிழரின் சகலவிதமான அரசியல் உரிமைகளையும் பறித்தலையும் தமிழரை சமூக – பொருளாதார வளர்ச்சியற்ற சமுதாயமாக மாற்றுவதிலும் தம் முழுக்கவனத்தையும் செலுத்தியது. இதன் உச்சக்கட்டமாக 22.05.1972–ம் திகதியில் சிங்கள பௌத்த சிறீலங்கா குடியரசுப் பிரகடனம் அமைந்தது. இதன்மூலம் நாடற்ற தேச இனமாக்கப்பட்ட தமிழர்கள் தமக்கு இயல்பாகவே உள்ள பிரிக்க முடியாத மனித உரிமையான சுயநிர்ணய உரிமையைக் கொண்டு தமது வரலாற்றுத் தாயகமான தமிழீழ தேசத்தை மீளவும் பூரண இறைமையுள்ள தேசமாக மீட்டெடுத்து அதிலே பாதுகாப்புடனான அமைதி வாழ்வு பெற 1976–ல் முடிவெடுத்தனர். இந்த முடிவு தமிழினத்தின் தலைவரான தந்தை செல்வநாயகத்தால் முறைப்படி பிரகடனப் படுத்தப்பட்டு 1977 பொதுத் தேர்தலை இதற்கான குடியொப்பமாக மாற்றியதன் மூலம் தமிழர்களால் அறுதிப்பெரும்பான்மை வாக்குகளால் அங்கீகரிக்கப்பட்டது. இந்தத் தேர்தலின் மூலம் சிறீலங்காவின் தேசிய அரச பேரவைக்கு தெரிவாகும் தமிழ் பிரதிநிதிகள் தமிழீழத் தேசிய பேரவையாக மாறி தமிழீழத் தேசத்திற்கான அரசியலமைப்பைத் தயாரித்து அமுல்படுத்துவதன் மூலம் தமிழீழத் தேசம் மீளமைக்கப்படும் எனத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அறிவித்த தமிழர் விடுதலைக் கூட்டணி இதனை அமைதி வழியிலோ நேரடி நடவடிக்கைகளினாலோ அல்லது போராட்டத்தினாலோ அடையப்படும் எனவும் தெளிவாகக் கூறியது. அத்துடன் தந்தை செல்வநாயகம் 1975–ல் காங்கேசன்துறை தேர்தல் வெற்றியை அடுத்து சிறீலங்கா பாராளுமன்றத்திலிருந்து விலகிச் செல்வதற்கான தமிழர்களின் முடிவை சிறீலங்கா பாராளுமன்றத்தில் வெளிப்படுத்தி ஆற்றிய உரையில் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்கவைப்பதற்கான பேச்சுவார்த்தையை தவிர வேறு ஒருவகையான பேச்சுவார்த்தைகளும் சிறீலங்கா அரசுடன் எதிர்காலத்தில் இடம் பெறமாட்டாது எனவும் ஆணித்தரமாக எடுத்துக் கூறியே விடைபெற்றார். இதனால் 1972 முதலான தமிழர்களின் அரசியல் போராட்டங்கள் அனைத்தும் "சுயநிர்ணய உரிமையை"க் கொண்டு தமிழீழ தேசத்தை மீள நிறுவுவதற்கான வழிகளில் வளர்ந்து 1976–ல் தமிழீழத் தேச பிரகடனமாகி இதனை ஆயுதபடை பலம் கொண்டு 1972இலும் மக்கள் மேலான யுத்தத்தின் மூலம் 1978 தொடக்கம் அழிக்க முயலும் சிறீலங்கா என்னும் அந்நிய அரசுக்கு எதிரான சுயநிர்ணய உரிமைப் போராட்டமாக மாறுபட்டுள்ளன.

**(4) சுயநிர்ணய உரிமைப் போராட்டம்**

தமிழீழ மக்கள் என்னும் தம் வரலாற்று நிலைக்கு 1972–ல் சிறீலங்கா பௌத்த சிங்களக் குடியரசால் தள்ளப்பட்டுவிட்ட இலங்கைத் தமிழ் மக்கள் நிராயுதபாணியாக ஜனநாயக வழிகள் மூலம் நடாத்திய – நடாத்தமுற்பட்ட எதிர்ப்புக்களை சிறீலங்கா முதலில் 1972 முதல் 1978 வரை பொலிசாரை இராணுவமாகப் பயன்படுத்தியும் 1978 முதல் இன்றுவரை நேரடியான இராணுவ நடவடிக்கைகள் மூலமும் அழிப்பதையே தமது அரசியல் செயற்திட்டமாகக் கொண்டு செயற்படுகின்றனர். ஆயினும் தமிழ் மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் எனும் ஆற்றலும் வலிமையுமுள்ள அரசியல் தலைமை மூலம் தமது சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை கடந்த 26



www.tamileelamarchive.com

ஆண்டுகளாக வெற்றிகரமாக முன்னெடுத்து தமிழீழ தேசத்தின் பல பகுதிகளையும் மீட்டெடுத்தும் உள்ளனர். இந்நிலையில் இந்த சுயநிர்ணய உரிமைப் போராட்டம் உலக அங்கீகாரத்தைப் பெறுவதன் மூலமே சிங்கள பௌத்த சிறீலங்கா குடியரசின் படைகளை தமிழீழ தேசத்தில் இருந்து வெளியேற்றி தமிழீழ மக்களுக்கு பாதுகாப்பான அமைதியான ஆட்சி தோன்றும் காலம் உருவாகலாம். இதனை நன்குணர்ந்த சிறீலங்கா தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தை முறியடிப்பதற்கு அதனை தலைமைதாங்கி வழிநடத்தும் தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாத இயக்கமென உலகுக்கு பரப்புரை செய்யத் தொடங்கியுள்ளது. இதன் மூலம் தமிழீழ மக்களால் பல்லாயிரக் கணக்கான உயிர்களின் அர்ப்பணிப்பினாலும் பலகோடி பெறுமதியான உடைமைகளின் தியாகத்தினாலும் மீளநிறுவப்பட்டுள்ள தமிழீழ தேசத்தை கருக்கலைப்புச் செய்யலாம் என்னும் பகற்கனவில் சந்திரிகா அரசு மிதந்து கொண்டிருக்கிறது. ஆயினும், எந்த சிங்கள அரச பயங்கரவாதம் தமிழ் மக்களை தம்வாழ்வுக்காக ஆயுதம் ஏந்த வைத்ததோ அந்தச் சிங்கள அரச பயங்கரவாதத்தில் எந்தவித மாற்றங்களுமே இடம்பெறாமல் மேலும் மேலும் சிங்கள அரச பயங்கரவாதம் தமிழீழ மக்களின் உயிர்களையும் உடமைகளையும் இலங்கைத்தீவின் எல்லா இடங்களிலும் பாதுகாப்புடனான சிறைச்சாலைகளுக்குள்ளும்கூட தேடி அழித்துக் கொண்டிருக்கிறது. தமிழர்களாக பிறந்தவர்கள் இலங்கைத்தீவின் ஒவ்வொரு அங்குல மண்ணிலும் சிங்கள அரச பயங்கரவாதத்தின் தீநாக்குகளால் சுடப்பட்ட வண்ணம் உள்ளனர். வகைதொகையற்ற கைதுகள், நீதி விசாரணையற்ற தடுப்புக்கள், சிறைகள், பாலியல் வன்முறைகள், காணாமல் போதல்கள், எந்த இடத்திலும் சுட்டுக் கொல்லப்படுதல், எந்நேரமும் குண்டு வீச்சுக்களையும் எறிகணைகளையும் தாங்கித்தாங்கிச் செத்தழிதல், சுடப்பட்டவன் குண்டுபட்டவன்கூட வைத்திய சாலைக்குக் கொண்டுசெல்ல முடியாது தடுக்கும் சோதனைச்சாவடிகள், இவைகளுக்கு நடுவே உணவு, மருத்துவம், கல்விவசதி போன்ற அடிப்படை வசதிகள்கூட மறுக்கப்பட்ட நிலையில் தமிழ் மக்கள் சிங்கள அந்நிய அரசால் வதைக்கப்படுகின்றனர். இதனைத் தட்டிக் கேட்பதில் உலகு காட்டும் அலட்சியம் அக்கறையின்மை தமிழீழ மக்களின் சுயநிர்ணய போராட்டமாம் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தை உலகைப் பொறுத்தவரை "அனாதைப் போராட்டமாக" மாற்றியுள்ளது.

ஆயினும் தமிழீழ மக்கள், உலக மன்றமான ஐக்கிய நாடுகள் சபையின் மக்கள். ஐக்கிய நாடுகள் சாசனம் "மக்களாகிய நாங்கள்" என்றுதான் தொடங்குகின்றது. எனவே இந்த அமைப்புக்கு தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்கப்பட வேண்டிய கடமை, பொறுப்பு உண்டு. இந்தப் பொறுப்பை நடைமுறைப்படுத்த ஏனைய விடுதலைப் போராட்டங்களில் செயற்பட்டதுபோல "தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தேவையை, போக்கை, துன்பங்களை இனங்காணக்கூடிய ஒரு ஆணைக்குழுவை உடன்நிறுவ வேண்டும். இந்த ஆணைக்குழு நிறுவப்பட்டால் தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டம் தமிழீழ தேசிய விடுதலை போராட்டத்தின் அங்கீகாரத்தின் தேவை தெட்டனப்புலனாகும். சிங்கள அரச பயங்கரவாதிகள் தமிழர்களின் உயிர் அர்ப்பணிப்புகளுடன் கூடிய தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாதப் போராட்டமென பரப்புரை செய்யும் கயமைத்தனம் அம்பலமாகும். இல்லையேல் சந்தை நலன்கள் இராணுவ உரிமைகள், ஆயுத சந்தைகள் இவற்றை காணிக்கையாக்கி உலக அரசாங்கங்களைத் தன் வயப்படுத்தி சிறீலங்கா தமிழர்களைப் பயங்கரவாதிகள் என பூச்சாண்டி காட்டும் கேலிக்கூத்துக்கள் தொடரலாம். பல்லாயிரக்கணக்கான தமிழ் உயிர்களின் அர்ப்பணிப்புடன் கூடிய தமிழர்களின் புனிதமான விடுதலை இயக்கம் தமிழீழ விடுதலைப் புலிகள். ஒரு தேசத்தின் விடுதலைக்காக மட்டுமல்ல உலகின் பழைமைமிகு தமிழீழ மக்களை இன அழிப்பு செய்து கொன்றழிக்கும் சிறீலங்காவின் பேயாட்சிக்கு எதிராகவும் தம் உயிர்களையே உயிராயுதமாகக் கொண்டு போராடும் தியாகமறவர் கூட்டத்தை, சிறீலங்கா, பயங்கரவாதிகள் என அழைப்பதற்கு ஒத்துழைக்கும் ஒத்துழைக்கமுயலும் உலக நாடுகள் ஐக்கிய நாடுகள் சபையினால் தடைசெய்யப்பட்ட இன அழிப்பு எனும் சர்வதேச குற்றத்திற்கு துணைபோகின்றனர். இதனை உலகுக்கு உணர்த்தி தமிழீழ மக்களின் சுயநிர்ணயப் போராட்டம் வெற்றிபெற உழைக்கவேண்டியது புலம்பெயர் மக்களாகிய நம் கடமை.

★★

## மற்றுமொரு காலக்கெடு

சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான மற்றுமொரு காலக்கெடுவினை அறிவித்துள்ளார். "இந்த ஆண்டு முடிவிற்கு முன்னர் யுத்தம் முடிவிற்குக் கொண்டுவரப்பட்டு நாட்டில் சமூக, பொருளாதார நிலைமைகள் விருத்தி செய்யப்படும்" என்பதே அவரின் புதிய அறிவிப்பாகும். சிறிலங்கா ஜனாதிபதி யுத்தத்தை முடிவிற்குக் கொண்டு வருவதற்கான காலக்கெடுக்கள் பலவற்றை இதற்கு முன்னரே அறிவித்திருந்தமை சகலரும் அறிந்த விடயம். இவ்வாறான அறிவிப்புக்களை அவர் ஆளும் கட்சியாவதற்கு முன்னரே – அதாவது எதிர்க்கட்சியாக இருந்த போதே விடுக்கத் தொடங்கிவிட்டார். அப்பொழுது, தமது தேர்தல் பிரச்சாரத்தில் இவ்விடயத்திற்கு முதன்மை அளித்திருந்த சந்திரிகா குமாரதுங்க தாம் ஆட்சிக்கு வந்தால் உடனடியாக யுத்தம் நிறுத்தப்பட்டு – யுத்தத்திற்குச் செலவு செய்யப்படும் 2000 கோடி ரூபாவும் சமூக, பொருளாதார அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படும் என்றார்.

ஆனால், விடுதலைப் புலிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையில் முட்டுக்கட்டை ஏற்பட்டபோது யுத்தத்தைத் தடுத்து நிறுத்த முடியாமல் போரைத் தொடர்வதற்கான முழுமுயற்சியிலேயே அவர் கவனம் செலுத்தினார். அப்பொழுதும் யுத்தத்தை முடிப்பதற்கான ஒரு காலக்கெடுவை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுத்தார். அன்றும், இவ்வாண்டின், அதாவது *1995* – இறுதிக்குள் யுத்தம் முடிக்கப்படும் என்றார். அது சாத்தியமற்றுப் போனபோது, மீண்டும் ஒரு தடவை இவ் ஆண்டின் இறுதிக்குள் – 1996 – யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்படும் என்றார். ஆனால், பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தவோ, ஏப்ரல் மாதத்திற்குள்ளாகவே யுத்தம் முடிவிற்குக் கொண்டுவரப்படும், புலிகள் தோற்கடிக்கப்படுவார்கள் என உறுதி கூறினார்.

ஆனால், இருவரதும் காலக்கெடுக்கள் அர்த்தமற்றதாகிய போது – கடந்த ஆண்டின் இறுதிக்குள் யுத்தம் முற்று முழுதாக முடிவிற்குக் கொண்டு வரப்படும் என ஜனாதிபதி சந்திரிகா, பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த உட்பட ஆட்சியிலுள்ள பலரும் உறுதி கூறினர். அதன் பின் 50வது ஆண்டு சுதந்திரதின நாளான பெப்–04க்கு இக்காலக்கெடு ஒத்திவைக்கப்பட்டது. ஆனால், இக்காலக்கெடுவும் சாத்தியமற்ற நிலையில்தான், தற்பொழுது இவ்வாண்டின் இறுதி என மற்றொரு காலக்கெடு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில், ஜனாதிபதி சந்திரிகாவின் தற்போதைய காலக்கெடுவினுள்ளும் யுத்தம் முடிவிற்கு வராது என்பதை உறுதிபடக் கூறலாம். ஆகையினால் இக்காலக்கெடுவும் அர்த்தமற்றதாகப் போவது தவிர்க்க முடியாததொன்றாகவே நிச்சயம் இருக்கும். அதேசமயம் யுத்தத்தை முடிப்பதற்கான காலக்கெடு மட்டுமல்ல – இனப்பிரச்சனைக்கு இராணுவத்தீர்வு என்ற சந்திரிகா அரசின் நிலைப்பாடுமே விரைவில் தோல்வி காண்பது தவிர்க்க முடியாது போகும். அவ்வாறு சிறிலங்கா அரச இராணுவம் தோல்வி காணும் போது மறுவளமாக தமிழீழ விடுதலைப் போரின் வெற்றியும் உறுதிப்படுத்துவதாக இருக்கும்.

(ஈழநாதம் ஆசிரியர் தலையங்கத்திலிருந்து...)



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தென்னாசியாவின் புவிசார் அரசியல்
## பாரதீய ஜனதா கட்சி அரசினால் மாற்றமுறுமா?

பாரதிய ஜனதாக் கட்சி கூட்டணி இந்தியாவில் ஆட்சி அதிகாரத்துக்கு வந்துள்ளமையானது இந்தியாவின் அரசியலில் மட்டுமல்ல தென்னாசியாவின் புவிசார் அரசியலிலும் பெரும் மாற்றத்தினை கொண்டு வருமா என்பது குறித்து அரசியல் ஆய்வாளர்கள் தீவிரமாக சிந்தனை கொண்டுள்ளனர். ஏனெனில், ஜனதா கட்சி அடிப்படைக் கொள்கைகளில் சில இப்புவிசார் அரசியலில் பெரும் மாற்றத்திற்கு வித்திடக் கூடியவை என்பது மட்டுமல்ல, அதன் தோழமைக் கட்சிகள் சிலவும் புவிசார் அரசியலில் மாற்றத்தை விளைவிக்கக் கூடியவையான நிலைப்பாட்டைக் கொண்டவையும் ஆகும்.



பாரதிய ஜனதா கட்சி இவ் ஆட்சியை அமைப்பதற்கென கொள்கைகள் சிலவற்றை கைவிட்டுள்ளது அல்லது ஒத்திவைத்துள்ளது. இதில் முக்கியத்துவமானது இந்து தேசியவாதக் கட்சியான பாரதிய ஜனதாக் கட்சி என முத்திரை குத்தப்பட்டமைக்கான அடிப்படைக் காரணிகளில் ஒன்றாக அமைந்த முஸ்லிம் பள்ளிவாசல்கள் அமைந்துள்ள இடங்களில் இந்து கோயில்கள் நிறுவுவது என்ற நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டமையாகும். இது தேர்தலின் போது கூட்டணி அமைக்கவும் மத்தியில் ஆட்சி அமைக்கவும் அவசியமானதாக இருந்தது. ஆனால், இம்மாற்றம் பாரதீய ஜனதாவில் ஏற்படுவதற்கு இருந்த காரணம் யார்? இன்று பிரதமராக பதவியேற்றுள்ள வாஜ்பாயின் பங்கு இதில் என்ன? என்பவை முக்கியமான கேள்வியாகவேயுள்ளன. ஏனெனில், அரசியல் நோக்கர்கள், ஆய்வாளர்கள் இம்மாற்றம் பாரதீய ஜனதாவின் மாற்றம் என்பதை விட முக்கிய பிரதமரான வாஜ்பாய் அவர்கள் செய்துகொண்ட மாற்றங்கள் என்றே நம்புகின்றன. ஏனெனில், வாஜ்பாய் பாரதீய ஜனதாக்கட்சியின் ஆரம்ப கால உறுப்பினர். எனினும், அவரை ஒரு இனவாதியாகவே பலரும் கருதுகின்றனர். அத்தோடு அவருக்கு அரசியல் வட்டாரத்தில் ஒரு நற்பெயரும் திறமையானவர் என்ற பாராட்டுதலும் உண்டு. இதன் காரணமாகவே வாஜ்பாயை பாரதீய ஜனதாக் கட்சி தனது பாராளுமன்றத் தலைவராகவும் பிரதமராகவும் தேர்ந்தெடுக்கக் காரணமாகியது. ஆனால், வாஜ்பாய் ஒரு முழுமையான விட்டுக் கொடுப்பாளர், நசிந்து போகக் கூடியவர் என்பதும் இல்லை. ஜனதாக் கட்சித் தலைவர் சுப்ரமணியசுவாமி விடயத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்துடன் அவர் நடந்து கொண்ட விதத்தில் இருந்து இதைப் புரிந்து கொள்ளமுடியும். சுப்பிரமணியசுவாமிக்கு நிதியமைச்சர் பதவியை மறுத்ததோடு மட்டுமல்ல அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தின் ஆதரவுக் கடிதமின்றியே ஜனாதிபதியிடம் 240 உறுப்பினர்களின் ஆதரவுக் கடிதத்தை வாஜ்பாய் சமர்ப்பித்ததைக் குறிப்பிட்டுக் கூறலாம்.

இந்த நிலையில் வாஜ்பாயின் அரசாங்கம் தென்னாசியாவில் புவிசார் அரசியலில் எந்த அளவிற்கு தாக்கத்தை விளைவிக்கும் என்பது முக்கியமான ஒரு வினாவாகவே உள்ளது.

பாரதீய ஜனதாக் கட்சியும் அதன் தோழமைக் கட்சியும் இணைந்து வெளியிட்ட தனது அரசாங்கத்தின் தேசிய அலுவல் அறிக்கையில் தமது வெளியுறவு கொள்கை குறித்து பெரிதான மாற்றம் உள்ள திட்டம் எதையும் வெளியிட்டதாகத் தெரியவில்லை. ஆனால், வெளிவந்த தகவல்களின் அடிப்படையில் இது அரசாங்கத்தின் அணு ஆயுதக் கொள்கையானது அதன் வெளியுறவுக் கொள்கைகளில் முக்கிய அம்சமாக சில சமயம் மாறக் கூடிய வாய்ப்பு உண்டு. அத்தோடு ஆட்சியில் உள்ள தோழமைக் கட்சிகள் சில இந்தியாவிற்கு வெளியில் இந்தியாவின் வெளிக்கொள்கைகளில் கொண்டுள்ள ஆர்வமும் அக்கறையும் மற்றும் மத்திய அமைச்சர் அவையில் ஒரு சிலர் கொண்டுள்ள முக்கிய அமைச்சுப் பொறுப்புக்களும் வெளியுறவுக் கொள்கையில் சில மாற்றங்களை ஏற்படுத்துவதற்குமான சூழ்நிலைகளை உருவாக்கக் கூடியனவாகவும், இந்திய புவிசார் அரசியலில் பெரும் மாற்றங்களை விளைவிக்காதுவிடினும் சில மாற்றங்களுக்கு உந்துதலாகலாம் எனக் கருத இடமுண்டு.

பாரதீய ஜனதாக் கட்சி கூட்டணியின் தேசிய அலுவல் அறிக்கையில் இந்தியா அணு ஆயுத விவகாரத்தில் சகல வழிகளையும் திறந்தே வைத்துள்ளது என வெளியாகியுள்ள அறிவிப்பா



www.tamileelamarchive.com


தமிழீழ ஆவணக் காப்பகம்

னது தேவைப்படும் பட்சத்தில் இந்தியா அணு ஆயுதத்தைத் தயாரிக்கும் என்பதன் அடிப்படையிலேயே அமைந்துள்ளது. இந்தியாவின் புதிய பாதுகாப்பு அமைச்சரான ஜோர்ஜ் பெர்ணாண்டஸ் இதை ஊர்ஜிதம் செய்துள்ளார். இந்தியாவின் பாதுகாப்புக்கு அவசியம் எனக் கருதினால் அணு ஆயுதம் தயாரிக்க நிச்சயம் தயங்கமாட்டோம் என அமைச்சர் பொறுப்பை ஏற்றவுடன் பத்திரிகையாளரிடம் பேசியபோது தெரிவித்தார். இதனையே பாகிஸ்தானும் பிரதிபலித்துள்ளது. இந்தியா அணு ஆயுதத்தை தயாரிக்கும் பட்சத்தில் பாகிஸ்தானும் அணு ஆயுதத்தைத் தயாரிக்கும் என அது தெரிவித்துள்ளது. இவ்விவகாரத்தில் இந்தியா அணு ஆயுதத்தைத் தயாரிக்கின்றதோ இல்லையோ அணு ஆயுதம் ஒன்று தேவையெனக் கருதினால் இந்தியா அதனைத் தயாரிக்கும் முயற்சியில் பின்நிற்கப் போவதில்லை என்பதை வெளிப்படுத்துவதாகவேயுள்ளது. இந்நிலைப்பாடானது கடந்த காங்கிரஸ் ஆட்சியானாலும் சரி அதன்பின்னர் மாறி மாறி ஆட்சிக்கு வந்தவர்களும் சரி கடைப்பிடித்த கொள்கைதான். ஆனாலும், பாரதீய ஜனதாக் கட்சி இவ்விடயத்தில் ஓர் உறுதியான நடவடிக்கையில் சென்றுவிடும் என்று அக்கட்சி குறித்து கொண்டுள்ள அச்சமே இவ் விவகாரத்தை முனைப்புடன் நோக்கக் காரணமாகும்.

இந்தியாவின் அணு ஆயுத உற்பத்தி விவகாரமானது நீண்டகால சர்ச்சைக்குரிய விவகாரமாகவே இருந்து வருகின்றது. 1996–ல் கூட உலக அணு ஆயுத பரவலாக்கல் தடை ஒப்பந்தத்தில் இந்தியா கையொப்பம் இட மறுத்திருந்தது. அமெரிக்கா உட்பட பல நாடுகள் பலமான அழுத்தங்களைக் கொடுத்த போதும் இந்தியா இவ்விவகாரத்தில் விட்டுக் கொடுப்பதற்கு இடமில்லை என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்தது. இதனால், ஐ. நா. பாதுகாப்பு சபையில் அங்கத்துவம் பெறுவதும், நிரந்தர அங்கத்துவம் பெறுவதும் கூட பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. இந்த நிலையில் பாரதீய ஜனதாக் கட்சி அணு ஆயுத உற்பத்திக்கு செயல் வடிவம் கொடுத்தால் அது திட்டவட்டமாக தென்னாசிய புவிசார் அரசியலில் பெரும் மாற்றத்தை விளைவிக்கும் ஓர் அம்சமாகவும், இந்தியா – பாகிஸ்தான் உறவில் மட்டுமல்ல சர்வதேச உறவு நிலையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய ஓர் அம்சமாகவும் மாறும் என்பதில் ஐயமில்லை. ஏனெனில், அமெரிக்க, பாகிஸ்தான், சீனா உள்ளிட்ட ஓர் அணுவாயுதவாற்றல் பொருந்திய கூட்டணிக்கு எதிராக இந்தியா தனது வெளியுறவுக் கொள்கையை வகுக்க வேண்டிய தேவை அவசியமானதாகவே இருக்கும். இது தென்னாசியப் புவிசார் அரசியல் நிலைகளிலும் இராணுவ சமநிலையிலும் மாற்றத்தை உருவாக்க, தவிர்க்க முடியாது போகும்.

அவ்வாறு இல்லாது பாரதீய ஜனதா அணு ஆயுதம் தொடர்பான நிலைப்பாட்டைக் கால எல்லை இன்றி இவ்வாறே தொடருமானால் பாகிஸ்தானுடன் சில கட்டப் பேச்சுக்களை இந்தியா நடத்தக்கூடும். ஆனால், இது புவிசார் அரசியலில் எந்தவித தாக்கங்களை விளைவிக்கும் அல்லது மாற்றம் கொள்வதாக இருக்கும் என எதிர்பார்ப்பதற்கில்லை. இது தவிர பாரதீய ஜனதாக் கட்சி கூட்டணி அரசின் வெளியுறவுக் கொள்கையில் முக்கிய அம்சமாக இலங்கை குறித்த நிலைப்பாடு அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதாவது, காங்கிரஸ் கட்சி கடைப்பிடித்தது போன்று சிறீலங்கா அரசாங்கத்துடன் முழு அளவிலான விட்டுக்கொடுப்புடன் கூடிய நெருக்கமான உறவையோ அன்றி தேசிய முன்னணி கடைப்பிடித்தது போன்றதொரு தலையிடாக் கொள்கையையோ பாரதீய ஜனதாக் கட்சி கூட்டணி கடைப்பிடிக்கும் என எதிர்பார்ப்பதற்கு இல்லை என்றே இராஜதந்திர வட்டாரங்களில் கருதப்படுகின்றது.

பாரதீய ஜனதாக் கட்சியைப் பொறுத்து இலங்கை தொடர்பான விடயங்களில் மூன்று அம்சங்கள் முக்கியப்படுகின்றன. ஒன்று, தமிழக மீனவர் பிரச்சனை, இரண்டாவது கச்சைதீவு தொடர்பான விவகாரம், மூன்றாவது தமிழரின் இனப்பிரச்சனை தொடர்பான விவகாரம். இம்மூன்று விவகாரங்களிலும் பாரதீய ஜனதாக் கூட்டணியின் நிலைப்பாடு எவ்வாறு அமையப் போகின்றது என்பதே சிறீலங்கா தொடர்பான இந்திய வெளியுறவுக் கொள்கையைத் தீர்மானிப்பதாக இருக்கும். இதே சமயம் இனப்பிரச்சனை தொடர்பாக சிறீலங்கா அரசாங்கம்






www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கைக்கொள்ளும் வெளியுறவு சார்ந்த நடவடிக்கைகளும் இதில் பாதிப்புக்களை விளைவிப்பனவாகவே மாறக்கூடும். ஆனால், பல காரணங்கள் இருந்தும் பாரதீய ஜனதா கூட்டணியைப் பொறுத்து அவை இலங்கை தொடர்பான அணுகுமுறையில் எந்தளவு மாற்றத்துடனான வெளியுறவுக் கொள்கையைக் கொள்ளப்போகின்றன என்பதை அறுதியிட்டுக் கூறமுடியாது. ஆயினும், கடந்த ஒரு தசாப்தமாக கைக்கொள்ளப்படும் வெளியுறவுக் கொள்கையில் இருந்து சிறிதளவேனும் மாற்றமுடன் கூடியதான கொள்கையைக் கைக்கொள்ளும் வாய்ப்பே அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கலாம். இதற்கு பாரதீய ஜனதாக் கட்சியின் நிலைப்பாடு மட்டுமல்ல அதன் கூட்டணி அமைப்பில் இடம் பெறும் பிராந்தியக் கட்சிகளின் நிலைப்பாடும் ஒரு சில அமைச்சர்களின் நிலைப்பாடும் சாதகமாக இருப்பதற்கு வாய்ப்புண்டு. பொதுவாக பாரதீய ஜனதாக் கட்சியின் தலைமைப்பீடம் இலங்கை குறித்த விவகாரங்களை இதுவரை முனைப்புப்படுத்திப் பேசாதுவிட்டாலும் பாரதீய ஜனதாக் கட்சியினர் அளித்துள்ள சில பத்திரிகை, வானொலிப் பேட்டிகளில் சிறீலங்கா அரசின் இன்றைய நிலைப்பாட்டை தாம் அனுசரித்துப் போகப்போவதில்லை என்பதை ஊர்ஜிதப் படுத்தியுள்ளனர். இதற்கு எடுத்துக்காட்டாக அண்மையில் பாரிஸ் ஈழமுரசுப் பத்திரிகைக்குப் பேட்டியளித்த பாரதீய ஜனதாக் கட்சியின் செயலாளரான கோவிந்தச்சாரியா "ஈழத் தமிழ் மக்களின் பிரச்சனையை இராணுவ முறையில் தீர்க்க முயலும் சிறீலங்கா அரசிற்கு நாம் ஒருபோதும் ஆதரவு தரமாட்டோம். இந்தப் பிரச்சனையை அனுதாபத்துடனேயே நோக்குகின்றோம்" என்று தெரிவித்திருந்தார். இதனைப் பிரதிபலிப்பதாகவே பாரதீய ஜனதாக் கட்சியின் தமிழகப் பொதுச்செயலாளர் ப. கணேசனும் இருந்தார்.

"இலங்கைத் தமிழர் பிரச்சனையில் இந்தியா கண்ணை மூடிக் கொண்டு இருக்க முடியாது. நாம் இலங்கைத் தமிழருடன் ஒரே கலாச்சாரத்தையே கொண்டுள்ளோம். அங்குள்ள தமிழ் மக்கள் இன்னல்களுக்கு உட்படாமல் மகிழ்ச்சியாக வாழ்வதையே விரும்புகின்றோம்" எனத் தெரிவித்திருந்தார். இவ்வாறாக பாரதீய ஜனதாக் கட்சி சார்ந்தவர்களின் அபிப்பிராயம் இருக்கையில் அவர்களுடன் கூட்டணி சேர்ந்துள்ள ஆட்சியில் பாதுகாப்பு பொறுப்பை ஏற்றுள்ள சமதாக் கட்சித் தலைவர் ஜோர்ஜ் பெர்ணாண்டசும் அவருடைய கட்சியைச் சேர்ந்தவரும் கபினட் அமைச்சருமான நிரேஷ் குமார் ஆகியோர் கடந்த காலத்தில் ஆதரவு கொடுத்து வந்துள்ளனர். அது மட்டுமல்ல ஜோர்ஜ் பெர்ணாண்டஸ் இந்திய அரசின் தடைகளையும் மீறி டில்லியில் இலங்கைத் தமிழர் ஆதரவு மாநாடு ஒன்றையும் நடத்தியவர் ஆகும். இவர் சிறீலங்கா அரசாங்கம் தமிழ் மக்கள் மீது அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது என்பதோடு தமிழ் மக்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் எனவும் விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கும் வகையில் வெளியுறவுக் கொள்கை மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை வெளிப்படுத்துபவராக இருந்து வந்துள்ளார்.



இவர்களைத் தவிர பாரதீய ஜனதாக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் தமிழகத்தைச் சேர்ந்த பாட்டாளி மக்கள் கட்சி அத்தோடு அரசாங்கத்திற்கு வெளியில் இருந்து ஆதரவு வழங்கும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகம் என்பன இலங்கைத் தமிழர் விடயத்தில் இந்தியா ஆக்கபூர்வமான பங்களிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டவர்களாகும். இதில் பாட்டாளி மக்கள் கட்சி வெளிப்படையாகவே விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆதரிக்கும் அதேவேளை மக்கள் திராவிட முன்னேற்றக் கழகம் இலங்கைத் தமிழ் மக்கள் அமைதியாக வாழ்வதற்கு தனியான தமிழீழம் ஒன்றுதான் வழி எனத் தனது பொதுத் தேர்தல் ஒட்டிய அறிக்கையிலேயே தெரிவித்திருந்தது. ஆயினும், அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத் தலைவியான செல்வி ஜெயலலிதா கடந்த காலத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு மாறான நிலைப்பாட்டைக் கொண்டவராக இருந்திருப்பினும் தமிழக மீனவர் சிறீலங்கா கடற்படையினரால் தாக்கப்படுவது தொடர்பான விவகாரத்தில் சிறீலங்கா அரசுடனான உறவில் கசப்புற்றவராகவே இருந்துள்ளார். இதன் வெளிப்பாடாகவே கச்சைதீவினை மீளப் பெறவேண்டும் என்ற நிலைப்பாட்டினைக் கொண்டவராகவும் அதனை வலியுறுத்தி வருபவராகவும் உள்ளார். இறுதியாகப் பாரதீய ஜனதாக் கட்சி மத்தியில் ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள இதேவேளையிலும் அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம், கச்சைதீவை மீளப் பெறவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த நிலையில் இலங்கை தொடர்பாக பாரதீய ஜனதாக் கட்சி கூட்டணியின் அணுகுமுறையானது கடந்த கால இந்தியாவின் கொள்கையிலிருந்து குறிப்பிடத்தக்க அளவில் மாறுபட்டதாக இருக்கலாம் என்று கருத இடமுண்டு. இந்த வகையில் பாரதீய ஜனதாக் கட்சிக் கூட்டணியின் அணு ஆயுதம் தொடர்பான நிலைப்பாடும் சிறீலங்கா தொடர்பான வெளியுறவுக் கொள்கையும் தென்னாசியப் பிராந்தியத்தின் புவிசார் அரசியலை எந்தளவிற்கு மாற்றத்திற்குள்ளாக்கும் என்பது பலராலும் எதிர்நோக்கப்படும் முக்கிய கேள்வியாகவே இன்றுள்ளது. ஆனால், இம்மாற்றமானது தனியாக இந்தியாவின் நிலைப்பாட்டுடன் மட்டும் தொடர்புபட்டது அல்ல. பாகிஸ்தான், சிறீலங்கா போன்ற அரசுகளின் வெளியுறவுக் கொள்கைகளில் மேற்கூறப்பட்ட விவகாரங்களில் அந்நாடுகள் கைக்கொள்ளப்போகும் நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டதொன்றாகவே இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

**— ஜெயராஜ்**



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தப்பி ஓடும் இராணுவம்

## மீண்டும் மீண்டும் ஏன் இந்த அழைப்பு

**சிறீலங்கா இராணுவத்தில் இருந்து தப்பி ஓடியோர் விகிதாசாரம் மிகவும் உயர்வானது. உலக நாடுகளில் தப்பியோடியுள்ள இராணுவத்தினரின் விகிதாசாரத்தில் இது நிச்சயம் உயர்வானதொரு வீதத்திலானது என்பதில் கேள்விக்கே இடமில்லை.**

**இதே சமயம், சிறீலங்காவில் தப்பி ஓடிய இராணுவத்தினருக்கு மீண்டும் இராணுவத்தில் இணைய விடுக்கப்படும் தொடர்ச்சியான அழைப்பைப் போன்றோ அன்றிப் பலதடவை வழங்கப்பட்ட பொதுமன்னிப்பு - சலுகை அறிவிப்புக்கள் போன்றோ உலகில் வேறு எங்குமே விடுக்கப்பட்டதில்லை.**

**இவ்வாறான நிலைக்கு - இடைவிடாது தொடர்ந்து கொண்டிருக்கும் போரும், இராணுவம் இடைவிடாது சந்தித்துவரும் ஆளணி இழப்புக்களுமே காரணமாகும்.**

**இந்த நிலையில், இராணுவத்தின் ஆளணித் தேவையை உடன் நிறைவு செய்யக் கூடிய நிலையில், தப்பி ஓடிய சிப்பாய்களே 'றெடிமேற்' ஆக உள்ளனர். ஆகையினால்தான், பெரும் கிரிமினல் குற்றங்களைப் புரிந்துள்ள தப்பி ஓடிய சிப்பாய்களுக்கும், நாட்டின் ஜனாதிபதியில் இருந்து இராணுவத் தளபதி வரை செங்கம்பள வரவேற்பு அளிக்கின்றனர்.**

சுதந்திர தினப் பொன்விழாக் கொண்டாட்டங்கள் களையிழந்து போனதைத் தொடர்ந்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சிங்கள மக்களிடம் வைத்த முதற்கோரிக்கையானது – இராணுவத்தில் இருந்து தப்பி ஓடிய இளைஞர்களே மீண்டும் வந்து இராணுவத்தில் இணையுங்கள். உங்களுக்குப் பொதுமன்னிப்பும் சலுகைகளும் வழங்கப்படும் என்பதே ஆகும்.

அவ்வாறானால், இராணுவம் இதுவரையில் தனது இலக்குகளை அடைய முடியாமல் போனமைக்கும், பொன்விழாக்கொண்டாட்ட காலத்திற்கு முன்பாக நடந்துவிட்ட அசம்பாவிதங்களுக்கும் காரணம் இராணுவத்தில் ஏற்பட்டுள்ள ஆளணிப் பற்றாக்குறை என ஜனாதிபதி சந்திரிகாவிற்கு யாரும் தெரிவித்திருத்தல் வேண்டும். அல்லது சந்திரிகா குமாரதுங்க அதுவே காரணம் எனதான் ஒரு தீர்மானத்திற்கு வந்திருக்க வேண்டும்.

சிறீலங்கா இராணனுவத்தில் இருந்து தப்பி ஓடியோர் பற்றி கடந்த சில வருடங்களாகவே பேசப்பட்டு வருகின்றது. இவ்வாறு தப்பி ஓடியவர்களின் எண்ணிக்கை குறித்து தெளிவான தகவல்கள் பெறுவதில் சிரமங்கள் இருக்கின்ற போதும் *15,000 – 27,000* வரையில் இவர்களின் எண்ணிக்கை வேறுபடுகின்றது. இதேசமயம், சிறீலங்கா இராணுவத்தில் ஆளணிப் பற்றாக்குறையும் தொடர்ந்து பேசப்படும் விடயம் ஒன்றாகவே இருந்து வருகின்றது. அண்மையில்கூட யாழ். குடாநாட்டிற்கான இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் பல்லேகல, இராணுவத்தில் ஏற்பட்டுள்ள ஆளணி பற்றாக்குறை பற்றி பேசியிருந்தார். “யுத்தத்தை நாம் வெற்றிக்கு இட்டுச் செல்வதானால் இன்னும் இராணுவத்தில் அதிகபடியானோரைச் சேர்த்தாலே சாத்தியமாகும்” எனத் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், இனப்பிரச்சனைக்கு இராணுவ வழிமுறையில் தீர்வு காண்பதென்ற முடிவை மட்டுமே கொண்டுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இராணுவ ஆளணித் திரட்டல் விடயத்தில் நேரடியாக அக்கறை எடுத்துக் கொண்டார். அதிலும் குறிப்பாக இராணுவத்தில் இருந்து தப்பி ஓடியோரை மீண்டும் இராணுவத்தில் இணைத்துக் கொள்வதில் ஆர்வம் காட்டினார்.

இதற்கென ஜனாதிபதி சந்திரிகாவினால் பொது மன்னிப்பும் சலுகைகளும் அறிவிக்கப்பட்டன. அத்தோடு, இராணுவத்தில் இணைவதற்கான காலக்கெடுவும் வழங்கப்பட்டது. ஜனாதிபதியின் இம்முயற்சியைத் தொடர்ந்து அவரின் கோரிக்கைக்கு வலுச் சேர்க்கும் முகமாக இராணுவத் தளபதியினாலும் பொது மன்னிப்பும், சலுகைகளும் அறிவிக்கப்பட்டன. அதேசமயம், காலக்கெடுவிற்குள் இராணுவத்தில் மீண்டும் இணைந்து கொள்ளாதுவிடில் – அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரிக்

### சிறீலங்கா இராணுவத்திற்கு மற்றுமொரு பொதுமன்னிப்பு

தப்பியோடிய படையினருக்கு பல தடவை சிறீலங்கா அரசால் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டு காலக்கெடு விதிக்கப்பட்ட போதிலும் அரசு எதிர்பார்த்தது போல் தப்பிச்சென்ற படையினர் பெருமளவில் திரும்பி வராததால் மீண்டும் ஒரு பொது மன்னிப்பு சிறீலங்கா அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இம் மன்னிப்பானது 05.05.98 தொடக்கம் ஐந்து தினங்களுக்கு இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இவ் பொதுமன்னிப்பை ஏற்று படைக்கு மீளாதவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அறிவித்துள்ளார்.

–'ஈழமுரசு'



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# பொதுமன்னிப்பு !?

வவுனியா இராணுவ முகாமைச் சேர்ந்த 2 இராணுவத்தினர் கடந்த 22–ம் திகதி, ஓட்டோ வண்டியைக் கடத்திச் செல்ல முற்படுகையில் செட்டிக்குளம் – மதவாச்சி வீதியில் அமைந்திருக்கும் நீரியன்குளம் பகுதியில் பொலிசாரினால் கைது செய்யப்பட்டனர்.

சிவில் உடையில் சென்ற 2 இராணுவத்தினர், ஓட்டோ ஒன்றை வாடகைக் கமர்த்தி, பின் சாரதியை பலவந்தப்படுத்தி, அவனது கையையும் கட்டிவிட்டு, இருவரும் தப்பிச் சென்றனர். இருப்பினும், நீரியன்குளம் சோதனைச் சாவடியில், சந்தேகத்தில் அவர்கள் தடுக்கப்பட்டனர்.

அதேநேரம், சாரதி தனது கட்டுகளைத் தானே அவிழ்த்து, அருகிலுள்ள PLOTE அலுவலகத்தில் முறையிட்டு, அவர்களுடன் நீரியன்குளம் பொலிஸ் நிலையத்திற்குச் சென்றனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் ஓட்டோவைக் கடத்திய குற்றச்சாட்டின் பேரில் நடைபெற்ற விசாரணையில், அக்குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

சிறீலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட விசாரணையினூடாகக் கடந்த ஆண்டு செப்டம்பர் 15–ம் திகதி மற்றுமொரு ஓட்டோவைக் கடத்தினர் என்பதுடன், அதனை கொழும்பில் 40,000 ரூபாவிற்கு விற்றுள்ளது தெரியவந்துள்ளது.

அவர்கள், இராணுவத்தில் இருந்து விலகி, இந்தப் பணத்தில் தமது வாழ்க்கைச் செலவைக் கொண்டுசென்றுள்ளனர். எனினும், சிறீலங்கா அரசின் "தப்பியோடிய இராணுவத்திற்குப் பொதுமன்னிப்பு" வழங்கும் அரசின் சலுகையைப் பயன்படுத்தி மீண்டும் சிறீலங்கா இராணுவத்தில் இணைந்தனர்.

— 'தமிழ்நெற்'

கவும்பட்டுள்ளது.

இராணுவத்தில் ஏற்பட்டுள்ள ஆளணிப்பற்றாக்குறையைப் போக்குவதற்கு – தனியாக தப்பியோடியவர்களை மீண்டும் இராணுவத்தில் சேர்த்துக் கொள்வதுதான் வழிமுறை என அரசாங்கம் கருதவில்லை. புதியவர்களையும் அரசாங்கம் சேர்த்துக் கொள்ளும் முயற்சியிலும் ஈடுபட்டே வருகின்றது. ஆனால், தப்பியோடியவர்களில் காட்டும் ஆர்வம் சற்று அதிகப்படியாகவே இருக்கின்றது.

இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். ஒருபுறம் புதிதாக இராணுவத்தில் சேர்த்துக்கொள்ளும் பணி தப்பி ஓடியவர்களைச் சேர்த்துக் கொள்வது புதியவர்களைச் சேர்த்துக் கொள்வதை விடக் கடினமானதாக இருக்கலாம். அத்தோடு, தப்பி ஓடியவர்களைச் சேர்த்துக் கொள்வதைவிட இலகுவானதாகக் கூட இருக்கலாம். மேலும், தப்பி ஓடியவர்களை அச்சுறுத்தக் கூடியதொரு வாய்ப்பும் அரசாங்கத்திடம் உள்ளது.

தப்பி ஓடிய இராணுவத்தினை மீண்டும் சேவையில் அமர்த்துவதற்கு அரச தரப்பில் இருந்து பிரதானமாகக் கூறப்படும் காரணங்களில் ஒன்று பயிற்சிக்கான செலவீடாகும். அண்மையில்கூட, தப்பி ஓடியோரை மீண்டும் இணையும்படி விடுத்துள்ள அறிவிப்பில், ஒரு இராணுவச் சிப்பாயை பயிற்றுவிப்பதற்கு ஒரு இலட்சம் தேவைப்படுவதாகவும் – அது பெரும் பொருளாதாரச் சுமை என்ற ரீதியிலும் பேசியிருந்தார்.

ஆனால், வருடாந்தம் 5000 கோடி ரூபாவிற்கு மேல் இராணுவத்திற்குச் செலவிடுகையில் ஒரு இராணுவச் சிப்பாயைப் பயிற்றுவிக்க ஒரு இலட்சம் ரூபா செலவு செய்வதென்பது அரசைப் பொறுத்து பெரிய விடயம் எனக் கூறிவிட முடியாது. ஆகையினால், இவற்றிற்கும் அப்பால் அரசு – இராணுவத்தரப்பு தப்பி ஓடிய இராணுவத்தினர் மீது அக்கறை கொள்வதற்கு வேறு காரணங்கள் உண்டு என்பதே யதார்த்தமானதாகும்.

சிறீலங்கா இராணுவமானது இன்று பெரும் சகதி ஒன்றினுள் காலை வைத்தது போல் – 'ஜயசிக்குறு' படை நடவடிக்கையை நடத்திக் கொண்டிருக்கின்றது. சிறீலங்கா இராணுவ வரலாற்றில் என்றுமில்லாத இழப்புடன் – நீண்டு செல்லும் இவ் இராணுவ நடவடிக்கையை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என அரசு தீவிரமாக முயற்சித்துக் கொண்டிருக்கின்றது. ஏனெனில், அந்தளவிற்கு இந்நடவடிக்கையானது அவமானகரமானதாகவும், இராணுவத்திற்கு அவலமானதாகவும் உள்ளது.

ஆனால், முடித்து வைப்பதானால் இராணுவ ஆளணி பெருக்கப்பட வேண்டிய நிர்ப்பந்தம் இராணுவத்திற்கு கட்டாயம் உள்ளது எனக் கருதப்படுகின்றது. 'ஜயசிக்குறு' படை நடவடிக்கை திட்டமிட்டதற்கு மாறாகப் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்திருப்பதினால் – இவ்வாறானதொரு நடவடிக்கையே இப்படை நடவடிக்கையை முடிவிற்குக் கொண்டுவர உதவும் எனக் கருதப்படுகின்றது. ஆனால், இதற்கென இலங்கையின் எப்பகுதியில் இருந்தும் படை அணிகளை மீளப் பெறமுடியாத நிலையிலேயே அரசு உள்ளது.

ஒருபுறம் வடக்கு – கிழக்கில் ஏற்கனவே குறைக்கக்கூடிய அளவில் இராணுவம் குறைக்கப்பட்டுள்ளது. இதனையும் மீறிக் குறைப்பு செய்யப்பட்டால் அப்பகுதிகளில் – இராணுவம் பெரும் இழப்புக்களைச் சந்திக்க வேண்டிவரலாம் அல்லது பிரதேசங்கள் பலவற்றைப் பறிகொடுக்க வேண்டி வரலாம். மறுபுறம், கொழும்பிலிருந்தோ அன்றித் தென்னிலங்கையில் இருந்தோ துருப்புக்களை நகர்த்துவதென்பது சாத்தியமானதொன்றல்ல. ஏனெனில், அவ்வாறு நகர்த்தப்பட்டால் பெரும் விபரீதமான காரியங்கள் இடம்பெறினும் ஆச்சரியப்படுவதிற்கில்லை என அரசு தரப்பும் உறுதியாக நம்புகின்றன.

இந்த நிலையில்தான் அவசர தேவையாகவுள்ள இராணுவ ஆளணியைத் தப்பி ஓடிய துருப்புகளில் இருந்து சேர்த்துக் கொள்ள அரசாங்கம் விரும்புகின்றது. இவ்வாறு தப்பி ஓடியவர்களைச் சேர்த்துக்கொள்வதன் மூலம் அரசாங்கம் கூறுவது போன்று பொருளாதாரச் செலவீடு குறைக்கப்படும் என்பதைவிட பயிற்றப்பட்ட துருப்புக்கள் உடனடியாக மிகக் குறுகிய கால பயிற்சியுடன் ஓரிரு வார காலத்திற்குள் – யுத்த முனைக்கு அனுப்ப வாய்ப்புக் கிட்டும் என்பதே உண்மையாகும்.

ஒரு வகையில் பார்க்கப்போனால் – தப்பி ஓடிய துருப்புக்கள் மிகக் குறைந்த செலவுடன் – உடன் பெற்றுக் கொள்ளக்கூடிய 'றெடிமேற்' ஆடைகள் போன்று உள்ளனர் எனலாம். ஆனால், தப்பி ஓடிய துருப்புக்கள் அரசாங்கத்தினதும், இராணுவத் தலைமையினதும் கோரிக்கைகளுக்குச் செவிமடுப்பார்களா? என்பது சந்தேகமே. ஏனெனில், அவர்கள் யுத்தத்தின் விளைவுகளைச் சந்தித்ததன் விளைவாகவே இராணுவத்தை விட்டுத் தப்பி ஓடியவர்கள். இவர்கள் எவ்வாறு முன்னைய நிலையைவிட இன்று தீவிரம் பெற்றுவிட்ட யுத்தத்தில் பங்காற்ற முன்வருவார்கள் என அரசு எதிர்பார்க்க முடியும்? ★



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# அழியா ஞாபகங்களோடு புதிய கனவும்



அன்றுதான் அந்தச் சந்திக்கு வந்தான். பலகாலமாக அங்கு போவதற்கு நினைத்திருந்தான். முன்பு நினைத்த பொழுதெல்லாம் அந்தச் சந்திக்குப் போவான். இப்போது இவ்வளவு யோசிக்க வேண்டியிருக்கிறது. பொதுவாக அம்மா அவனை வெளியில் போக விடுவதில்லை. இன்று கோயிலைச் சாட்டிவிட்டு வெளியேறியிருந்தான்.

எப்படித்தான் அவனது முந்தைய செயற்பாடுகள் அவர்களுக்குத் தெரிந்ததோ தெரியவில்லை; அவனைத் தேடி வந்துவிட்டார்கள்.

இப்போதெல்லாம் 'அவர்கள்' மிகவும் டிப்ளமேட்டாக நடந்து கொள்கிறார்கள். முன்பெல்லாம் இப்படியான ஒரு 'கேஸ்' என்றால், எவ்வளவு தான் தோன்றித்தனமாக நடந்துகொள்வார்கள். தூஷண வார்த்தைகளை கூறியபடி வகுப்பறைக்குள் வந்து விடுவார்களே. நரி வேலை செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். இப்போதுதான் உண்மையான ஆபத்து எமக்கு வந்திருக்கிறது. அதிபரிடமிருந்து அவனுக்கு அழைப்பு வந்தது. காரியாலயத்திற்கு வரும்படி. நேற்று 'டிப்பாச்ச'ருக்கு கையெழுத்து வைக்காமல் போயிருந்தான். இப்போதுதான் ஞாபகம் வந்தது. 'அதுதான் கூப்பிட்டு இருக்கிறார்' என எண்ணினான். பொதுவாக அநேகர் எந்தச் சூழ்நிலையிலும் காரியங்களை ஒழுங்காகச் செய்கிறார்கள். அந்நியரால் கைவிலங்கிடப்பட்டுள்ள இந்த வாழ்விலும், கர்மவீரர்களைப்போல் நடந்துகொள்கிறார்கள். அவனால் எதையும் சரிவரச் செய்யமுடியவில்லை. வீட்டுக்குப் போகும் போது கையெழுத்திட்டுச் செல்லுதல் போன்ற விஷயங்களில், அவன் என்றுமே முன்பெல்லாம் பிழைவிட்டதில்லை. அதிபர் இன்று திட்டப்போகிறார்.

'டிப்பாச்ச'ருக்கான கையொப்பம் போடாமல் அரைநாள் லீவுபோடத் தனக்கு அதிகாரம் உண்டு என்பார். நேற்றுக் கடைசிப் பாடத்தின் போது, அவனை ஏழாம் வகுப்பிற்கு வந்து சந்தித்தவர்தான். சிறிது நேரம் வகுப்பின் கடைசி வரிசையில், ஒரு நாற்காலியைப் போட்டுக்கொண்டிருந்து, அவனது படிப்பித்தல் பற்றிக் குறிப்பெடுத்துக்கொண்டு இருந்தார். அண்மையில் அவருக்கு, ஆசிரிய தொலைக்கல்விக்கான பகுதிநேர போதனாசிரியர் வேலையும் கிடைத்திருக்கிறது. வாயை மூடிக்கொண்டிருக்க வேண்டும். அவனது தொலைக்கல்வி நெறியை முடிக்க, அவரது அனுசரணையும் தேவையாக வேறு இருக்கிறது. பேசுவதைப் பேசட்டும். அரைநாள் லீவு போடவேமாட்டார். அதிகாரம் உண்டு என்ற சொல்லை அவர் கூறும் ஒவ்வொரு தடவையும், அவருக்கு அதில் ஒரு 'கிக்' ஏற்படுகிறதோ என்னவோ. பாடசாலையில் ஒரு நாளைக்குப் பத்துத்தரம் அந்தச் சொல்லைச் சொல்வார்.

அதிபரின் அறைக்குள் நுழைந்தவனுக்கு, அங்கு 'அவர்கள்' அமர்ந்திருந்ததைக் காண பயம் ஏற்பட்டது. முதுகுத்தண்டிற்குள் ஏதோ ஒன்று குளிர்போல் ஓடி, அதனால் தோள்பட்டைகள் சிலிர்த்துக்கொண்டன. அவனது குடிகார அப்பா உடனிருந்த போதும், தினமும் அடிப்பார். அப்போதிருந்தே இவ்வகையான உணர்வு, அவனுக்குப் பயம் ஏற்பட, உடன் உண்டாகிறது. ஆங்கில 'ரகுலா'ப் படங்களில் வரும் 'கிறிஸ்ரப்பர்—லீ' என்ற நடிகன், தான் 'ரகுலா'வாக மாறுவதற்கு சற்றுமுன் ஒரு சிரிப்புச் சிரிப்பான். அதேபோல் அவர்களில் ஒருவன் சிரித்த சிரிப்பு இருந்தது. வியர்த்து விட்டது அவனுக்கு. உடம்பின் உஷ்ணமெல்லாம் குறைந்து, உறைநிலைக்கு வந்துவிட்டான். அவர்கள் அவனை எதுவுமே கேட்கவில்லை. அதிபரிடம் விஷயங்களைச் சொன்னார்கள். அதிபர் எதுவுமே கதைக்காமல் இருந்தார். அதிபரிடம் சிரித்துத்தான் கதைத்தார்கள். அதி

- சு. மகேந்திரன்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

பரின் முகத்தில் ஈ ஆடவில்லை. போராளிகளுடன் நேரடியாகச் சம்பந்தப்படாதவர்களிடம், தமக்கு பிரச்சனை எதுவுமே இல்லை என்பது போல் நடிக்கிறார்கள். அதிபருக்குக் கைகுலுக்கிவிட்டுச் சென்றார்கள்.

பாடசாலையின் ஒரு பகுதி இராணுவமுகாம். பாடசாலை முடிந்த பின்பு வரச்சொல்லிவிட்டுச் சென்றார்கள். அவனது மனம் அலைபாய்ந்தது. 'நொருக்கப் போகிறார்கள்'.

அவனது கதைகளை, கவிதைகளை அலசி ஆராய்ந்தார்கள். அவன் எழுதிய சஞ்சிகைககள் எல்லாம், விசாரணை மண்டபத்திலிருந்த மேசையின் மேல் கிடந்தன. இந்தியச் சஞ்சிகையொன்றில், அவன் எழுதிய கதைக்குக் கிடைத்த பரிசு பற்றியும் விசாரித்தார்கள். பரிசு கிடைத்தது உண்மைதான். ஆனால், இடையில் பத்திரிகையே நின்றுவிட்டதால் பரிசுக்கான தொகை கிடைக்கவில்லை என்றான். விசாரணையின் போது இரும்புக் கம்பியால் அடிவாங்கினான். வெளியே வந்தபோது தான் குறிவைக்கப்பட்டுவிட்டது அவனுக்குத் தெரிந்தது. நடந்தவற்றை அம்மாவுக்கோ தங்கைக்கோ கூறிவிடக்கூடாது. வாயைத் திறக்க வேண்டாமென்று, ரேவதி ரீச்சரிடம் சொன்னான்.

சந்தி 'பண்டி'ற்குள் இருக்கிறது. சந்தியில் அவனுக்கு எந்தவித வேலைகளுமில்லை. நடைப்பிணமாக வாழும் அவனது இனத்தவர்கள் எவருக்குமே, விஷேடமான வேலைகள் எதுவுமில்லை. தூரத்துக் கோயில்களுக்கே மக்கள் போவதில்லை. எவ்வளவு குறுகிய வட்டமாகி விட்டது வாழ்க்கை. பகீரென்றது அவனுக்கு. இப்போதுதான் அதனை முதன் முதலாக உணர்ந்து கொண்டது போலிருந்தது. ரோட்டில் பலமாகக் கத்தித் தலைதெறிக்க ஓடவேண்டும் என்று இருந்தது. இங்குள்ளோர் எல்லோருக்குமே கடைக்குப் போவது, பாடசாலைக்குப் போவது, பின்னேரங்களில் குழை குத்தும் கம்பியால் யாருமற்ற வீட்டுத் தோட்டங்களில் நிலத்தில் விழுந்து கிடக்கும் பழுத்த பலா இலைகளைக் குத்துவது, அப்படியே வேலிக் கதியால்களில் குழை ஒடிப்பது என காலம் போய்க்கொண்டுதானிருக்கிறது. செக்குமாட்டுச் சீவியம்தான், அவனால் அப்படி இருக்க முடியாமல் இருக்கிறது. அடங்கி உறைந்து போய் வீட்டிற்குள் இருக்க முடியவில்லை. 'நீ மட்டும்தான் நூதனமானவனாக இருக்கிறாய். என்ன இலக்கியமோ என்ன மாயமோ உன்னை

# சிங்களத்துக்கு தீச்சுவாலைகளும் இடிபாடுகளுமாகிய 1997

1998-ம் ஆண்டு பிறந்துவிட்டது. வழமையாகப் புதிய ஆண்டு பிறக்கும்போது முடிந்த ஆண்டின் பெறுபேறுகளை, நிகழ்வுகளைச் சீர்தூக்கித் தொகுத்துப் பார்ப்பது வழமை. பத்திரிகைகள் தமது பார்வைக்கேற்ப விதவிதமான படங்களுடன் இவ்விபரங்களைத் தொகுத்தளிப்பது வழக்கம்.

சிங்களத்தின் வாசகன் ஒருவனுக்கு கடந்து வருட நிறைவு வாரப் பத்திரிகைகள் வெளியிட்ட 'Flash back 97' என்ற மீளாய்வு நிச்சயமாக உற்சாகமளித்திருக்க மாட்டாது என்பது சத்தியமான உண்மை.

ஏனென்றால் கடந்தவருட சம்பவங்களாக வெறுமனே வெளிநாட்டு விருந்தினர்களின் வருகையும், சில கிறிக்கெற் வெற்றிகளும், பல விமான விபத்துக்களும், கொழும்பை உலுக்கிய குண்டுவெடிப்புக்களும், பெருமளவிலான இராணுவ இழப்புக்களுமே புகைப்படங்களாகச் சித்தரிக்கப்பட்டிருப்பதைக் காணும் எந்தச் சிங்கள வாசகனால் உற்சாகம் கொள்ள முடியும்? ஒரு நடுநிலையான பார்வையாளனுக்கோ இலங்கையின் எதிர்காலம் குறித்து கேள்விகளை எழுப்பக் கூடியவை அவை:

நொருங்கி வீழ்ந்து தீய்ந்து கிடக்கும் விமானங்கள், அடிபட்டு நொருங்கிக் கிடக்கும் ராங்கிகள், திகிலமடைந்து போய்நிற்கும் 'ருவின் ரவர்' கட்டிடம் இவை எல்லாவற்றில் இருந்தும் ஒருசேர மேலெழும் கரும்புகையை வெறுமனே சனத் ஜெயசூரிய பெற்ற வெற்றிக் கிண்ணங்களும், சுகந்திகா ஜெயசிங்காவின் பதக்கமும் மறைத்துவிட முடியவில்லை. ஆக சிங்களத்தை இன்று உற்சாக போதையில் ஆழ்த்துவது விளையாட்டுத் துறை ஒன்றே. ஆனால் இது எவ்வளவு காலத்துக்கு நீடிக்க முடியும்.

குடியிருக்கும் வீட்டுக்கதவு குண்டு வெடிப்பில் அதிர்ந்து நடுங்கிக்கொண்டிருக்க, தினம் தினம் வடக்கு - கிழக்குப் போர்முனையில் இருந்து பிணங்கள் இறக்குமதியாகிக் கொண்டிருக்கும் சூழலை நீண்ட காலத்துக்கு இந்த மினுமினுப்புகளால் மறைத்துவிட முடியாது.

ஏன் இவ்வளவு அனர்த்தங்களும் நிகழுகின்றன? குண்டுச் சிதறல்களும் அவற்றால் எழும் தீச்சுவாலைகளுமே இலங்கைக்குப் பரிசளிக்கப்பட்டுள்ளதா? ஆட்சியாளர்கள் கடைப்பிடிக்கும் இனவாதப் போக்குகளே இதற்கெல்லாம் காரணம். தமிழர் தாயகக் கோட்பாட்டினை சிதைத்து தாயக பூமியை ஆக்கிரமித்து தம்பிடியை அதில் இறுக்குவதென்ற இராணுவவாதக் கோட்பாடு பரிசளித்த அவலங்களே இவை.

நீண்ட வரலாற்றில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த எல்லா ஆட்சியாளருமே மெல்ல மெல்ல தமிழர் நிலத்தில் பதிக்கமுயன்ற இராணுவத் தடங்கள் இன்று வன்னியைப் பிளந்து ஏற்கனவே கைப்பற்றப்பட்ட யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு ஒரு "தொப்புள் கொடியை" உருவாக்க விளைந்து முனைந்து போரிடுகின்றது. சிங்களம் இந்த நிகழ்வை அடிபட்டதொரு 'டாங்கி'யைப் பிரசுரித்து "யூனில் தென் ஆசியாவிலேயே மிகப் பெரும் இராணுவ நடவடிக்கை தொடங்கப்பட்டது" என்று எழுதிவிட்டுப் பெருமூச்சு விடுகிறது ஒரு கொழும்புப் பத்திரிகை.

முன்பு போலெல்லாம் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் ஏற்றும் சிங்களக் கொடியின் படத்தைப் பிரசுரித்து இறும்பூத்தெய்த அவற்றிற்கு இம்முறை வாய்க்கவில்லை. ஆனால், அதற்கு மாறாக 98-ம் ஆண்டின் இரண்டாம் நாளில் பட்டப் பகலில் கரிப்பட்ட முறிப்புப் பகுதியில் ஊடுருவிய கரும்புலிகள் இராணுவ வழங்கலைச் செய்து கொண்டிருந்த ரஷ்யத் தயாரிப்பு எம். ஐ. -17 ஹெலிகொப்ரர் ஒன்றைத் தகர்த்தெறிந்துவிட்டு வெற்றிகரமாகத் திரும்பியுள்ளனர். கடந்துபோன ஆண்டு மட்டுமல்ல, பிறந்த ஆண்டுகூட சிங்களத்துக்கு தீச்சுவாலையையே பரிசளிக்கப் போவதான அறிகுறி இது.

எந்தவிதமான அபிவிருத்தித் திட்டங்களின் தொடக்கமோ, நடைமுறைப்படுத்தலோ, மக்கள் நலச் செயற்பாடுகளோ இன்றி கடந்த வருடம் கழிந்து போயுள்ளதென்ற கசப்பான உண்மையை சிங்களம் ஜீரணிக்கத்தான் வேண்டும். ஏனென்றால், இந்நிலை உருவாகக் காரணமான யுத்தத்திலே அபிவிருத்தி பொருளாதாரத் திட்டங்களிலே செலவிட வேண்டிய பணத்தை அரசு கொட்டிக் கரியாக்குவதை 'தமிழர் மீதான போர்தானே என்றோ அன்றித் தமிழர் நிலத்தைப் பிடிக்க வேண்டும் என்றோ பார்த்துக் கொண்டிருந்தவர்களல்லவா அவர்கள். ஆகவே அதன் அறுவடையைச் சகித்துக் கொள்ள வேண்டிய தார்மீகப் பொறுப்பும் அவர்களிற்கே உள்ளது.

— சத்தியமூர்த்தி



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

ஒரு நாளைக்கு இழந்துவிடத்தான் போகிறேன்' அம்மா. அவன் தூரத்துக் கோவிலொன்றுக்குப் போகப் போகிறேன் எனக் கூறியபோது வெடித்தாள். இலக்கியக் கூட்டங்கள் கோயில்களில் நடைபெறுவதில்லை என அவளுக்குத் தெரியாதா என்ன.

அந்தச் சந்தி என்ன மற்றச் சந்திகளிலிருந்து வேறுபட்டதா? எல்லாச் சந்திகளும் ஒன்றுதான். அடையாள அட்டையுடன் அப்பாவி மக்கள். அவர்களை தாம் ஆட்சி செய்கிறோம் என்ற திமிரில் செயற்படும் இராணுவத்தினர். கிழக்குப் பகுதியைச் சேர்ந்த கவிஞன் ஒருவன் இயற்றிய கவிதையில் கூறிய 'கீழிறக்கச் சுழிப்பில் வரவழைத்த கடுகடுப்பு' என்ற உணர்வு இப்போதெல்லாம் ஒருவித நக்கல் சிரிப்பாக மாறி இருக்கிறது. அவனுக்கு இதைப் பார்க்கும் போதெல்லாம் – 'தெருக்களில் நாம் படும் அவமானங்களைக் காணும் போதெல்லாம் கண்களைப் பிடுங்கி எறியும் அளவுக்கும், இதயம் இருப்பவன் அது இருக்கிறதா என ஒவ்வொரு கணமும் தொட்டுப் பார்த்துக் கொள்ள வேண்டும் போல உள்ளது' எனவும் ( துணிந்து சொன்னார் வாழ்க) இலக்கியக் கருத்தரங்கொன்றில் ஒருவர் சொன்ன கூற்று எவ்வளவு மெய்யானது என்ற எண்ணம் வரும்.

போராளிகள் இங்கு இருந்த போது வெளிவந்த பத்திரிகையொன்றில் பணி செய்தவன் அவன். அப்போதெல்லாம் எவ்வளவு ஆனந்தமாகக் காலம் கழிந்தது. ஆசிரியனாக அவன் அப்போது இருக்கவில்லை. அவனது மண்ணின் வாழ்வும் வளமும், எதிரியின் பொருளாதார நெருக்கடியால் பாழ்பட்டிருந்தது. ஆனால், அலாதியான ஓர் மகிழ்வும் இந்த நெருக்கடிக்குள்ளும் இருந்ததே. எதையும் பயமின்றிக் கதைத்தானே.

மண்ணுக்காக உயிர் நீத்த தியாகிகளின் நினைவு நாள் ஒன்றில், அவனும் மொட்டை மாஸ்ரரும் (இன்னும் சில நண்பர்களும் இருந்தார்கள். யார்யாரென ஞாபகம் வரமாட்டேன் என்கிறது) அந்தச் சந்தியில் நின்றபடி, நிகழ்வுகளைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். நேரம் நடுநிசியைத் தாண்டியிருந்தது. எத்தனை விடயங்களைப் பற்றிக் கதைத்திருப்பார்கள். எவ்வளவு சுதந்திரமாக மனிதர்கள் உலாவினார்கள். அவன் எதையும் இலகுவில் மறந்துவிடுபவன் அல்ல. அன்று அவனுடன் நின்றவர்கள் யார் யார் என எவ்வளவு முயன்றும் ஞாபகத்துக்குக் கொண்டுவர முடியாமல் உள்ளதே. 'குறி



வைக்கப்பட்டு விட்டேன்' என்பதால் ஏற்பட்டுவிட்ட தடுமாற்றம்தானே இது. அவர்களிடம் தண்டனை பெற்று விடுதலையான எல்லோருமே கூறுகிறார்கள், தம் நிலைமை முன்பு போல் இல்லையென. மனக்குழப்பம் வந்துவிடுமோ? அவன் பயந்தான்.

அவன் 'பண்டி'ற்குள் இருக்கும் அந்தச் சந்திக்கு வந்தபோது பீடிமாஸ்ரர் அங்கு நின்றிருந்தான். பீடிமாஸ்ரர் தோட்டவேலை செய்துகொண்டிருக்கிறான் என யாரோ கூறியது உண்மைதான். உடைகளில் பட்டிருக்கும் சிவப்புக்காவி நிறத்தைப் பார்த்தாலே புரிகிறது. பீடிமாஸ்ரரிடம் உள்ள குறைபாடே பீடி குடிப்பது ஒன்றுதான். பலர் இங்கு எந்த நேரத்தில் எது நடக்குமோ என்ற அச்சத்திலிருந்து தம்மைத் தவிர்த்துக்கொள்ள 'செயின்சுமோக்கர்கள்' ஆகியிருக்கிறார்கள். முன்பு பீடிமாஸ்ரர் விதம் விதமான ரீசேட்டுக்களை அணிந்து கொண்டு இலக்கியக் கூட்டங்களுக்கு வருவான். இப்போது அவனிருக்கும் தோற்றத்தைக் கண்டால் யாரும் நம்பமாட்டார்கள். அவனது தொழிலும் தோற்றமும் அவனுக்கு ஒரு 'கவர்' ஆக இருக்கும். 'அன்னா அக்கமத் தோவா' நெருக்கடிக்குள் ஆட்பட்டிருந்த காலகட்டத்தில், தனது சிநேகிதர்களிடம், தான் எழுதிய கவிதை வரிகளை மனனம் செய்து வைப்பித்து இருந்தது போல் செய்ய, அவனால் முடியாதுள்ளதாம். அவனது விவசாயச் சிநேகிதர்களுக்கு கவிதையில் நாட்டமில்லையாம். சிலவேளைகளில் கவிதைகள் பீறிட்டு வருமாம். பீடிப்பக்கற்றின் உள் உறைகளில் எழுதிவிட்டு, பின்பு, முன்பு போலவே பைக்கெற்றாக்கி மூலையில் போட்டு வைப்பானாம். சிலவற்றை ஒழுங்காக நகல் எடுத்து, வெளியே அனுப்பி வைத்துள்ளானாம். பீடி குடித்தாலும் நல்ல காரியங்களும் செய்கிறான். 'நானும் அப்படிச் செய்ய வேண்டும்' தனது ஆசிரியத் தொழிலுக்கான அடையாள அட்டை தனக்குப் பல தடவைகள் பாதுகாப்பைத் தந்ததை அவன் நினைவு கூர்ந்தான். உண்மைதான். ஆனால், அவனது தொழில், அவர்களுக்கு அவனை இலகுவில் இனம் காண வைத்துவிட்டதே. குறிவைக்கப்பட்டு விட்டானே!

எனினும், தனது வயிற்றைக் கழுவ இந்த ஆசிரியத் தொழில்தான் அவனுக்கிருக்கிறது. பீடிமாஸ்ரர் போல் தோட்டவேலை செய்ய அவனால் முடியாது. குச்சி போன்று, முறிந்துவிடும் தோற்றம் கொண்டது அவனது உருவம். முன்பு, நகரத்திலிருந்து இடம் பெயர்ந்து தென்மராட்சியில் தங்கியிருந்த அந்த நாட்களில் ஒரு முறை மொட்டை மாஸ்ரரைச் சந்திக்க அவரது வீட்டுக்குச் சென்றான். சாப்பிடும்போது மொட்டை மாஸ்ரரின் மனைவி சோற்றை அள்ளி அள்ளிப்போட்டாள். "நன்றாகச் சாப்பிடுங்கள். உங்கட கைகள் என்ன குச்சியாக இருக்குது. கையில் உள்ள மணிக்கூட்டைக் கூட உங்கட கை தாங்காது போல உள்ளது" என்றாள் விகடமாக. அந்தச் சிறிய பாறாங்கல் போன்ற 'கருடா'க் கடிகாரம் இப்போது அவனது கையில் உள்ளது. இப்போது அவனது கைகளை மாஸ்ரரின் மனைவி பார்த்தால் பயந்தே விடுவாள். அவன் நன்றாகச் சாப்பிடுகிறான்தான். ஆனால், என்ன என்று தெரியவில்லை; மெலிந்து கொண்டே செல்கிறான். 'அவர்கள்' பற்றிய பயமாகத்தான் இருக்கும்.

பீடிமாஸ்ரர் பத்துநிமிடத்தில் எல்லாவற்றையும் கொட்டித் தீர்த்து விட்டான். முன்பு தடை செய்யப்பட்ட யூரியா கிடைக்கிறது என்பது உண்மைதானாம். புகையிலை செய்தானாம். விற்க முடியவில்லையாம். வீட்டில் சிப்பம்



www.tamileelamarchive.com

சிப்பமாக அடுக்கி வைத்திருக்கிறான். மீண்டும் கடன்பட்டு குரக்கன் விதைத் திருக்கிறானாம்; உணவு நெருக்கடி வந்தாலும் வரலாம் என்றான்.

பீடிமாஸ்ரர் பரவாயில்லை. கதைக்கவாவது செய்திருக்கிறான். பலர் அவனைக் கண்டவுடன் விலகிச் சென்று விடுகிறார்கள். அவனுடன் முன்பு நெருங்கிப் பழகியவர்களில் சிலர் சிரித்துவிட்டுச் செல்கிறார்கள். விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டவன் என்ற செய்தி எங்கும் பரவிவிட்டது. எவரும் தொல்லைகட்கு உட்படுவதை விரும்புவதில்லைத் தானே! அவனது மனம் சமாதானம் கூறியது.

முன்பு போல் அவனால் பொறுமையாக ஒரு இடத்தில் இருந்து கொண்டு ஒரு செயலைச் செய்தமாதிரி இப்போது ஒரு காரியத்தையும் செய்ய முடியவில்லை. பள்ளிக்கூடம் பரவாயில்லை. எல்லோரும் இயந்திரமாக இயங்கிக் கொண்டிருப்பார்கள். அவனும் அவர்கள்போல் ஆகிவிடலாம். மற்ற இடங்கள் அப்படியல்லவே.

குடாநாட்டின் மிகப் பிரசித்திபெற்ற, கோயிலுக்கு, ஒருமுறை போயிருந்தான். கோயிலின் பக்கத்தில்தான் இராணுவத்தினர் அமைத்திருக்கும் பதினைந்து மைல் நீள 'பண்ட்' செல்கிறது. சூழ இராணுவ முகாம்கள். எல்லோரும் எவ்வளவு இயல்பாக சுவாமியைப் பிரார்த்திக்கிறார்கள். மேளக்கச்சேரியுடன் சுவாமி வலம்வருவதைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருக்கிறார்களே. யாகசாலைக்கருகே சுவாமி வந்தபோது திருமுறைகள் பாடப்பட்டன. 'யாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்' என்ற அடிகளுடன் தொடங்கும் தேவாரம் பாடப்பட்டது. முன்பெல்லாம் அந்தக் கோயிலின் தேர்முட்டிக்கருகே உள்ள மணல் பரவிய தரையில் அந்திசாயும் வேளைகளில் எத்தனை நாட்கள் நண்பர்களுடன் சேர்ந்து அமர்ந்து கொண்டு சல்லாபித்திருக்கிறான். மம்மல் பொழுதில் அந்த வளைவில் லாவகமாக போராளிகள் தமது வாகனங்களை ஓட்டிச் செல்லும் போது நெஞ்சம் பெருமிதத்தில் விம்முமே. நகரம் போராளிகளின் கைகளில் இருந்து நழுவுவதற்கு சில நாட்கள் முன்னர் அந்த ஆலயத்தில நடந்த உற்சவத்தின் போது நடைபெற்ற பிரச்சார வேலைகளின் ஒவ்வொரு அங்கமும் அவனுக்கு ஞாபகத்திற்கு வந்தன. ஆடிப் போனான்.

பீடிமாஸ்ரர் ரீ குடிக்க உடன்படவில்லை. அதிக நேரம் இருவர் உரையாடுவதோ கூடித் திரிவதோ வேண்டாத தலைவலிகளைத் தரும் என்றான். பீடிமாஸ்ரர் அங்கிருந்து அகன்றபின், அவன் சந்திக்குப் பக்கத்தில் இருந்த ரீக்

# பொங்கிச் சரியப் போகும் சிங்களப் பேரினவாதம்

**- மொறிஸ் தர்மபாலன் -**

அடிதடி, ஆர்ப்பாட்டம் எதுவுமின்றி அமைதியான முறையில் கிடைத்த சுதந்திரம் எனும் பொற்கிரீடத்தை, தமிழர்களை ஓரங்கட்டி தானே தன் தலையில் சூட்டிக் கொண்ட சிங்களப் பேரினவாத தேசத்தின் ஐம்பது ஆண்டுகாலம் நிறைவடைந்த பின் இன்றுள்ள நிலை என்ன?

*1948*களில் இலங்கையின் பாதீடு, பிரிட்டிஷ் அரசுக்கே கடன் கொடுக்கின்ற அளவுக்குப் பாதீட்டு மிகையைக் காட்டியது. இதனையே ஐம்பது வருடங்கள் பின் தள்ளி இன்றுள்ள நிலையில் சிறீலங்காவின் பாதீட்டு அறிக்கையை ஒன்பதாயிரத்து தொளாயிரம் கோடி ரூபாக்கள் பற்றாக்குறையாகக் காணப்படுகிறது. இந்நிலைக்கு சிறீலங்காவானது தள்ளப்படக் காரணம் என்ன?

சிறுபான்மையான தமிழ் இனத்தினை முற்றாக ஓரங்கட்டி சிறீலங்காவை ஓர் முழுமையான சிங்கள பௌத்த நாடாக மாற்றிவிடப் பாடுபட்டுக்கொண்டிருக்கும் மதவாதிகளும் அரசியல்வாதிகளும் சிங்கள புத்திஜீவிகள் கூட்டமும்தான்.

மாறி மாறி ஆட்சிக்கு வரும் சிங்கள அரசியல்வாதிகள் தம் ஆட்சியின் பயன் என எண்ணுவது கணிசமான அளவு தமிழர்களைக் கொன்று குவிப்பதோ அல்லது குறிப்பிட்டுக் கூறக்கூடிய தமிழர் வாழ் நிலங்களை கைப்பற்றுவதோதான். ஆட்சியில் உள்ளவர்கள் மட்டுமன்றி ஆட்சிக்கு வரப் போகின்றவர்களும் கூறிக்கொள்வது இதைத்தான். ஆக, மொத்த சிங்களப் பேரினவாதத் தலைமையானது தமிழர்களைக் கொன்று குவிப்பதும் அவர்களது வாழ் நிலங்களை ஆக்கிரமிப்பதையுமே குறியாகக் கொண்டுள்ளன. அண்மையில் தேசிய பௌத்த சங்கத்தின் முதலாவது பொதுச்சபைக் கூட்டத்தில் மதுளுவெல சோபித தேரரின் வாயினின்று இனவாதம் வழிந்தோடியது. அனைத்துக் களியாட்டங்களையும் தேவையற்ற செலவீனங்களையும் தூக்கி எறிந்துவிட்டு சிங்கள தேசமானது ஒவ்வொரு சதத்தையும் ஒவ்வொரு சொல்லையும் யுத்தத்துக்காகவே செலவிட வேண்டும் என ஆக்ரோசமாக உரைத்துள்ளார் சோபிதர்.

லலித் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவி சிறிமானி அத்துலத்முதலி அவர்கள் அரசு யுத்தத்தில் காட்டும் தீவிரம் போதவில்லை. எனவே, யுத்தசபை ஒன்றை அமைத்து யுத்தத்தை தீவிரப்படுத்துங்கள். இச்சபைக்கு ஜனாதிபதி தலைவியாகவும், பிரதித் தலைவராக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் அவர்களும் இருப்பது சாலச் சிறந்தது என்றும் யோசனையை உதிர்த்துள்ளார்.

இவை எல்லாம் ஒருபுறமிருக்க சிங்களத்தின் புத்திஜீவிகள் கூட்டமான OPA எனும் *32* அமைப்புக்களையுடைய *32000* படித்த முட்டாள்கள் என்ன கூறுகின்றார்கள், யுத்தத்தின் விளைவு அதன் பின்னணி என்னவென சீர்தூக்கிப் பார்ப்பதை விடுத்து அனைத்துக் கட்சிகளும் தமக்கிடையில் உள்ள முரண்பாடுகளை மறந்து ஒன்றுபட்டு எம் எதிரிகளை அழிக்க ஒன்றுபடுவோம் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆக, மதரீதியாக, அரசியல் ரீதியாக, கல்விமான்கள் ரீதியாக ஒட்டுமொத்தமாக நோக்குமிடத்து முழுச் சிங்கள தேசமுமே போர் வெறி கொண்டு சன்னதமாடுகின்றன என்பதனைத் தெளிவாகப் புரிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.

படையெடுப்பு, பாதை திறப்பு என அமளிதுமளியுடன் வரிந்து கட்டிக் கொண்டு வன்னி நோக்கி வரும் படையினரினதும் கோர முகங்களைத் தமிழர்கள் புரிந்து கொள்ள வேண்டும். புரிந்து கொள்வது மட்டுமன்றி தீர்க்கமான ஒரு இறுதி முடிவெடுக்க வேண்டிய தேவையையும் தமிழர்களாகிய அனைவருக்கும் அவசரமான அவசியமாகிறது.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கடைக்குச் சென்றான். இந்தக் கடை முன்பும் அதே இடத்தில் இருந்தது. நல்ல வடை கிடைக்கும். கடைக்காரன் மலையாளத்தவன். முன்பிருந்தே அவனுக்குத் தெரிந்தவன். அவனை இனங்கண்டு கொண்டான். கதைத்தான். அவனது தமிழில் மலையாளத்துக்குரிய மழலை தவழ்ந்தது.

மலையாளத்தவனின் கடையிலிருந்து ஐநூறு யார் தூரத்தில் அவன் முன்பு



வேலை செய்த பத்திரிகைக் காரியாலயம் இருந்தது. அது இப்போது எப்படி இருக்கிறது என பார்க்கத்தான் அவன் இன்று சந்திக்குப் புறப்பட்டிருந்தான். முன்பு மிகவும் களையோடியிருந்த இந்த இடம், இப்போது ஒளியிழந்து பாழ்பட்ட ஒரு பகுதி போலிருந்தது. சந்தியிலிருந்து ஒரு வீட்டின் கூரை ஓடுகள் முற்றாகக் கழற்றப்பட்டிருந்தன. வீட்டின் சுவர்கள் எந்தவிதப் பாதிப்புக்கும் உள்ளாக வில்லையே. அப்படியானால், அவனது வீட்டருகே நடந்த பல சம்பவங்கள் போல் யாரோ கயவர்கள் செய்த வேலை தான் இது. இங்கு தடியெடுத்தவன் எல்லோரும் தண்டக்காரன் ஆகி இருக்கிறார்கள். திறந்த சிறைச்சாலை போல் அமைந்துவிட்ட இந்தக் குடாநாடு, அன்னியர்களின் கைப்பிடிக்குள் வந்தபோது, பலர் அன்னியரிடம் சிக்காமல் வன்னிப் பகுதிக்குச் சென்றார்களே. அப்படிச் சென்றுவிட்டார்களோ இந்த வீட்டின் சொந்தக்காரர்களும்? அந்த வீட்டுக்காரர்களை அவனுக்குப் பழக்கமில்லை. ஆனால், முகப்பரிச்சயமுண்டு. இங்குதான் எண்ணற்ற மனித உரிமை மீறல்கள் நடந்திருக்கின்றனவே. அவற்றில் ஒன்று மாட்டிக்கொண்டுமிருக்கலாம். முற்றத்தில் நிற்கும் அழகான அந்தச் சின்னப் பெண். சுகமாக எங்காவது வன்னியில் இருக்க வேண்டும் எனக் கடவுளை வேண்டிக் கொண்டான்.

அவன் கூட அப்படி வன்னிக்குச் சென்றிருக்கலாம் தான். மொட்டை மாஸ்ரரின் குடும்பத்தவர்களுடன், அந்தச் சோதனைச் சாவடியில் நின்ற துயரம் நிறைந்த நாளை அவன் நினைவு கூர்ந்தான். தென்மராட்சிக்கு அன்னியர் வந்த அன்று எல்லோரும் குழப்பம் அடைந்துவிட்டனர். வன்னிப் பகுதிக்கு அப்போதுகூட படகுகள் சென்றனதான். கடற்கரையில் ஆகாய விமானங்களும், ஹெலிகொப்ரர்களும் வெறித்தனமாடிக் கொண்டிருந்தன. போராளிகளுடன் வன்னிக்குச் செல்வதா? இராணுவத்தினருடன் நகரப் பகுதிக்குச் செல்வதா? என எல்லோரது மனங்களும் போராடிக் கொண்டிருந்தன.

இராணுவத்தினர் எவ்வளவு அழகாகச் சிரிக்கிறார்கள். குளிர்பானங்கள் வேறு கொடுக்கிறார்களே, முன்பெல்லாம் காவல் சாவடிகளில் நிற்கும் போது இராணுவத்தினரது முகங்களில் தெரியும் அந்தக் கடுகடுப்பு எங்கே? புத்தர்களாகி விட்டார்களோ? கடந்த கால் நூற்றாண்டில் அவனது இனத்தவர்களை எத்தனை வகையில் துன்புறுத்தி இருக்கிறார்கள். எதிரி ஒருவரையும் கட்டாயமாக 'நகருக்குப்போ' என அதிகாரம், செய்யாமல் இருந்தான். ஆனால், கடற்கரையில் 'ஷெல்' அடியும், ஆகாய விமானங்களிலிருந்து குண்டுவீச்சும் தொடர்ச்சியாகச் செய்கிறான். காலையிலிருந்து அதுவும் அதிகரித்திருக்கிறது. நகருக்குப் போவோர் வரிசை கூடிக் கொண்டே இருந்தது. கடற்கரைப் பக்கமாகச் சிலரே சென்றுகொண்டிருந்தனர். அவன் முடிவெடுக்கும் தருணம் அது. இராணுவத்தினரின் தந்திரத்தில் அவன் ஏமாறமாட்டான். நன்றாக நடிக்கிறார்கள். அவன் மொட்டை மாஸ்ரரின் குடும்பத்தவருடன் சேர்ந்து வன்னிக்குப் போய்விட முயன்றான்.

அம்மா முரண்டுபிடிக்கத் தொடங்கியிருந்தாள். அவள் நியாயங்களைக் கூறத் தலைப்பட்டாள். மேலே ஆகாய விமானங்களின் அச்சுறுத்தல் இருக்கும் இத் தருணத்தில், கடற்பயணம் செய்யத்தான் தயாரில்லை என்றாள். அவன் அவளை விட்டுவிட்டுத் தனியாகப் போகமுடியாது. அவளுக்கும் தங்கைக்கும் உள்ள ஒரே துணை அவன்தான். பேச்சுக் கொடுத்து அவர்களது மனதை மாற்றி, கடற்கரைக்கு அவர்களை அழைத்துச் செல்ல அவன் முனைந்தான். அவள் அவன் கூறிய எதனையும் செவிமடுக்க ஆயத்தமாக இல்லை. காலையில் கடற்கரையில் படகுகள் மேல் விமானங்கள் தாக்கிப் பலர் இறந்துவிட்டார்கள் என்ற செய்தி அவளுக்குத் தெரிந்திருந்தது.

அப்போது யாரோ ஒரு பெண் தலையில் அடித்தபடி வந்து கொண்டிருந்தாள். பித்துப் பிடித்தவள் போலிருந்தது அவளைப் பார்க்க. அவள் கூக்குரலிட்டபடி பேசிய பேச்சு, சீரானதாக இருக்கவில்லை. ஆனால், விஷயத்தை ஊகிக்கக் கூடியதாக இருந்தது. கடற்கரையில் நின்றிருக்கிறார்கள். விமானங்கள் போட்ட குண்டு ஒன்று அப்பெண்ணின் பச்சிளங் குழந்தையைப் பலிவாங்கிவிட்டது. மணலைக் கிளறி குழந்தையைப் புதைத்து விட்டு வந்திருக்கிறாள். அந்தப் பெண்ணின் குடும்பத்தவர்கள் நகருக்குச் செல்லும் வரிசையில் போய் நின்றனர். இங்கு சிரித்தபடி சில ஆக்கிரமிப்பாளர்கள். அங்கு கடற்கரையில் கொலை வெறி நடத்தும் அதே ஆக்கிரமிப்பாளர்களின் கூட்டத்தைச் சேர்ந்த விமான ஓட்டிகள். அவனுக்குப் பத்திக்கொண்டுவந்தது.

"நாங்களும் போய் வீட்டுக்குப்போகும் வரிசையில் நிற்போம்" என்றாள் அம்மா. மொட்டை மாஸ்ரரையும் "வாருங்கோ பேசாமல் போய் வரிசையில் நிற்போம்" என அழைத்தாள். அவர் எதுவுமே பேசவில்லை. பாறாங்கல் போன்று இருந்தது அவரது முகம். கோபம்வந்துவிட்டது அவருக்கு. அவனது அம்மாவும் தங்கையும் நகருக்குச் செல்வோரின் வரிசையில் நின்றனர். மாஸ்ரர் கடற்கரைக்குப் போகும் பாதையில் நடக்கத் தொடங்கினர். இவர்களுடன் இவ்வளவு நேரமும் நின்றிருந்தது வீணான காரியம் என அவர் முனகியபடி சென்றது அவனுக்குக் கேட்டது. தன்னை மன்னித்து விடும்படி மாஸ்ரரைக் கண்களால் இறைஞ்சினான். அவன் அம்மாவின் பக்கத்தில் போய் நின்றான். மாஸ்ரர் அவர்களைத் திரும்பிப் பார்க்காமல் குடும்பத்தவர்களுடன் கடற்கரை நோக்கி நடக்



www.tamileelamarchive.com

கத் தொடங்கினார். "மாஸ்ரர் ஒரு விசரன். தானும் செத்து பிள்ளைகளையும் சாக்கொல்லப்போகிறார்" என்றாள் அம்மா. அவன் எதுவுமே கூறாமல் பிரமை பிடித்தவன் போல் நின்றான். இனிமேல் கண்ணிருந்தும் குருடனாகவும், மொழி தெரிந்தும் ஊமையாகவும் தான் வாழப்போகிறேன் என்பது நிதர்சனமாக அவனுக்குத் தெரிந்தது.

மாஸ்ரர் வன்னிக்குப் பாதுகாப்பாகப் போய்ச் சேர்ந்துவிட்டார் என்ற தகவல் ஒரு மாதத்தின் பின் அவனுக்குத் தெரிந்தது, சரியான முடிவுதான் எடுத்திருக்கிறார். இங்கு ஒவ்வொரு நாளும் பயத்துடனேயே செல்கிறது. நித்திய கண்டம் தான். இந்த வீதியில்தான் போராளிகள் இங்கு இருந்தபோது, எல்லா நிர்வாக அமைப்புக்களும் இருந்தன. அதனால் தானோ என்னவோ முழத்துக்கு முழம் சோதனைச் சாவடிகள். ஐநூறு யார் நடப்பதற்குள் நான்குமுறை அடையாள அட்டையைக் காட்டினான். அவன் வேலை செய்த அந்தப் பத்திரிகைக் காரியாலயம் தான் அந்தப் பகுதிக்குரிய 'மினிக்காம்ப்' போலும், அந்த வளவிலிருந்த தென்னை மரங்கள் எல்லாம் தறிக்கப்பட்டு, அவற்றால் காவலரண்கள் அமைக்கப்பட்டிருந்தன. கட்டிடத்தின் முன்னே இருக்கும் நோட்டிஸ் பலகை மட்டும் அப்படியே இருந்தது. முன்பெல்லாம் போராட்டம் சம்பந்தமான கருத்தோவிய நோட்டிஸ்கள் அதை அலங்கரித்திருக்கும். இப்போது அரசாங்கம் அறிவித்துள்ள பொய் வாக்குறுதிகளைக் கொண்ட அறிவித்தல் ஒன்று அதில் இருந்தது. இப்போது மணி பத்து. ஏழு மணிக்கு வீட்டில் இருந்து வெளியேறியிருந்தான், அம்மா தேடப் போகிறாள். பிரதிஷ்டை செய்தேன் என அம்மாவிடம் கூறலாம். போகும்போது வழியில் மறந்துவிடாமல் திருநீறும் சந்தனமும் எடுத்துப் பூசிக் கொண்டுசெல்ல வேண்டும்.

முன்பு அந்தப் பத்திரிகையாசிரியர் இருக்கும் அறையின் யன்னல் மூடியிருந்தது. முன்பெல்லாம் அந்த அறை முழுவதும் பத்திரிகைக் கட்டுக்களாக இருக்கும். இப்போது யாராவது இளைஞர்கள் நிலத்தில் கிடக்கிறார்களோ என்னவோ!

அவன் இங்கிருந்து கொண்டு இடர்படுவது மட்டுமல்ல, அருவருப்பான காட்சிகளைக்காணவும் செய்கிறான். அண்மையில் 'ராகிங்' என்ற பெயரில் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் நெறிமுறையற்ற செயல்கள். சீ! எவ்வளவு கேவலமாக இருக்கிறது. புத்தகங்கள் வாசிப்பதில் அவனுக்குத் தனி இன்பம். இப்போது அவற்றை வாசிக்க எடுத்தால் முடிவதில்லை. பழையநினைவுகள் வந்து வந்து வாசிக்க முடியாமல் செய்து விடுகின்றன. புத்தகங்களை விரும்பிப் படிப்பவர்களில் பலர் முன்புபோல் படித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். தொழில்கள் கூட ஆரம்பமாகி இருக்கின்றன. ஆனால், ஒழுங்காகத் தத்தமது கடமைகளைச் செய்யும் (எதிலுமே ஒட்டிக் கொள்ளாதவர்கள்) முகங்களில் கூட ஒளியில்லையே. யாரும் இங்கே அரசியல் கதைப்பதில்லை. போராளிகள் வசம் இருக்கும் வன்னிப் பெரு நிலப்பரப்பிலும், கிழக்கிலும் நடக்கும் உலகைத் திகைக்க வைக்கின்ற தாக்குதல்கள், ஏன் குடாநாட்டில் கூட எத்தனை ஆக்கிரமிப்பாளர்களின் தலைகள் உருள்கின்றன. ஆனால், யாரும் வாய்திறப்பதில்லை. வெளிநாட்டு ரேடியோக்களில் இவை விபரமாகச் சொல்லப்படுகின்றன. ஆனால், அவனுடன் இவை பற்றி பகிர்ந்துகொள்ள யாருமே முன்வருவதில்லை. தங்கள் சொந்த வீடுகளில் கதைக்கிறார்களோ என்னவோ தங்கை கூட நடந்தவைகளை மறந்து, வேலை தேடத் தொடங்கியிருக்கிறாள்.

முன்பு போராட்ட இலக்கியங்களில் எவ்வளவு ஆவலாக இருந்தான். பெரிய வாசிகசாலையில் போராட்டம் சம்பந்தமான புத்தகங்கள் இருக்கும் வரிசைகள் எல்லாம் அவனுக்கு அத்துப்படி. இப்போதும் அங்கு போகும் போது, அவற்றை எடுத்துப் பார்க்கிறான். ஆங்கிலத்தில் இருந்த நல்ல போராட்டக் கவிதை சிலவற்றை நகல் எடுத்து வைத்துள்ளான். நகல் எடுத்து மொட்டை மாஸ்ரருக்கு அனுப்பவேண்டும்.

எவ்வளவு காலம்தான் வெளி உலகத்திலிருந்து இந்த அன்னியரால் எம்மைப் பிரித்து வைத்துவிட முடியும். சிலரை நினைக்க அவனுக்கு அருவருப்பாக இருந்தது. அவன்கூட என்ன பெரிதாக வெட்டிக்கிழித்து விட்டான். அவன்கூட அவர்களைப்போல்தான் வாழ்கிறான். மற்றவர்கள் கூட அவனை தானுண்டு தன் பாடசாலையுண்டு என வாழ்கிறான் என நினைக்கலாம்தானே! அவன் மேல் அவனுக்கே கழிவிரக்கம் ஏற்பட்டது. ஓரிருமுறை நட்புடன் வந்தவர்களுக்கு அவன் அடைக்கலம் கொடுத்திருக்கிறான் என்பது மட்டும் என்னவோ உண்மைதான். அதனால் அவனுக்கு ஒரு வித பெருமை ஏற்படுகிறது. இது எவ்வளவு சிறியதனம். இவன் மறைமுகமாகச் செய்யும் உதவிகள் போல் எத்தனை பேர் போராளிகளுக்கு உதவுகிறார்களோ. இவனால் மனதுக்குள் கேவலமாக நினைக்கும் பலர் கூட இப்படி உதவலாம்தானே. மாலை ஆறுமணிக்கு முன் அறைக்குள் முடங்கி விடும் இந்த அடிமைக்கு, யாழ் குடாநாட்டில் நடப்பவை எல்லாம் தெரியுமா? ஆமை ஓட்டு வாழ்வு வாழ்கிறார்கள் என அவன் நினைக்கும் எத்தனை பேர் போராளிகளுக்கு உதவுகின்றார்களோ. இல்லாமல்



இத்தனை போராளிகள் இங்கு இருக்கிறார்கள். யாரையுமே இனிமேல் குறையாக நினைப்பதில்லை என அவன் முடிவு செய்தான்.

அந்தக் கட்டிடம் எத்தனை விழாக்களைக் கண்டது. மாவீரர் நாளில் அது எவ்வளவு ஒளிமயமானதாக இருக்கும். தியாகத் தீபம் ஏற்றும் அந்த நாளில் ஆலயமணி ஒலிக்கும். அந்த முன்னிரவில் எல்லோரும் அங்கு ஒளித்தீபங்களை ஏற்றுவார்கள். மக்கள் நடுநிசிவரை எந்த விதமான பயமுமின்றி வீதிகளில் உலா வித்திரிவார்களே. இப்போது அப்படியா இருக்கிறது. நடுநிசிக்கு மேல் சிறுநீர் கழிக்க வரும்போதெல்லாம் எழாமல் அதனை அடக்கிக்கொண்டு சூரியன்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

உதிக்கும் வரை படுத்திருக்கிறானே. நினைக்கக் கேவலமாக இருந்தது. பழைய நினைவுகளால் கண்களில் நீர் வந்தது. துடைத்துக்கொண்டான்.

கட்டிடத்தைக்கடந்து சென்றான். இந்தக் கட்டிடத்தைப் பார்த்துவிட்ட தால் எதனைச் சாதித்து விட்டான். ஒன்றுமில்லைத்தானே. உடனே திரும்பக் கூடாது. கட்டிடத்திற்குச் சற்று அப்பால் ஒரு வாசிகசாலை இருந்தது. நேற்றைய பத்திரிகைகள் இருந்தன. சிறிதுநேரம் பத்திரிகைகளில் மூழ்கினான். இனித் திரும்பிப் போகலாம். எதிரே இருந்த கடையில் தோசை சாப்பிட்டான். அவனைச் சந்திக்க மொட்டை மாஸ்ரர் வரும்போதெல்லாம், அந்தக் கடையில் தான் ரீ குடிப்பார். மாஸ்ரர் ரியூசன் கொடுப்பதில்லை. கதை எழுதுவார். சுமா ராக இருக்கும். அவருடன் பழகினால் எந்தவித ஆசைகளும் இல்லாதவர்போல தான் தோன்றும். ஆனால் அவருக்கு ஒரு அடங்காத ஆசை இருப்பது அவ னுக்குத் தெரியும். கதை ஒன்றை ஒரு பத்திரிகைக்குக் கொடுத்துவிட்டால் அந் தப் பத்திரிகை காரியாலயத்துக்கு அடிக் கடி போவார். அச்சில் தனது கதை வர வேண்டும் என ஆவலுடன் எதிர்பார்ப் பவர் மாஸ்ரர். வெளியாக அது தெரி யாது. வேறுசிலர் போல் இம்முறை எனது கதை வருமா எனக் கேட்கமாட் டார். பத்திரிகைக் காரியாலயத்திற்கு வந்து பல்வேறு விஷயங்கள் பற்றிக் கதைத்துக்கொண்டேயிருப்பார். நடுவில் கதை இம்முறை வருகிறதா இல்லையா என்பதைப் பத்திரிகை ஆசிரியரின் கூற்றிலிருந்து அறிந்து கொண்டுவிடு வார். எதிலும் ஆசையற்றவர் என்று அவ ரால் அவனை ஏமாற்ற முடியாது.

நேற்று அவன் வீட்டுக்கு வர நேர மாகிவிட்டது. அம்மா வாசலிலேயே நின் றாள். அவனை அவள் ஏசவில்லை. ஆனால் அவளது முகத்தில் "ஏன் அப்பா எனக்கு தொந்தரவு தருகின்றாய்" என்ற உணர்வு ஓட்டி இருந்தது. போராளிகள் இருந்த போது எங்கெல்லாமோ இலக் கிய சம்பந்தமாக அலைந்துவிட்டு வரு வான். போரின் தாக்கத்தால் குண்டும் குழியுமாகிப் போன குடாநாட்டின்

## பதவிக்காகப் பலி கொடுப்போர் பதவி விலக துணிவார்களா?

இலங்கை அரசியலில் எவருமே சொன்னதைச் செய்த தாக, கொடுத்த வாக்கை நிறைவேற்றியதாக வரலாறு இல்லை. 17 வருட ஐக்கிய தேசியக் கட்சி அரசியலில் யுத்தம் தொடர்பாகவும் சமாதானம் தொடர்பிலும் பல வாக்குறுதிகள் காலக்கெடுக்கள் ஒன்றுமே இல்லாததில் அரசியல் ஒன்று தான் என்னும் எண்ணத்தை மட்டும் விட்டுச் சென்றது மட்டும் என்பது உண்மை. ஏன், இன்று 4 வருட பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சி அரசியலிலும் இதே கதைதான். படித்தவற் றையே மீண்டும் மீண்டும் படிக்க வேண்டிய பரிதாபநிலை, வாக்குறுதிகள், காலக்கெடுக்கள் இவற்றின் பக்கங்கள் நீண்ட காலமாகப் புரட்டப்படுபவைதான்.

"யுத்தம் 92 ஏப்ரல் மாதத்துக்குள் முடிவுக்குக் கொண்டு வரப்படும்; பெப்ரவரி 4-ம் திகதிக்குள் ஜெயசிக்குறு நடவ டிக்கை முடிவுக்குக் கொண்டுவரப்படும்" இது ஜெனரல் ரத் வத்தவின் அண்மைய வாக்குறுதிகள். இதனைக் கண்டு நாம் ஏங்கத் தேவையில்லை. மாறாக அலசுவோம்.

சந்திரிகா ஜனாதிபதித் தேர்தலில், ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதற்கான வாக்குறுதி தந்தால், தான் ஜனாதி பதித் தேர்தலில் போட்டியிடாமல் ஒதுங்கி விடுவதாக ஜனதா விமுக்தி பெரமுன வேட்பாளர் நிகால்கலபதி கூறியிருந்தார். சந்திரிகாவும் 95 யூலை மாதத்திற்குள்தான் ஜனாதிபதி முறையை ஒழித்து விடுவதாக வாக்குறுதி அளித்திருந்தார். ஆனால், இவ்வாக்குறுதி இன்றுவரை நிறைவேற்றப்பட்டதா என்றால் இல்லை. 95 யூலை மாதத்தில் இதனை சிங்கள மக்களின் மனதிலிருந்து மறைக்க வேண்டிய தேவை சந்திரிகா அரசுக்குத் தேவைப்பட்டது. இதற்காகவேதான் "முன்னேறிப் பாய்தல்" நடவடிக்கையை இராணுவம் மேற்கொண்டது. இதில் இராணுவம் தோல்வியைச் சந்தித்தது.

தோல்விகளுக்கான தார்மீகப் பொறுப்பை அரசு ஏற்றுக் கொள்ளவில்லை என்பது ஒருபுறமிருக்க இராணுவத்தை இக் கட்டுக்குள் தள்ளிவிடுவது அரசின் நீண்டகால நடவடிக்கை.

இதன் பின்னர் விடுதலைப் புலிகளின் முல்லைத்தீவு இரா ணுவ முகாம் மீதான பாரிய தாக்குதல் இதனை முறியடிக்க இராணுவத்தை அளம்பிலில் திரிவிடயகர பெயரில் தரையிறக் கிய முயற்சியும் தோல்வியில் முடிந்தது. 1400 படையினருக்கு மேல் அழிவைச் சந்தித்தனர். இதற்கு ரத்வத்தவோ, சந்திரி காவோ பதவி விலகுவதாக இல்லை. மாறாக இந்நடவடிக் கையை மறைக்க அரசுக்கு இன்னொரு இராணுவ நடவ டிக்கை தேவைப்பட்டது. அதுதான் கிளிநொச்சி மீதான "சத் ஜெய" நடவடிக்கை.

இதைவிட பப்புவாநியூகினி நாட்டைச் சேர்ந்த றகர் பயிற்சி யாளர் ரத்வத்தவின் மகனால் சுட்டுக்கொல்லப்பட்டதும் இக் கறை படிந்த நடவடிக்கையை மறைக்க மன்னார் நோக்கிய 'எடிபல' இராணுவ நடவடிக்கையை ரத்வத்த பயன்படுத்தினார். இதில் மனுநீதி கண்ட சோழன் மாதிரி நடக்காவிடினும் குற் றத்தை ஒப்புக்கொள்ளவோ பொறுப்பேற்கவோ அதன் மூலம் பதவி விலகவோ இல்லை என்பதுதான் இங்கு நோக்கத்தக்கது.

இன்றைய நிலையில் ரத்வத்தவினதும் சந்திரிகாவினதும் வாய்வீச்சு பக்கங்களை நோக்குவது முக்கியமானது தான். 300 நாட்களைத் தாண்டிவிடப் போகும் ஜெயசிக்குறு நடவடிக்கை இலங்கை அரசியலின் 50வது சுதந்திரதின கொண்டாட்டம் புதிய ஆண்டின் வருகை, யாழ்ப்பாண உள்ளூராட்சித் தேர்தல் இப்படி ஏகப்பட்ட எதிரொலிகள். இதற்குள் ரத்வத்தவோ யுத்தம் வருகிற ஏப்ரலுக்கு முடிவுக்குக் கொண்டுவரப்படும்; ஜெயசிக் குறு நடவடிக்கையோ ஏப்ரலுக்குள் முடிவுக்குக் கொண்டு வரப்படும் என்கிறார். காலக் கெடுக்களையே காலாவதி செய்து கொண்டு செல்லும் யுத்தமும் ஜெயசிக்குறு நடவடிக் கையும் இன்றுள்ள அரசியல் இராணுவ அவதானிகளையே அலைக்கழித்துவிட்டது தான் அண்மையில் இராணுவ ஆய்வா ளரான இக்பால் அத்தாஸ் ஜெனரலின் கூற்றை பற்றிக் கூறு மிடத்து 'ஜெயசிக்குறு' நடவடிக்கையை எவ்வளவு வேகம் காட்டினாலும் காலக்கெடுவுக்குள் பூர்த்தி செய்வது நிகழக் கூடிய விடயமல்ல என்றார்.

இராணுவமும் நல்லதொரு நிலையில் இல்லையென்பது இவ ரின் கருத்து. இக்காலக்கெடுவுக்குள் ரத்வத்த முடிக்காது போனால் கூடியளவு கண்டனங்களை எதிர்கொள்வார். ஆனால், அதற்கு தார்மீகப் பொறுப்பேற்று பதவி விலகுவார் என்று சொல்வதற்கில்லை. இந்தியாவில் லால் பகதூர் சாஸ் திரி ரயில்வே அமைச்சராக இருந்த போது ஏற்பட்ட ரயில் விபத்தொன்றுக்குத் தார்மீகப் பொறுப்பேற்று பதவி விலகியது போல் ரத்வத்தவையும் ஏன் சந்திரிகா அரசையுமே எதிர்பார்ப் பது தவறு. அப்படிச் செய்வதாகில் எத்தனை முறை ரத்வத் தவோ சந்திரிகா அரசோ பதவி விலகவேண்டி வந்திருக்கும்.

— சிவராசா கமல்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தெருக்களில், இரவுவேளைகளில் அவன் வரும் போதெல்லாம் மொட்டை மாஸ்ரர் எழுதிய அந்தக் கவிதையின் ஞாபகம்தான் வரும்.

"அன்று அமாவாசை...
குண்டும் குழியுமாக
இருந்தது றோட்டு,
எனது மந்தகதிக்கு
இசைவாய்
'லைற்' பொருத்திய
சைக்கிளில்
வழிநெடுக வந்தான் ஒருவன்
அவனுக்கு என்
வாழ்த்துக்கள்."

அவனது சைக்கிளில் விளக்கு இருக்கிறது. டைனமோவை யாரோ சில்லறைத் திருடன் முறித்து எடுத்திருந்தான். பின்பு அவன் விளக்கு இல்லாமலேயே இரவு காலங்களில் திரிந்தான். இப்போது டைனமோக்கள் கடைகளில் தாராளமாகக் கிடைக்கின்றன. ஆனால் யாரும் வாங்கமாட்டார்கள். இரவில்தான் எவருமே வெளியே போவதில்லையே!

தோசை நன்றாக இருந்தது. இன்னும் இரண்டிற்கு ஓடர் கொடுத்தான். இருட்டு அனுபவங்களை நினைத்தான்; சிரிப்பை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வு ஒன்று அவனுக்கு நினைவு வந்தது. அவனும் பீடி மாஸ்ரரும் ஆங்கிலக் கராட்டிப்படம் ஒன்றிற்கு போய்விட்டு வந்தார்கள். வழியில் கண்ட மொட்டை மாஸ்ரருடன் பீடிமாஸ்ரர் சென்றுவிட்டார். அவன் தனியாக வீடு திரும்பிக் கொண்டிருந்தான். அன்று அமாவாசை – எதுவுமே ரோட்டில் தெரியவில்லை. ஏதோ தட்டுத் தடுமாறியபடி சைக்கிள் போய்க்கொண்டிருந்தது. 'சில்' என்று போத்தல் உடையும் சத்தம் கேட்டது. ரோட்டுக் கரையில் சைக்கிளுடன் நின்ற ஒருவனுடன் மோதி இருந்தான். சைக்கிள்காரன் கத்தத்தொடங்கிவிட்டான். ரோட்டில் பக்கங்களில் இருந்த வீட்டுக்காரர்கள் கூடிவிட்டனர். நிலத்திலிருந்து பழைய கள்ளின் மணம் எழுந்தது. அவன் ஊகித்துவிட்டான். சைக்கிள்காரன் போத்தல்களில் கள்ளை வைத்துக்கொண்டு யாருக்காகவோ காத்திருந்திருக்கிறான். வீதிக்கு வந்திருந்த அயலவர்கள் "மிகவும் ஓரமாக நின்ற ஒருவன் மேல் சைக்கிளை விட்டது பிழைதான்" என்றனர். யாரோ ஒருவனது 'ரோச்லைற்'றின் ஒளியில் இரண்டு போத்தல்களின் கழுத்துகள், சைக்கிளில் கொழுவி இருந்த பையில் இருந்தது தெரிந்தது. இரண்டு போத்தல்களுக்கும், கள்ளுக்குமான காசை அவன் கொடுத்தான். காசைச் சைக்கிள்காரன் வாங்கினான்தான். ஆனால் திருப்தியற்ற நிலையிலேயே இருந்தான். நேரம் ஒன்பது மணியாகியிருந்தது. அன்று, இனிமேல் அவனால் கள்ளு வாங்க முடியாது. முதலில் இரண்டு போத்தல்கள் தேடியாக வேண்டும். அப்படிப் போத்தல்கள் கிடைத்தாலும்கூட கள் எங்கும் எடுக்க முடியாது. கள்ளுக்கடைகளை எட்டு மணிக்கே மூடிவிடுவார்கள். அன்று அந்தக் குடிகாரன் நித்திரை இல்லாமல் தவிப்பான், காசு இல்லா நாட்களில் அவனது குடிகார அப்பா தவிக்கும் தவிப்பு அவனுக்கு ஞாபகம் வந்தது. அந்த நாட்களில் அவனுக்கும் அம்மாவுக்கும் செம்மையான உதை விழும்.



தோசைக்காரன் காசைக் கொடுத்துவிட்டு கடைக்கு வெளியே வந்தான். முன்பெல்லாம் நினைத்தவுடன் வரும் இந்தச் சந்திக்கு எவ்வளவு யோசனைகளின் பின் வந்தான். இப்படியே வாழ்வு தொடரப்போகிறதா? இங்கிருந்து தப்பி வன்னிக்குப் போய் விடமுடியாதா? அப்படிப் போவதானாலும் அம்மாவையும், தங்கையையும் அழைத்துக் கொண்டுதானே செல்ல வேண்டும். கப்பலில் கொழும்பு சென்று அங்கிருந்து வன்னிக்குப் போகலாம். ஆனால் அவனுக்கு அதற்கான அனுமதி கிடையாதே. அவன் குறிவைக்கப்பட்டவன். அனுமதி தரமாட்டார்கள். போராளிகளின் துணையுடன் வன்னிக்குப் போகலாம். ஆபத்துக்கள் நிறைந்த அப்பாதையால் அம்மாவையும் அழைத்துக் கொண்டு போக முடியாது. அவன் மட்டும் போகலாம். சீ, அதுவும் முடியாது. அவன் குறிவைக்கப்பட்டவன். அம்மாவையும் தங்கையையும் சும்மாவிடமாட்டார்கள். அம்மாகூட இங்கு வந்தபின்பு வன்னிக்குப் போயிருக்கலாம் என்கிறாள். வற்புறுத்தி ஆபத்துக்கள் நிறைந்த பாதையால் போகலாம். இல்லை முடியாது. சென்ற கிழமைதான் பெரிய ஆஸ்பத்திரியிலிருந்து வெளியே வந்திருக்கின்றாள். நீரழிவும் பிறசர் குணமும்; பிறசருக்கு இப்போது 'நிப்பிடிப்பின்' பாவிக்கிறாள். முன்னெல்லாம் 'இன்ரால்' பாவித்தாள்.

இப்படித்தான் சில காலங்களுக்கு இருக்கும். மினிமுகாங்கள் பல குறைந்து வருகின்றன. ஏன் இங்கு வந்தோம் என இராணுவத்தினர் நினைக்கும் காலம் வரும் போலவே இருக்கிறது. பொறுமையாக இருக்க வேண்டியதுதான். இந்த ஒல்லியான உடம்பை வைத்துக்கொண்டு, அவனால் எதுவுமே பிரமாதமாகச் செய்துவிட முடியாது. இல்லை அவனால் முடியக்கூடியவைகளும் உள்ளன. வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கும் மினிக் காம்பை எடுத்துவிட்டார்கள். இனி இடையிடையே போராளிகளுக்கு அடைக்கலம் கொடுக்கலாம். தினமும் இரண்டு சாப்பாட்டுப் பார்சலாவது கொடுக்க வேண்டும். திரும்பவும் தனக்குள் பொறுமை கடலிலும் பெரிது, எனக் கூறிக்கொண்டான்.

ஏழு வருடங்களுக்கு முன்கூட இப்படித்தானே இருந்தது. அந்த அன்னியப் பிசாசுகளும் அவர்களது அடிவருடிகளும் ஒரு நாள் சட்டென மறைந்தனரே. அது ஒரு விசித்திரம் போல் நடந்தது. பலர் "அந்த அன்னியப் பிசாசுகள் இங்கேதான் பலகாலம் இருக்கும். அது என்னவோ பெரிய வல்லரசு" என்றனர். நடந்தது வேறு விதமாக இருந்தது. அவனுக்கு மகிழ்ச்சியாக இருப்பது போன்ற உணர்வு ஏற்பட்டது. இங்கில்லாமல், எங்கெல்லாமோ வாழும் அவனது நண்பர்களின் முகங்கள் ஒருவர் பின் ஒருவராக அவனுக்கு நினைவுக்கு வந்தன. விரைவில் எல்லோரும் ஒன்றுகூட வேண்டும். இதை நிறைவேற்றித் தந்தால் ஐயனாருக்கு நேர்த்தி ஒன்று செய்வதாக, அவருடன் வேண்டிக்கொண்டிருந்தான். அவனுக்கு ஐயனாரில் மிகுந்த நம்பிக்கை. மொட்டை மாஸ்ரர் சிரித்துக் கொள்வார். அவன் வைத்துள்ள நேர்த்திக்கான பொங்கல் நிச்சயம் நடக்கும். ஐயனார் முன்புகூட அவன் வைத்த நேர்த்திகளை நிறைவேற்றித் தந்துள்ளார்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# மேஜர் ஜெனரல் செனவிரட்ண போன்று சிறிலால் வீரசூரிய ஓரம்கட்டப்படுவாரா!

இலங்கைத்தீவில் யுத்தம் தீவிரம் பெற்றதன் பின்னர் – இராணுவ ரீதியான நகர்வுகளும், அதன் பின்னணியில் இருக்கும் அரசியல் இலக்குகளும் ஒன்றோடொன்று வெகுவாகவே பின்னணிப் பிணைந்துவிட்டன.

எந்தவொரு இராணுவ நகர்வும் – அரசியல் சூழலையும் அந்த நேரத்துக்குரிய அரசியல் ஆதாயத்தையும் கொண்டே தீர்மானிக்கப்பட்டு வந்ததை சிறீலங்காவின் இராணுவ வரலாற்றுச் சம்பவங்கள் தெளிவாகவே காட்டி நிற்கின்றன.

இந்த வகையில் – அரசியல் ஆதாயங்களுக்காக இராணுவம் எவ்வாறெல்லாம் பயன்படுத்தப்பட முடியுமோ அவ்வாறெல்லாம் அது பயன்படுத்தப்பட்டே வந்துள்ளது.

அரசியல் தலைமைத்துவம் விரும்புவது எதுவோ – அதற்காக – அது கள நிலைகளுக்கும், நேர்த்தியான விளைவுகளுக்கும் மாறுபட்டதாக இருந்தாலும் கூட அதனைச் செய்து முடிக்குமாறே இராணுவம் பணிக்கப்பட்ட நிகழ்வுகளும் நடந்துள்ளன.

இவ்வாறான அழுத்தங்களுக்குள் – சிறீலங்கா இராணுவமும், அதன் உயர் கட்டளைப்பீடமும் சிக்கிக்கொள்வதென்பது பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக்காலத்தில் வெகுவாக அதிகரித்துவிட்டதொன்றாகவே இருந்துள்ளது.

அதிலும் – அமைச்சர் ரத்வத்த போன்றோருக்கு – அவர்களது அரசியல் தளத்தை ஸ்திரப்படுத்துவதற்காக அல்லது ஸ்திரமாக இருப்பதாக காட்டிக் கொள்வதற்காக இராணுவம் "பலிக்கடா" ஆக்கப்பட்ட சம்பவங்கள் இன்னும் தொடர்ந்தே வருகின்றன.

படைத்துறை நோக்கில் சாதகமற்றதாகவும், குறிப்பிடத்தக்க ஆதாயங்களை ஈட்டித்தராததுமான இராணுவ நகர்வுகளுக்கு அரசியல் தலைமைத்துவம் விரும்பியவாறே இராணுவ தலைமைப் பீடம் செயற்பட்டு வந்தாலும் காலகட்டத்தில் யதார்த்தத்தை தங்களது வாய்களாலேயே வெளிப்படுத்த வேண்டிய அவல நிலைகளும் இராணுவ தலைமைப்பீடத்திற்கு ஏற்பட்டது.

இந்த நோக்கில் – ஏ. எம். யூ. செனவிரட்ண, லக்கி அல்கம எனத் தொடரும் வரிசையில் – தவிர்க்க முடியாத காலத்தின் கட்டாயமாக சிறிலால் வீரசூரியவும் தற்போது இடம்பிடித்துள்ளார்.

சந்திரிகா அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர் – விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்கள் முறிவடையச் செய்யப்பட்ட காலகட்டத்தில் யாழ் குடாநாட்டை "விடுவிக்கும்" இராணுவ நடவடிக்கைகள் பற்றிய ஆலோசனை சிறீலங்கா இராணுவத் தலைமைப்பீடத்தில் முன்வைக்கப்பட்டது.

அன்றைய நிலையில் யாழ்குடாநாட்டை கைப்பற்றுவதன் மூலம் விடுதலைப் புலிகளின் பலத்தை கணிசமான அளவில் குறைத்து விடலாமெனவும், இத்தகைய "வெற்றி" யொன்றின் மூலம் – இனப்பிரச்சனைக்கான தீர்வை இராணுவ ரீதியில் அடைந்துவிடலாம் என்ற நிலைப்பாட்டை வலுப்படுத்திக்கொள்ளவும் சந்திரிகா அரசாங்கம் திட்டமிட்டது.

இத்திட்டமானது இராணுவத் தலைமைப்பீடத்திடம் கையளிக்கப்பட்ட போது – இராணுவத் தலைமைப்பீடத்தின் ஒரு சாராரிடமிருந்து எதிர்ப்பும், முரண்பட்ட கருத்துக்களும் தோற்றம் பெற்றது.

அப்போது இராணுவத் தலைமை அதிகாரியாக இருந்த மேஜர். ஜெனரல் ஏ. எம். யூ. செனவிரட்ணவும் வேறுசில மூத்த அதிகாரிகளும் யாழ். குடாநாட்டுக்கான படை நடவடிக்கையைக் கடுமையாக விமர்சித்தனர்.

இராணுவம் குடாநாட்டுக்குள் நுழைவதற்காக கடுமையான எதிர்ப்பைச் சந்திக்க வேண்டும் என எச்சரித்த அவர்கள் – யாழ். குடாநாட்டை தக்க வைத்துக் கொள்வதிலுள்ள பெரும் நெருக்கடிகளை வலுவாகச் சுட்டிக்காட்டினர். அத்துடன், 40,000க்கும் அதிகமான படையினரை தரைவழி விநியோகப் பாதையின்றி – யாழ். குடாநாட்டில் நிறுத்துவதிலுள்ள அபாயங்களும் அவர்களால் எடுத்துக் கூறப்பட்டது.

அதேவேளை, அன்று கிழக்கில் இராணுவம் தக்க வைத்திருந்த பெரும் நிலப்பரப்பும் அதனால் இராணுவத்துக்கிருந்த ஆதாயமான சூழலும் நிச்சயம் பாதிப்படையும் என்றும் அந்த இராணுவ அதிகாரிகள் உறுதியாகக் கூறினர்.

ஆனால், விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தில் ஐக்கிய தேசியக் கட்சி கைக்கொண்டிருந்த நிலைப்பாடுகளை தவறெனக் கூறிவந்த சந்திரிகா அரசாங்கத்துக்கு தனது பெயரை வலுப்படுத்திக் கொள்வதற்கு அவசியத் தேவையாக "இராணுவ வெற்றி" யொன்று ஏ. எம். யூ. செனவிரட்ணவினதும், ஏனைய அதிகாரிகளினதும் கருத்துக்களை புறந்தள்ளச் செய்தது.

ஆனால், காலப்போக்கில் ஏ. எம். யூ. செனவிரட்ண எச்சரித்தவாறே கள நிலவரம் தோற்றம் பெறுவதை சந்திரிகா அரசாங்கத்தால் தடுக்க முடியவில்லை.

இந்நிகழ்வுகள் நடைபெற்று இரண்டு வருடங்கள் நிறைவுறும் முன்னரே – செனவினரட்ண கூறியபடியே யாழ். குடாநாட்டில் தரித்து நின்ற படையினருக்கான விநியோகம் மிகச் சிக்கலுக்கு உள்ளானதால் – 'ஜயசிக்குறு' நடவடிக்கையை ஆரம்பிக்க வேண்டிய நிர்ப்பந்தம் சந்திரிகா அரசாங்கத்துக்கு ஏற்பட்டது. யாழ். குடாநாட்டிற்கான தரை வழி விநியோகப் பாதையைத் திறப்பதுடன் – விடுதலைப் புலிகளை அழித்து ஒடுக்கிவிடலாம் என்ற இலக்குடனும் 'ஜயசிக்குறு' படை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

அதேவேளை – தெற்கில் எழுந்துள்ள நெருக்கடிகள் பலவற்றை திசைதிருப்பவும், சரிந்து வீழ்ந்துவரும் வாக்கு வங்கியை ஓரளவேனும் தடுத்து நிறுத்தும் முயற்சியாகவும், சிலரின் தனிப்பட்ட அரசியல் ஆதாயத்திற்காகவும் கூட 'ஜயசிக்குறு' உதவியது.

இந்த வகையில் – ஆரம்பிக்கப்பட்டது முதல் இன்றுவரை எதிர்கொள்ளப்படும் கடுமையான பதில் தாக்குதல்களால் தேக்கம் கண்டிருக்கும் 'ஜயசிக்குறு' நடவடிக்கையானது இன்று இராணுவத்தின் தன்மானப்பிரச்சனை என்பதிலும் பார்க்க – ரத்வத்தவின் தனிப்பட்ட பிரச்சனையாகிவிட்ட நிலையையும் அண்மைக்கால நிகழ்வுகள் எடுத்துக்



www.tamileelamarchive.com

காட்டுகின்றன.

இதன் வெளிப்பாடாகவே — சிறீலங்காவின் சுதந்திரப் பொன்விழாத் தினத்திற்கு முன்னதாக யாழ். குடாநாட்டுக்கான தரைவழிப்பாதையை இணைத்து விடப் போவதாகவும், இதற்காக என்ன விலை கொடுக்கவும் இராணுவம் தயாராக இருப்பதாகவும் அமைச்சர் ரத்வத்த கொழும்பில் அறிவித்தார்.

ஆனால், இந்தக் காலக்கெடு அறிவிப்பானது — வழமை போல் இராணுவத் தலைமைப்பீடத்தின் எதிர்ப்பில்லாத ஆமோதிப்பை ஏற்றுக்கொள்ள இயலாமல் போனமையே மிக முக்கிய திருப்பமாக அமைந்தது.

அதிலும், ஏ. எம். யூ. செனவிரட்ண போன்றோருக்கு மாற்றீடாக அமைச்சர் ரத்வத்த உருவாக்கிய "தளுவத்த முகாம்" இலிருந்து வந்த மேஜர். ஜெனரல் சிறிலால் வீரசூரியவே இந்த இயலாமையை வெளிக்காட்டவேண்டிய நிலைக்கு ஆளானார்.

கொழும்பில் பெரிதாகப் பேசப்பட்ட 'ஜயசிக்குறு' மூன்றாம் கட்ட நகர்வில் — மன்னகுளத்தில் அடிவாங்கிய சிறிலால் வீரசூரியவின் தந்திரோபாயம் அவருக்கு தளநிலையின் தார்ப்பரியத்தை தெளிவாகவே உணர்த்தியிருந்தது. இதன் காரணமாகவே — ரத்வத்தவின் கௌரவப் பிரச்சனையாக உருப்பெற்ற காலக்கெடுவை நிறைவேற்ற முடியாது என சிறிலால் வீரசூரிய ரத்வத்தவிடம் நேரடியாகக் கூறவும் செய்தார்.

அதாவது, ரத்வத்தவின் அரசியல் ஆதாயத்திற்கான நகர்வு — இம்முறை அவரால் 'முன்னுக்குத் தள்ளி'க் கொண்டு வரப்பட்டவர்களாலேயே நிராகரிக்கப்படும் துர்ப்பாக்கியமும் ஏற்பட்டது.

இந்த நிலையானது இன்றுள்ள யுத்தத்தின் போக்கையும் அச்சொட்டாகவே காட்டி நிற்கிறது.

அதாவது, விடுதலைப் புலிகளின் தாக்குதல்களின் தீவிரமும் அதன் விளைவுகளும் சிறீலங்காவின் இராணுவத்தையும் அரசியல் தலைமைத்துவத்தையும் நேரடியாகப் பெரும் பாதிப்பிற்குள்ளாக்கி வருவதோடு மட்டுமல்லாது — அரசியல் ஆதாயத்திற்காக இராணுவ நகர்வுகள் மேற்கொள்ளப்படும் போது அது இராணுவத்தை எக்கட்டத்திற்குக் கொண்டுபோய்விடும் என்பதையும் இராணுவத் தலைமைப்பீடத்திற்கு தெளிவாகக் கற்றுக் கொடுத்திருக்கிறது.

## உதிர்காலம்

'முனி' தவம் தோற்கும்
அடங்காத் தீரத்தோடு
விண்ணை நோக்கி உயர்ந்த
கரங்கள்

ஓவியன் கை தூரிகையாய்
நிற்கும் மரங்களின்
மௌன மொழி
மௌன மொழி கொண்டு
வெளியோடு பேசுதல்
சாத்தியமாகிறது!

***

அற்ற குளத்து
அறுநீர்ப்பறவை போலவும்
அதன் கைகள்
காற்றில் துடித்தன
கண்டேன்.

அதன் மௌன மொழியின்
புரிதல் உணரா
மனிதன்
சாளரங்களையும் அடைத்தபோது

வெளியேற்றப்பட்டவனைப் போல.....
விம்முதலை உடைத்து
நிலவுக்கு —
கைகள் நீட்டின.

உதிர்த்து நிற்றல்
உனக்கு சாத்தியமானது!
இப்போது
நிலவுப்பழம்
அவற்றின் கைகளில்

***

நெஞ்சக் கட்டைகளாய்
சிதையில்
உடன் கிடந்து
ஊளில் சாய்கின்ற மரத்தின்
ஊழித் தீயை
தினமும் உளத்தே
மூட்டி, மூட்டி விடுகின்ற
முனிவ நீவீர்

ஆடுங்கள் ஆடுங்கள்
அதோ!
வெள்ளிப் பூக்கள்
உங்களை வாழ்த்திச் சொரிகின்றன.

நீங்கள் உங்கள்
தலைகளில் சூடிய
சின்ன, சின்ன
கங்கா நதிகள்
உடைப்புக் கொள்கின்றன.

வெள்ளிப் பனி பூசி
நின்றாடு, ஆடு.
சுடலைப் பொடி பூசிய
சிவனாரைப் போல.

பிரபஞ்ச கானச்
சூறாவளியோடு
காற்று வருகிறது!

முயலகனாய் முனைகின்ற
பூமியை மிதித்தாடு!

***

சிறிய சிறிய குச்சிகளால்
வேய்ந்த பறவைக்கூடு
அலகால் உடைத்து குருவி
பறந்த முட்டைக் கோது பிறை
வடிவாய் அதனுள் கிடக்கிறது!

மீளவும்
வளரிளம் குமரியாய்
மரங்கள் நிற்க
கூடுகள் கட்டுகின்ற முனைப்போடு
அலகில் குச்சிகளுடனும்
பாட்டுடனும் குருவிகள் வருகின்றன.

சாளரங்கள் திறக்கின்றன.
மரங்கள் சூரியனோடு பேசுகின்றன.

— சுபா



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# பதுங்குகுழி நீ உறங்குமிடம்



தலை நிமிரமுடியாமல் எதிரி ஏவிய எறிகணைகளால் காடு அதிர்ந்து குலுங்கிக்கொண்டிருந்தது. ஒன்று வெடித்த நொடிப்பொழுதுக்குள் அடுத்தது, அடுத்தது என இடைவிடாத படி சில ஒரே இடத்திலும் சில தூரப் போயும் வெடித்துச் சிதறின. பச்சை மரங்கள் வெம்மையுடன் அவிந்து கருகிய மணம் அப்பிரதேசமெங்கும் நிறைந்தது. பசுமையாகப் படர்ந்திருந்த புற்கள் கருகியும், கருகிய புற்களின் மேல் சுழலாய் எழுந்த புகைமண்டலத்தின் கரி படர்ந்தும் அவ்விடம் சுடுகாடு போலக் கிடந்தது. முறிந்த மரங்கள் ஒருபுறம், எறிகணைத் துண்டுகளாற் குத்திக் கிழிக்கப்பட்ட பச்சை மரங்கள் இன்னொருபுறமாக அவ்விடம் கொடூரக் காட்சி ஒன்றின் உச்ச நிலைக்குச் சாட்சியாய் விளங்கியது.

மண்மூட்டைகள் கொண்டு மூடப்பட்ட பதுங்கு குழிகளின் மேல், அருகில் வெடித்த எறிகணைகள் மண்வாரிக் கொட்டியிருந்தன. சில நாட்களுக்கு முன் அவ்விடத்தில் பெரியதொரு சண்டை நடந்ததற்கான அடையாளங்களாக வெற்றுரவைக் கோதுகளும் எறிகணைகள் வீழ்ந்து குழிதோண்டிய பள்ளங்களும் இன்னும் இரத்தக்கறை படிந்து காய்ந்து போன சுவடுகளும் அவ்விடத்தின் அசாதாரணமான பயங்கர நிலையினைக் காட்டியது. தாறுமாறாய் முறிந்து சடைத்தபடி கிடக்கும் பச்சை மரங்களைப் பார்க்கும் போது ஆரபிக்கு மிகுந்த கவலையாக இருந்தது. கொஞ்சம் கொஞ்சமாக இயற்கை வளங்கள், வயல்கள், பூத்துக் குலுங்கி காய், பிஞ்சாய் இருக்கின்ற தோட்டங்கள் என்பன வற்றையெல்லாம் எதிரி சின்னபின்னமாக்கிக் கொண்டிருக்கின்ற அவலத்தைக் காணும்போது ஆரபிக்கு மனதைப் பிசைந்தது.

வன்னி மண்ணின் ஆழ வேரோடிய காட்டு மரங்கள் பாதை நீளமும் குடைபிடிக்கும். அதற்குள்ளால் எப்பக்கமும் எதிரி ஊடுருவுவான் என்று கண்கொத்திப் பாம்பாய் காவலிருந்து, இரவின் நீண்ட பொழுதுகளில் அவர்கள் விழிகள் சிவந்துகொள்ளும். பொழுது மங்கும் போது ஓயாமல் கிணுகிணுக்கும் நுளம்புகளை விரட்டியும், அப்படியும் மாயவித்தை காட்டி ஊசியாகக்குத்தும் அவைகளிடம் இருந்து தப்பி சொற்ப நேரத்தில் நித்திரைக்காகப் போராடி, அரைகுறைத் தூக்கத்தில் விழித்து, தலைமாட்டில் வைத்திருந்த துப்பாக்கியைத் தடவிச் சரிபார்த்து.... அந்தக் கணங்களிலெல்லாம் அவர்களின் 'அவள்' அவர்களுடன் இருந்தாள்.

பதுங்குகுழிக்குள் மழைவெள்ளம் நிரம்பியிருந்தது. க்ளக் கிளக் என்றவாறு தவளைகளும் பேத்தைகளும் இன்னும் பெயர் தெரியாத பூச்சிகளும் மிதந்து சிக்குண்டு வந்து முழங்காலுக்கு மேலாக வெள்ளம் நிறைந்த போதும், அந்த நாட்களில் 'அவள்' அவர்களுடன்தான் இருந்தாள். எல்லோருக்கும் விருப்பமுடைய ஒருத்தியாக இருந்தாள்.

'கலவாய்குருவி' என்று அவர்கள் அவளுக்குப் பொருத்தமாகவே பெயரையும் வைத்திருந்தனர். எந்த நேரமும் ஓயாமல் எல்லோரையும் சிரிக்க வைத்துக் கொண்டிருப்பாள். அமைதியாக, எதுவித ஆரவாரங்களும் காட்டாது இருக்க வேண்டிய நேரங்களில் அவள் தனது சிரிப்பினையும், கதைக்க வேண்டி உதடுகள் வரை வருகின்ற வார்த்தைகளையும் அடக்குவதற்குப் படுகின்ற பாட்டை நினைக்க, அவர்களுக்கு அடங்காத சிரிப்பு வரும். கைகளால் வாயைப் பொத்தி சிரிப்பை அடக்கி, மூச்சு முட்டி நிற்கையில் சிரிப்பில் கண்களில் நீர் முட்டும்.

வியர்வை வழிய வழிய பதுங்குகுழி வெட்டி மண் மூட்டை அடுக்கி ஓயாத வேலையிலும் வருகின்ற களைப்பு இருந்த இடம் தெரியாமல் போய்விடும். காணுகின்ற, பேசுகின்ற நேரமெல்லாம் அவள் ஓயாமல் சிரித்தபடி மற்றவர்களையும் சிரிக்க வைத்தாள். அவளுக்கு எப்படித்தான் சிரிக்க வைக்கக்கூடிய கதைகள் குறையாமல் ஏராளமாக இருந்தனவோ?

அந்தக் கணங்களிலெல்லாம் ஓயாமல் ஒவ்வொரு நாட்களும் எறிகணைகள் வந்து வீழ்ந்தன. எதிரி முன்னேறுவதும் பின்வாங்குவதும் அவர்கள் முற்றுகையிட்டுத் தாக்குவதுமாக சண்டைகள் நடைபெற்றன. அவள் இருக்கும்போது எதுவுமே கடினமாகத் தெரிவதில்லை. எங்கேயோ எல்லாம் திரிந்து, எதிரிக்கு அண்மையாகவுள்ள இடங்களுக்கெல்லாம் சென்று மணம் பிடித்து, மாங்காய் பிடுங்கி வருவாள். இன்னொரு நாள் மரவள்ளிக் கிழங்கு கிண்டி வேர்களில் முற்றிய கிழங்குகள் தொங்க குலை போலக் கொண்டு வந்து போட்டு வெட்டி அவிப்பாள். எல்லோரும் அடித்துப் பறித்து உண்டு மகிழ்ந்த அந்த நிமிடங்களிலெல்லாம் எதிரி ஏவிய எறிகணைகள் இடைக்கிடை வந்து வீழ்ந்தன. மரவள்ளித் தோட்டங்களும் கத்தரி பாத்திகளும் கருகிப்போயின. யாழ்ப்பாணத்துக்கான தரைப்பாதை திறப்புக்கான யுத்தகளம் கிராமத்தின் ஒவ்வொரு வீடுகளிலுமே ஜெயசிக்குறு பற்றிய விமர்சனங்களை உண்டுபண்ணியிருந்தது.

அது இரண்டாம் கட்ட இராணுவ நடவடிக்கையின் ஆரம்ப நாள். அவர்களெல்லோரும் ஆயத்தமாகவே இருந்தார்கள். அமாவாசை நாட்களும் நிலவு நாட்களும் தேய்பிறை வளர்பிறை நாட்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

களும் மாறி மாறி வந்தன. அது ஒரு முன்நிலவு நாளாகத்தான் இருக்க வேண்டும். குடை பிடிக்கும் மரங்களின் கீழே இலைப் பொட்டுக்களாக நிலவுக் கதிர்கள் ஊடுருவின. காட்டில் எறித்த நிலவு அழகாக இருந்தது. ஆங்காங்கே நீர் தேங்கிய குட்டைகளிலும் நீர் நிரம்பிய பதுங்குகுழிகளிலும் நிலவின் விம்பம் சலனப்பட்டுத் தெரிந்தது.

அவர்களின் கலவாய்க்குருவி காவற்கடமை முடித்துவிட்டு வந்துவிட்டாள்.

"இனிப் பாட்டும் கூத்தும் தான்"

தோழி ஒருத்தி கூறினாள்.

காவற்கடமை நேரங்களில் எப்படித்தான் வாயை அடக்கி வைத்திருந்தாளோ? அது அவளுக்குத்தான் வெளிச்சம்.

நிலவு இரவின் மௌனத்தைக் கலைத்தது. அவள் பாடல் மெல்லக் கலகலப்பை ஊட்டியது. போராட்டப் பாடல்களுள் அவளுக்கு துள்ளல் இசையில் அமைந்த பாடல்கள்தான் பிடிக்கும். அவை அவளது வாயில் சுலபமாக நுழைந்து கையின் தாளத்துக்கமைய ஒலிக்கும். இடையிடையே ஒலிபெருக்கியில் ஒலிபரப்பாளர் ஒலிபரப்புவதுபோல் தானே ஒலிபரப்புச் செய்து, வாயினால் வாத்திய இசை போட்டு அவர்களைச் சிரிக்க வைத்த நாட்களும், அந்த நாட்களிலும் முன்நிலவின் குளிர்ந்த ஒளிக்கதிர்கள் பொட்டுப் பொட்டாய் தரையைத் தொட்டன.

அது நெருப்பள்ளித் தின்றகளமாக இருந்தது. அந்தப் பின்னிரவில் எதிரி விட்ட தேடொளி ஒளிப்பந்தாக உயரத் தோன்றி கீழேவந்து அந்த கரிய இரவையும் பகலாக்கியது. கருமை நிழலாக குவிந்திருந்த காடுகள் ஒளிபெற்று மீண்டும் பழைய நிலைக்கு வந்தன. காட்டில் வெளியே உலாவிய விலங்குகள் பற்றைக்குள் ஓடி ஒளிந்தன. அவற்றினது கண்கள் வெளிச்சம்பட்டு நெருப்புக் கோளங்களாக மினுமினுத்தன.

அதனைத் தொடர்ந்து அவ்விடம் எறிகணைகளால் அதிர்ந்தது மண்துகள்கள் அள்ளுண்டு சிதறின. எறிகணைகள் அடுக்கடுக்காய் வீழ்ந்து குழிகளைத் தோண்டின. அடுத்த நாள் அசாதாரண நிலமையாகத்தான் இருக்கப் போகிறதோ.

அவைகள் எச்சரிக்கை ஒலிகளாக் கப்பட்டன.

"நாளைக்கு அவன் முன்னேறக்கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கு. எல்லோரும் கவனமாய்த் தயாராய் இருங்கோ".

கட்டளைகள் வந்தன.

நிலம் விடிகையிலேயே வேவு விமானம் சுற்றத் தொடங்கியது.

"முன்னுக்கு முழுவியளம் மாதிரி உது வந்திட்டுது. எங்கட பிளான் எல்லாம் பிழைச்சுப்போட்டுது" கலவாய்க் குருவி புறுபுறுத்தாள். சில நாட்களுக்குப் பின்னர் நிலமை நன்றாக இருந்தமையால் நேற்றுப் பின்னேரம் பின்னுக்குச் சென்று அவளும் இன்னும் சிலரும் குளித்துவிட்டு வந்திருந்தனர். அவள் அணிந்திருந்த புதிய சீருடை அவளுக்கு அழகாகவே இருந்தது.

உடுப்பு தனக்கு நன்றாக அளவாக இருப்பதாக எல்லாரிடமும் சொல்லிக் கொண்டாள். உடுப்பைக் கசங்காமல் காப்பதற்கு பெரும் பிரயத்தனப்பட்டாள். உடுப்பு அழுக்குப் படியாதவாறு பதுங்கு குழிக்குள் அவதானமாகவே சென்றாள். அவர்களுக்கு அவளைப் பார்க்கச் சிரிப்பாக இருந்தது.

அவளது கலகலப்பும் பகிடிகளும் வழமைபோலவே இருந்தன. ஆனால், வெளியில் சத்தம் போட்டு ஓடித் திரிகின்ற நிலமையில் அப்போதைய சூழ்நிலை இருக்கவில்லை.

வேவு விமானத்தைத் தொடர்ந்து, எந்தப் பக்கமாக வந்து சேர்ந்தது என்று யோசிக்க முன்னரே கிபீர் குண்டுகளைப் போடத் தொடங்கியது. எல்லோரும் நிலையெடுத்தவாறு இருந்தனர். பலத்த அதிர்வுடன் புகைமண்டலம் மேலெழுந்

# தீர்வு எங்கள் கையிலேயே

*1956*–ல் சிங்களம் மட்டும் சட்டத்தினை 24 மணித்தியாலங்களுக்குள் கொண்டு வருவேன் என வீரப் பிரகடனம் செய்து சிங்கள பௌத்த இன மத வெறியினை உயர்கொதி நிலைக்கு கொண்டு வந்தவர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா.

தமிழை, தமிழர்களை, அவர்தம் வாழ்வியல் செயற்பாடுகளை, அவர்களின் எச்சங்களை துவம்சம் செய்தலில் கணவனின் வழி நடந்தவர் சிறீமாவோ அம்மையார்.

முன்னையவர், பௌத்த மத வெறியாளர்களாகவே நம்மை இனங்காட்டி வரும் பௌத்த பிக்குகளில் ஒருவரால் சுட்டுக்கொல்லப்பட பின்னையவர் சக்கரநாற்காலியில் அமர்ந்தபடி தலை சரிந்த கோலத்துடன் சிங்களத்தின் நவீன ரட்சகியான மகள் சந்திரிகா பண்டாரநாயக்காவின் சாதனைகளைப் பார்த்துப் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறார்.

பெருமைப்பட என்ன காரியம் நடக்கிறதென்றால் நாளில் 24 மணி நேரமும் தமிழர்களை அழித்தொழிப்பதும் அவர்களின் வாழ்வியக்கத்தினை நிறுத்தி அவர்களை ஓட ஓட விரட்டி உண்ணாமல் – உறங்காமல் செய்து கடைசியில் அவர்களின் தலையில் குண்டைப் போடுவதுதான்.

இது சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பண்டாரநாயக்கா வம்சத்துக்கு எவ்விதம் பொருந்துகின்றதோ அவ்விதம் யு. என். பி. யின் தலைவர்களுக்கும் பொருந்தும்.

இந்தப் பின்னணியிலேயே சந்திரிகா அரசு கொண்டுவந்து படம் காட்டும் தீர்வுத் திட்டமும் அதற்கு எதிராக கிளர்ந்துள்ள சிங்கள ஆணைக்குழுவும், பௌத்த பிக்குகளும். இது ஒரு நாடகமே. எல்லோரும் தத்தமது பாத்திரங்களில் கச்சிதமாக நடிக்கிறார்கள். பௌத்த சிங்கள நாட்டுக்கு ஜெயவோ என்று நாடகம் முடியும். அதற்கு குடை, கொடி, ஆலவட்டம் பிடித்துக் கொண்டிருக்கப் போகிறவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியும் தமிழ்க்குழுக்களும்தான்.

இந்த நாடகத்தின் ஒரு காட்சிதான் வடக்கோடு கிழக்கை இணைப்பது தொடர்பாக மூன்று வாக்கெடுப்புகள் நடத்தப்பட உள்ளதான அறிவிப்பு; சிங்கள அரசு எத்தனை வாக்கெடுப்புகளையும் நடத்த முனையலாம் பிரகடனங்களையும் வெளியிடலாம்.

ஆனால், இறுதி முடிவு என்பது அவர்களின் கைகளில் இல்லை. அது எப்போதோ அவர்கள் கைகளை விட்டு நழுவிவிட்டது.

தமிழர் தம் விடுதலைப் போராட்டமே இதற்கான இறுதி முடிவுகளை எடுக்கும் சர்வ வல்லமை படைத்த அந்த சக்தி. இறுதி முடிவு எடுக்கும் போது சிங்கள பௌத்த இன மத வாதிகள் சரியான பாடத்தினைப் படித்துக் கொள்வார்கள் என்பது மட்டுமே எம்முன் உள்ள உண்மை. அதுவரை காட்சிகள் மாறிக் கொண்டுதான் இருக்கும்.



www.tamileelamarchive.com

தது, எந்தஇடம், எந்தத் திசை எனத் தெரியாதவாறு இடத்தை மறைத்தது. எதிரி முன்னேறப் போகிறான் என்ற அபாய அறிவிப்பை உணர்த்தியது.

எதிரியின் பீரங்கிகள் இரையத் தொடங்கின. அவை பேரிரைச்சலாக ஊழிக்காற்றின் ஊளையாக நெருங்கின. எல்லோரும் தயார் நிலையில் நின்றனர். ஆயுதங்கள் பேசத் தொடங்கின. அவ் விடம் ஓர்மமும் வேகமுமே முன்னின் றன. தொலைத் தொடர்புக் கருவிகள் இரையத் தொடங்கின. கட்டளைகள் கணத்துக்குக் கணம் வந்து கொண்டிருந் தன.

"எங்கட குருவி எங்கே? அட அங்க தொண்டை கிழியக் கத்திக் கொண்டி ருக்குது"

அவளது கனரக ஆயுதம் முழங்கிக் கொண்டிருந்தது. எதிரியின் கனரக ஆயு தங்கள் நெருப்பு மழை பொழிந்தன. ஏட்டிக்குப் போட்டியாய் எறிகணைகள் வீழ்ந்து வெடித்தன. ஒன்றுக்குப் பத்தாக, பத்துக்கு நூறாக பல்கிப்பெருகின.

ஒருபுறம் கிபீர் விமானங்கள் இலக் கின்றி எழுந்தமானத்துக்குக் குண்டு களைத் தள்ளிச் சென்றன. காடுகளின் நீண்ட இடைவெளிக்கு இருவராக, ஒரு வராக நிலையெடுத்து நடந்த சண்டை உக்கிரமானதாக, தலை நிமிர்த்த முடியா ததாக இருந்தது.

மோட்டார் எறிகணை ஒன்று அவ ளது காலைப் பதம் பார்த்துவிட்டது. ஆ! அவர்களின் கலவாய்க் குருவியின் ஒரு கால் சிதைந்து தொங்கிக் கொண்டி ருந்தது. இரத்தம் ஆறாக ஓடியது. அவ ளது பக்கத்தில் நின்றவள் தொடர்ந்து சண்டை பிடித்துக் கொண்டேயிருந்தாள்.

சற்றுத் தலையைத் தூக்கி நிமிர்ந்து பார்த்த போது, சடார் என்று வந்து வீழ்ந்த எறிகணை ஒன்றினால் தோழி வீழ்ந்தாள். எரிகுண்டு பட்டதோ....? ஒரு கைப்பிரதேசம் கருகி அப்படியே அவ் விடத்திலேயே கிடந்தாள்.

எந்த நிலையிலும் அவ்விடத்துக் காட்டுப்பாதை வழியாக இராணுவம் வரலாம். ஒரு பக்கம் அவளுக்குக் கால் வலித்தது. அது தொங்கிக் கொண்டேயி ருந்தது. மெல்ல மெல்ல ஊர்ந்தவாறே அவளது தோழி வீழ்ந்து கிடக்கும் இடத் துக்கு வந்தாள். தொங்கிக்கொண்டிருந்த கால் மிகுந்த வேதனையைக் கொடுத்தது.

தனது கோல்சருக்குள் அவள் எப் போதுமே கத்தி வைத்திருப்பாள். மாங் காய் மற்றும் மரக்கறிகள், இளநீர் வெட்டுவதற்குப் பயன்படுத்தும் அவளது கத்தி அது. இப்போது ஒருகணம் நிதா னித்து மறுகணம் தொங்கிக்கொண்டு இருந்த காலைத் துண்டாக வெட்டி னாள். ஒழுகிய இரத்தத்தைக் கட்டுப் படுத்த, சாரத்தைக் கிழித்துக் கட்டுப் போட்டாள்.

"எப்படி? என்ரகால் வெள்ளையாய் இருக்குது" என்று தோழிக்குக் காட்ட, தோழி "கறுப்புக் காலில் குதி மட்டும் ஜொலிக்குது" என்று கேலிபண்ண, அவ ளது காலிலே மண் பூசத் தானும் ஓடிக் கலைத்தது ஒருகணம் குருவியின் மனக் கண்முன் வந்து மறைந்தது.

மறுபடி ஊர்ந்தபடி கிட்டவந்து தோழியின் உடலைத் தொட்டுப் பார்த்து விட்டு, ஒரு கையால் அவளை இழுத்த படி மறுகையில் துப்பாக்கியுடனும் ஊரத் தொடங்கினாள். தோழியின் உடல் மிகுந்த கனமாய் இருந்தது அவ ளுக்கு. நிழல் பிடிக்கும் காடுகளூடே முட்கள் சிராய்த்தன. இன்னும் நிறையத் தூரம் போகவேண்டும். கால்கள் வலித் தன. பசியால் எழுந்த களைப்பு இன் னொருபுறமாக வாட்டியது. அடியடியாக ஊர்ந்துகொண்டேயிருந்தாள்.

ஊர்ந்து ஊர்ந்து போய் அவர்களின் எல்லையில் தோழியின் உடலைச் சேர்த்த பின், குருவியின் முகத்தில் தோன்றிய சிரிப்பும் வெற்றிப்பெருமிதமும் மூன்று நாட்கள் வரை அப்படியே இருந்தன. அவளது இறுதிக் கணப்பொழுதுகளி லும் அதுவே நிரந்தரமாக.... அழியாத சிரிப்பாக....

இப்போது அந்த இடம் நெருப் பெரிந்த நிலமாக, நினைவகலாத இட மாக இருந்தது. இந்த வெற்று ரவைக் கோதுகள் குருவியினது துப்பாக்கி, எதி ரிக்கு எதிராக நின்றபோது துப்பியவை யாக இருக்க வேண்டும் என்று ஆரபி நினைத்தாள். அப்பகுதியின் பதுங்குகுழி மழை வெள்ளத்தில் நிறைந்திருந்தது. சேறும் அதற்குள் நின்று கத்தும் தவளை களும் அந்த இடத்துக்கே நிரந்தரமா னவை.

ஆரபியின் கைகள் அந்தப் பதுங்கு குழி மண்ணை ஆசையோடு துழாவின. சில கடதாசித் துண்டுகள் பிய்ந்து வந் தன. என்ன இது? பிசு பிசுத்தபடி ஒரு பாண் துண்டு. இரண்டு மூன்றாய் பிய்ந்து நனைந்தவாறிருந்தது. அது அவர் களுக்கு இறுதியாக வந்த உணவாகத் தான் இருக்கவேண்டும். கடைசி நாள் கறிப்பாண் வந்ததாக ஆரபிக்கு ஞாபகம். அதேதான். குருவி அரை குறையில் சாப் பிட்ட நிலையில் சண்டை பிடித்திருப் பாள். அல்லது எல்லாம் முடிந்து ஓய்ந்த பின்னர் வந்து சாப்பிடலாம் என்று வைத்திருந்தாளோ?

இப்போது மழைத்துளிகள் பெரிதாக விழத்தொடங்கின. மழைநீர் கரைந்து, மேலும் மேலும் சிவப்பாகி, பதுங்குகுழி நீர்மட்டம் உயர்ந்தது. தவளைகளும் தேரைகளும் க்ளக் க்ளக் என்றபடி துள் ளித் திரிந்து விழுந்தன. அது அவர்களின் கலவாய்க் குருவியின் சிரிப்பொலிபோல ஆரபிக்குத் தோன்றியது. காட்டு மரங் களின் இலைகள், மெல்ல மெல்ல விழும் மழை நீர் பட்டுச் சிலிர்த்தன.

★

## எங்களில் நாமே தங்கியிருந்தோம்

**— எரித்திரிய ஜனாதிபதி அபெவேர்கி**

"நாங்கள் தன்னிறைவு பற்றி ஒரு பாரம்பரியத்தை நிறுவியுள்ளோம். இது தொடர்பாக ஏராளமான முரண்பாடுகள் இருந்து வருகின்றன. நீங்கள் ஒரு ஏழை நாடு, உங்களிடம் எந்தவித இயற்கைவளங்களும் கிடையாது என சிலர் மலினமாக சொல்லுகின்றார்கள். அங்கு எதுவித விவசாயங்களும் கிடையாது. எந்தவிதமான கனிம வளங்களும் கிடையாது. உட்கட்டுமானங்கள் கிடையாது. இயற்கை வளங்கள் கிடையாது. ஆனால், எமது கண்டத்தின் பெரிய இராணுவமான மென்கிஸ்ரோ இராணுவத்தை எதிர்கொள்ள முடிந்தது எவ்வாறு?

நாங்கள் எங்களிடமுள்ள அனைத்து வளங்களையும் ஒன்றுதிரட்டி பொருளாதார ரீதியிலும் இராணுவ ரீதியிலும் எம்மில் நாமே தங்கியிருந்ததன் மூலமே நாம் இச் சவாலை எதிர்கொள்ள முடிந்தது.

நாங்கள் கடுமையினூடாக இவற்றைப் படித்தோம். போர்க் காலக்கட்டத்தில் எவரும் எம்மை ஆதரிக்கவில்லை. சக்கரவர்த்தி ஹெயில் செலசி எத்தியோப்பியாவை ஆண்ட போது அமெரிக்கா எத்தியோப்பியாவை ஆதரித்தது. பின்னர் மென்கிஸ்து செலசா வைத் தூக்கியெறிந்து விட்டுச் சோவியத்தோடு சேர்ந்துகொண்டார். அந்தக் காலகட் டத்தில் அமெரிக்காவோ ரஷ்யாவோ எங்களை ஆதரிக்கவில்லை. அதனால் எமது இலட் சியத்தை அடைய எமது சொந்த வளங்களை நம்பியே பாதையை நாம் அமைக்க வேண்டி ஏற்பட்டது. தற்போது அந்த அனுபவத்தின் இலாபங்கள் நீடித்துவருகின்றன.

*('லாஸ் ஏஞ்சல்ஸ் ரைம்ஸ்' – 08.03.98)*



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# நாட்டுக்குப் பொன்விழா வெற்றி உறுதிக்கு...?

அவர் கொஞ்சங்கூட எதிர்பார்க்கவில்லை அங்கே அப்படி ஒரு மகாநாடு நடக்குமென்று. இப்படி நடந்தது என்று சொன்னால் கூட மற்றவர்களே ஆச்சரியப்படுவார்களே தவிர யாருமே நம்பத் தயாராக இருக்க மாட்டார்கள். ஆனால் சம்பவத்தை நேரடியாகப் பார்த்த அவருக்குத் தன் கண்பார்வையில் நூறு வீத நம்பிக்கை இருந்தது. பார்வையை இன்னும் கூர்மையாக்கிக் கொண்டு தன் உடலைப் பெரிய மரத்தின் பின் நன்கு மறைத்துக் கொண்டார்.

வன்னிக்காட்டின் ஒரு வெளிப்பகுதியிலே ஏராளமான யானைகள், புலிகள், மான்கள், இன்னும் கணக்கிடவே முடியாதளவு உடும்புகள், கீரிகள், பாம்புகள், தவளைகள், அறணைகள், ஓணான்கள், தேள்கள், பூரான்கள் என்று குழந்தைகளுக்கான சினக்கதைகளில் முக்கிய பாத்திரங்களாக உலாவுகின்ற அனைத்து ஊர்வன, பறப்பன, விலங்குகள், எல்லாம் ஒன்று கூடியிருந்தன. முன்னரே பயிற்றுவிக்கப்பட்ட ஒழுங்கமைப்பில் இயங்குவனபோல அமைதிகாத்தன. ஒவ்வொன்றாக கருத்துக்களைத் தெரிவித்தன. இறுதி முடிவை எடுத்தன. சிறீலங்காப் பாராளுமன்றத்தில் நடப்பது போன்று இடக்கு மடக்கான கேள்விகளோ, நையாண்டிகளோ, விட்டேனாபார் என்ற தொனியில் வாய்ச் சண்டைகளோ இடம்பெறவில்லை.

அவை பேசிக்கொண்ட விடயம் இது தான்.

ஜெயசிக்குறு நடவடிக்கைப் படையினர் A9 பிரதான பாதையின் இரு பக்கங்களிலுமுள்ள ஏராளமான காட்டு மரங்களை வெட்டிச் சரித்து நாசம் பண்ணியுள்ளதால் தமது வாழ்விடங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதுடன் இயல்பான காட்டுச் சூழல் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் ஜெயசிக்குறு படையினருக்கு ஏற்பட்டுள்ள தொற்று நோய்கள் அவர்கள் காடுகளில் ஊடுருவியுள்ளதால் தமக்குப் பரவும் அபாயம் நேர்ந்துள்ளது என்றும் தமக்கு விருப்பமே இல்லாத வேற்று விருந்தாளிகள் தம் பகுதியில் நுழைவது தம்மால் ஏற்றுக் கொள்ளமுடியாத ஒன்று என்றும் இவையெல்லாம் ஒட்டுமொத்தமாக தமக்கும் தம் குழந்தைகளுக்கும் பெரும் பாதிப்பை உண்டுபண்ணுவதால் இந் நடவடிக்கை பற்றிய தமது எதிர்ப்பை கோபி அனானுக்கு தெரிவிப்பது என்றும் முடிவெடுத்தன.

இது என்ன புதுத்தலையிடி? இவை கோபி அனானுக்கு தெரிவிப்பது போதாதென்று, உள்ளூர் பத்திரிகைகளைக் கூப்பிட்டு எதையாவது சொல்லித் தொலைத்துவிட்டால் அதை எவ்வாறு சமாளிப்பது என்று யோசித்துக்கொண்டிருந்தபோது திடுக்கிட்டு விழித்தார் பிரிகேடியர் சரத் முனசிங்க. நேரம் காலை 7.30. தேனீரைக் குடித்துவிட்டு நாற்காலியில் சற்று சாய்ந்து அமர்ந்ததில் அப்படியே அயர்ந்துபோய் பகல் கனவு கண்ட விடயம் அப்போதுதான் அவருக்கு உறைத்தது. விடியற்காலைக் கனவாயிற்றே. பலித்துத் தொலைத்து விடுமோ? என்ன தொல்லை இது?

அன்று பத்திரிகையாளருடனான சந்திப்பு இருக்கிறது என்பது நினைவுக்கு வர, அதற்கான தயார்ப்படுத்தலில் இறங்கினார்.



அன்றொருநாள் இப்படித்தான் ஒரு பத்திரிகையாளர் சந்திப்பின் போது எல்லோரும் அவரை முட்டாளாக்க முயற்சி செய்தார்கள். ஜெயசிக்குறுவின் களநிலவரம் பற்றிக் கேட்ட பத்திரிகையாளருக்குப் பதிலளிக்கையில்,

“ஜெயசிக்குறு சண்டை நடைபெறும் பகுதியில் ஆறாயிரம் புலிகள் தான் உள்ளனர். அவர்களில் இரண்டாயிரம் புலிகள் இறந்துவிட்டனர். மூவாயிரத்து ஐநூறு புலிகள் காயப்பட்டுள்ளனர்” என்றார் அவர்.

“அப்படியானால் மீதியாகவுள்ள ஐநூறு புலிகளுடன் தான் இவ்வளவு



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

காலமாக இராணுவம் சண்டையிடுகிறதா"? என்றனர் பத்திரிகையாளர்கள்.

"இருக்கலாம் மிகுதியாகவுள்ளவர்களையும் அழித்துவிடுவோம்" என்று உறுதிபடக் கூறிய சரத்தைப் பார்த்து எல்லோரும் கொல்லென்று சிரித்ததையும், தவிர்க்க இயலாமல் தானும் அவர்களுடன் சேர்ந்து சிரித்ததையும் நினைக்க, இப்போதும் அவருக்கு எரிச்சலாக இருந்தது.

"தலை வீங்கி அரச பேச்சாளர்களின் பகட்டுப் பேச்சுக்களைக் கேள்விப்பட்டால், புதைகுழியினுள் இருக்கும் ஹிட்லரின் பரப்புரைத் தலைவர் (கோயாபலஸ்) கூட குழப்பத்துக்குள்ளாவார்" என்று சிறீலங்கா விமானப்படையின் மூத்த அதிகாரி ஒருவரால் கேலிசெய்யப்பட்ட பிரிகேடியர் சரத் முனசிங்க வழமை போலவே அன்றைய பத்திரிகையாளர் சந்திப்பையும் கேலிக்கூத்தாகவே நடாத்திமுடித்தார். ஆனால், ஜெயசிக்குறு நிலவரமோ அவரது எதிர்வு கூறல்களுக்கு நேர்மாறாக அமைந்துவிடுகிறது.

புலிகளை நரிகள் என்று கூறிய (புலிகளின் போர்த் தந்திரங்களை வியந்ததால் அல்லது ஆற்றாமையால் அப்படி அவர் கூறியிருக்கலாம்.) பாதுகாப்பு இணையமைச்சர் அனுருத்த ரத்வத்தவுக்கு 'புலிகள் புலிகளேதான்' என்ற முடிவை எடுக்க அழுத்தும் அளவுக்கு போர்க்கள நிலை மாற்றமடைந்தது.

*1997* மார்கழி *31* உடன் இருநூற்று நாற்பத்து மூன்று நாட்களை நிறைவு செய்த ஜெயசிக்குறு நடவடிக்கையை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக இராணுவத்தைவிட்டு விலகிச் சென்றோரையும் தலைமறைவாகியோரையும் மீண்டும் சேவைக்குத் திரும்புமாறு வருந்தி அழைக்கும் நிலைமைக்கு சந்திரிகாவைத் தள்ளியது.

இருபத்து ஐயாயிரம் படையினர் பங்குபற்றும் இந்த இராணுவ நடவடிக்கை, ஆசியாவின் சரித்திரத்திலேயே முக்கியத்துவம் வாய்ந்த பாரிய நடவடிக்கை என்கிறார் கொழும்பிலுள்ள ஒரு இராணுவ ஆய்வாளர். இந்தப் பாரிய நடவடிக்கையை தன் இலக்கை அடைய விடாமல் ஏழு மாதங்களுக்கு மேலாகத் தடுத்துவரும் புலிகளின் நுண்ணிய, திட்டமிடப்பட்ட, துல்லியமான போராற்றலை *1997.12.04* அன்று மீண்டும் ஒரு முறை உலகச் செய்தி நிறுவனங்கள் பரபரப்புடன் உள்வாங்கிக்கொண்டன.

புதூர் பகுதியிலிருந்து கனகராயன் குளம் நோக்கியும் மன்னகுளம் நோக்கியும் இரு முனைகளில் முன்னேற முயன்ற சிறீலங்காப் படைகளைத் தடுத்தும், ஊடுருவியும் விடுதலைப் புலிகள் போரிட்டனர். அமெரிக்காவின் 'கிரீன் பரற்'றிடம் பயிற்சி பெற்ற சிறப்புப் படையணியினர் உட்பட ஏறத்தாழ முந்நூறு படையினர் கொல்லப்பட்டனர். லெப். கேணல் நிலாந்த லக்மல் சிறிமானவும் கொல்லப்பட்ட படையினருள் அடங்குவர். நாநூறுக்கும் அதிகமானோர் காயமடைந்தனர். விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட நூற்று முப்பத்து மூன்று இராணுவத்தினரின் சடலங்களுள் நல்ல நிலையில் இருந்த நாற்பத்து மூன்று சடலங்கள் அனைத்துலகச் செஞ்சிலுவைச் சங்கம் மூலம் சிறீலங்கா அரசிடம் ஒப்படைக்கப்பட்டன.

மேஜர் பாலா, கப்டன் சுதா, கப்டன் கேதுசா, கப்டன் எழிலரசன், கப்டன் வண்ணன், கப்டன் சாண்டில்யன் உட்பட முப்பத்தியேழு விடுதலைப் புலிகள் இத் தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

படையினரிடமிருந்து முப்பத்து மூன்று AKLMG, ஐந்து GPMG, மூன்று LMG உட்பட ஏராளமான ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இதற்கு முன்னர் *1997.10.05* அன்று கரப்புக்குத்தி சந்தி, விஞ்ஞானகுளம் சந்தி ஆகிய இடங்களில் அமைந்திருந்த இராணுவ விநியோக மையங்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்கியதைத் தொடர்ந்து நடந்த ஐந்து நாள் சண்டையில் ஒரு டாங்கி அழிக்கப்பட்டு, பத்துக்கோடி ரூபா பெறுமதியான இராணுவ வாகனங்களும் இராணவத் தளபாடங்களும் கைப்பற்றப்பட்டதுடன் ஐநூறுக்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டனர்.

மேஜர் மீனாட்சி, மேஜர் ரமேஷ்காந், மேஜர் இரும்பொறை, மேஜர் அன்பழகன், கப்டன் மீனா, கப்டன் வளர்மதி, கப்டன் இளமுகி உட்பட நூற்று அறுபத்திரண்டு புலி வீரர்கள் வீரச்சாவடைந்த இந்தச் சண்டையின் பின், புதூரில் இருந்து முன்னேற முயன்ற இராணுவத்தினரை மறித்து புலிகள் நடாத்திய பாரிய தாக்குதல் ஜெயசிக்குறுவின் முடிவுக் காலம் பற்றிய கேள்வியைப் பூதாகாரமாக எழுப்பியுள்ளது.

ஆறாயிரம் புலிகளில் இரண்டாயிரம் இறந்துபோக, மூவாயிரத்து ஐநூறு காயமடைய, மீதி ஐநூறுபேர் கொண்ட சிறு குழு எனவும், நரிகள் எனவும் களத்தில் போரிடும் விடுதலைப் புலிகளை இன்னமும் குறைமதிப்பீடு செய்து கொண்டிருக்கிறது சிறீலங்கா அரசு.

"சிறீலங்கா இராணுவம் யாருடன் சண்டையிடுகிறது? பாசிச கெரில்லாப் படையுடனா? தமிழ் இராணுவத்துடனா?" என்று வினா எழுப்பியது ஒரு கொழும்புப் பத்திரிகை.

"நீங்கள் எந்தப் பெயரிட்டும் அழைக்கலாம். சிறீலங்கா இராணுவம் சண்டை செய்வது ஓர் திறமையான பயிற்சி பெற்ற, ஈகமும் இலக்குறுதியும் கொண்ட அமைப்புடன். உலகிலுள்ள எல்லாக் கிளர்ச்சி அமைப்புகளிலும் தலைசிறந்தது எனச் சொல்லப்படக் கூடியது அந்த அமைப்பு. இது முற்றிலும் உண்மை" என்று பதிலளித்தார் முன்னாள் இந்தியப் படை அதிகாரியான





www.tamileelamarchive.com

A.S. கல்கத் அவர்கள்.

இது சிறீலங்காப் படைகளின் உயர் அதிகாரிகளுக்கோ, மேலாளர்களுக்கோ, அரசுக்கோ தெரியாத புது விடயமல்ல. தெரிந்தும் ஏன் ஜெயசிக்குறு முடியும் கால எல்லை இதோ, அதோ என்று அறிக்கை விடுகின்றனர்.

விரைவில் போரை தம்மால் வெல்ல முடியும் என்ற நம்பிக்கையைத் தர ஏன் முயலுகின்றனர்?

அநீதியான இந்தப் போரால் நாடு சீரழிகிறது என்ற உண்மையை அரசு உணர்ந்து விட்டதாலா? அல்லது மக்களுக்கு அமைதியும் நிம்மதியும் நிறைந்த வாழ்வைத் தர விரும்புவதாலா?

நிச்சயமாக இல்லை.

அரசியல் தீர்வுப் பொதி என்ற காற்றுப்போன பலூனை விரைவில் பாராளுமன்றத்திற்கு கொண்டுவரவே அரசு அவசரப்படுகிறது.

"சந்திரிகாவின் தீர்வுப் பொதி தமிழரின் தேசிய அபிலாசைகள் எதையும் தொட்டு நிற்கவில்லை. காலத்துக்குக் காலம் தேய்ந்து, தேய்ந்து உள்ளடக்கம் உருக்குலைந்து வரும் இத்தீர்வுத் திட்டம் இரண்டரை வருடங்களாக இழுபட்டு இன்னும் முழுமை பெறவில்லை. எனினும், இத்திட்டத்தின் நோக்கம் தெளிவாகத் தெரிகின்றது. தமிழரின் தேசிய தனித்துவத்தையும்; தாயகத்தையும் மறுதலித்து, தமிழர் தேசத்தைச் சிங்கள இறையாட்சியின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவருவதுதான் இதன் குறிக்கோள். இராணுவத் தீர்வின் நோக்கமும் இதுதான். எனவே சந்திரிகாவின் அரசியற் பொதியும் இராணுவத் திட்டமும் ஒரே நாணயத்தின் இரு முகங்களாகவே எமக்குத் தெரிகின்றது" என்று அரசின் முகமூடிகளைக் கிழித்தெறிகிறார் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்.

காலத்துக்குக் காலம் நாற்காலியில் மாறி மாறி அமரும் சிங்கள பேரினவாதிகள் தமிழ் மக்களை ஒடுக்கி இல்லா தொழிப்பதற்கான போரை முன்னெடுப்பதில் எந்த தயக்கமும் காட்டுவதில்லை.

கடைசியில் நாற்காலியில் வந்தமர்ந்திருக்கும் சந்திரிகா அம்மையார் சுவைத்துச் சாப்பிட்ட சமாதானப்புறா இந்நேரம் சமிபாடடைந்து, மூலக்கூறுகளாகப் பிரிந்து, அம்மையாரின் உடலுக்கு வலுவேற்றியிருக்கும்.

தெருவோரங்களிலும், ஆற்றங்கரைகளிலும், வீடுகளிலும், களுத்துறைச்சிறையிலும் கொல்லப்பட்ட தமிழரின் உடல்களின் மேல் சந்திரிகா அம்மையார் ஏறி நின்று இரத்தமும், தசையும் தோய்ந்த தன் கைகளால் சிறீலங்கா சுதந்திரம் பெற்ற ஐம்பதாவது ஆண்டில் சிங்கக் கொடியை ஏற்றட்டும். மேலே காற்றில் பறக்கும் கொடியிலிருக்கும் சிங்கத்தின் தூக்கிய காலிலுள்ள வாளின் நுனியிலிருந்து சொட்டும் தமிழரின் இரத்தம் இந்த நாட்டில் புதிய வரலாற்றை எழுதும் செயலுறுதியை எமக்குத் தரும்.

★

## நீதியைக் களங்கப்படுத்தும் சிறீலங்காவின் நீதியாளர்கள்

- கபுரா -

சிறீலங்காவின் நீதித்துறை கேலிக்கிடமாகிய விடயம் ஏற்கனவே தெரிந்ததொரு விடயம்.

நடிகர் கமல் அத்த ஆராய்ச்சியின் விடயம் தொடர்பாக முன்னாள் நீதிபதியொருவர் லஞ்சம் பெற்று நடிகருக்கு அனுசரணையாகத் தீர்ப்பு வழங்கிவிட்டு நாட்டைவிட்டே அவுஸ்திரேலியாவுக்கு ஓடியது இன்று நாடு பூராவும் வெளிச்சத்துக்கு வந்த ஒரு விடயம்.

மாஹோ நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்ட நபர் ஒருவரின் மனைவி தன் கணவனின் விடுதலைக்காக அந் நீதவானின் ஆலோசனை பெறச் சென்ற போது பாலியல் வல்லுறவுக்கு உட்பட்ட சம்பவத்தை பத்திரிகைகள் வெளிச்சத்துக்குக் கொண்டுவரத் தயங்கியபோது ராவய சிங்கள வார இதழ் இவ்விடயத்தை நாட்டுக்கு அம்பலப் படுத்தியுள்ளது.

மாஹோ மாவட்ட நீதவானான லெனின் பண்டார நாயக்கா தனது நீதிமன்றத்தில் விசாரணைக்காக வந்த வழக்கொன்றில் குற்றவாளியின் மனைவியை ஆலோசனை கூறுகிறேன் என்ற போர்வையில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியது பற்றி சுதந்திரப் பத்திரிகையாளர் சங்கத்தின் பிரதிநிதி சீத்தா ரஞ்சனி எழுப்பிய எழுச்சிக் குரல் காரணமாக இன்று 1997 ஏப்ரல் 31–ம் திகதி ஒரு அப்பாவிப் பெண்ணை நீதித்துறையையே களங்கப்படுத்தும் வண்ணம் அதில் பொறுப்புள்ள ஒரு நீதிவானால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட விடயம் அம்பலத்துக்கு வந்துள்ளது எனலாம்.

இச் சம்பவம் தொடர்பாக ராவய வார இதழ் ஆதாரங்களுடன், சாட்சியங்களுடன் இவ்விடயத்தை அம்பலத்துக்குக் கொண்டு வந்தும் இந்நீதவானைக் காப்பாற்றுவதற்கு பொலிசார், நீதித்துறையைச் சார்ந்தவர்கள், பாலியல் வல்லுறவுக்கு உட்பட்ட பெண்ணின் கணவனுக்காக ஆஜராகிய வழக்கறிஞர்கள் கூட நீதவானைக் காப்பாற்றவே முற்பட்டுள்ளனர் எனலாம்.

இது பற்றிக் கருத்துத் தெரிவித்த சுதந்திரப் பத்திரிகையாளர் சங்கப் பிரதிநிதி சீத்தா ரஞ்சனி இது பற்றிக் கூறுகையில் புகார் செய்யப்பட்ட பொலிஸ் அதிகாரிகளின் விபரம் மற்றும் சாட்சிகளின் விபரம் எம்மிடம் உள்ளது. ஆயினும், இது பற்றி சுதந்திரமான விசாரணை நடைபெற வேண்டும் என நீதி நிர்வாகத்துறை அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்ட கடிதம் பற்றி இது வரை எதுவித பதிலும் கிடைக்கவில்லை.

நீதி நிர்வாகத் துறைக்குப் பொறுப்பான செயலாளரான ஒரு நீதவான் இது தொடர்பாக எதுவித கடிதமும் தமக்குக் கிடைக்கவில்லையெனக் கூறியுள்ளதுதான் பொய்யின் மகுடமெனக் கூறக் கூடியதாக அமைந்துள்ளது. ஏனெனில், இவ்வகையான கடிதங்கள் பதிவுத் தபாலிலேயே அனுப்பப்படுவது வழக்கமாகும்.

ஆயினும், அவர்கள் அறிவித்த பதில் இதைப்பற்றி தீவிர விசாரணை நடத்தினோம். ஆயினும், இக்குற்றம் நடைபெற்றதா? என்பது குறித்து கண்டுபிடிக்க முடியாமல் உள்ளது எனக் கூறியுள்ளனர்.

97–ம் ஜூன் மாதத்தில் கிளப்பப்பட்ட இக்குற்றச்சாட்டானது பற்றி இன்னும் கண்டு பிடிக்க முடியாமல் உள்ளது தான் எம்மால் ஜீரணிக்க முடியாமல் உள்ளது என சீத்தா ரஞ்சனி கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

சிறீலங்காவில் நீதித்துறையும், பொலிஸ்துறையும் நேர்மையாக செயற்படவில்லை. நீதவான்களே பெண்களைப் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கும் போது, தமிழீழத்தில் அன்றாடம் சிங்கள இராணுவத்தால் பாலியல் வல்லுறவுக்குள்ளாகும் தமிழீழப் பெண்களுக்கு எங்கே நீதி கிடைக்கப்போகின்றது?

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



அச்சுப்பதிப்பு வாசன் அச்சகம் 0181 - 646 2885

www.tamileelamarchive.com